விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 21 ஞாயிற்றுக்கிழமை (03.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 167



ராம்கோ RAMCO

MADRAS CEMENTS LTD


RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்

100 வீத சாதாரண போட்லான்

சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


## யாழ்ப்பாண மத்திய கல்லூரி நீச்சல் தடாகத்தில் மூழ்கி வவுனியா மாணவன் பலி-அதிகாலை வேளை துயரம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலுள்ள நீச்சல்தடாகத்தில் மூழ்கி வவுனியாவைச் சேர்ந்த யோகேஸ்வரன் கிரிதரன் (வயது 15) என்ற மாணவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

இந்த துயரச் சம்பவம் நேற்று சனிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மாகாண மட்ட நாடகப் போட்டியில் பங்குபற்றுவதற்காக வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் யாழ். மத்திய கல்லூரிக்கு வருகை தந்துள்ளனர்.

போட்டிகள் நிறைவுறாத காரணத்தால் குறித்த பாடசாலை மாணவர்களும் வேறு சில வெளி மாவட்டத்தை சேர்ந்த பாடசாலை மாணவர்களும் யாழ்.மத்திய கல்லூரியில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் யாருக்கும் தெரியாமல் மூன்று மாணவர்கள் நீச்சல் தடாகத்தில் குளித்து விளையாடிக் கொண்டிருந்துள்ளனர்.

நள்ளிரவுவேளை என்பதால் மாணவர்கள் நீச்சல் தடாகத்தில் குளித்துக் கொண்டிருந்ததை எவரும் அறிந்திருக்கவில்லை.

அத்தோடு நீச்சல் தடாகத்தை சுற்றி ஒளிர்ந்து கொண்டிருந்த மின்குமிழ்கள் அணைக்கப்பட்டு இருந்ததனால் குளித்துக் கொண்டிருந்த மாணவர்களுக்குக்கூட சக மாணவர்களைத் தெரியவில்லை.

இதனாலேயே குறித்த மாண்வன் நீரில் மூழ்கிக் கொண்டிருந்தது ஏனைய மாணவர்களுக்குத் தெரியவில்லை.

அத்தோடு நீச்சல் தடாகத்தில் பாதுகாப்புக்காக போடப்பட்டிருந்த பாதுகாப்பு வேலியைத் தாண்டி தாம் (19ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை மீறல் நீடிப்பதால் சர்வதேச விசாரணை தேவை

## இலங்கை குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை

*(ஜெனிவா),* மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களில் இருந்து இலங்கை மீளாமையே, அந்த நாட்டின் மீது போர்க் குற்றச்சாட்டு விசாரணையை கோருவதற்கான காரணம் என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. தமது அமைப்பு இந்த விசாரணையை கோருவதற்கு இதுவே காரணம் என்று மன்னிப்புச் சபையின் இலங்கை விடயங்களுக்கு பொறுப்பான நிபுணர் யோலண்டா போஸ்டர் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் கோத்தாவும் பீரிஸும் பங்கேற்பு

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் நேற்று ஆரம்பமாகியுள்ள 11-வது ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இறுதி நேரத்தில் கலந்து கொண்டுள்ளார்.

சர்வதேச மூலோபாய கற்கை நெறிக்களுக்கான மையம் ஏற்பாடு செய்துள்ள இந்த இரண்டு நாள் கருத்தரங்கில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கலந்து கொள்ள மாட்டார் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

அதேவேளை, இவருக்கு பதிலாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இம் மாநாட்டில் பங்கேற்கவுள்ளதாக இச் செய்திகள் குறிப்பிட்டிருந்தன.

இந்நிலையில், இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைக் கொண்ட குழு இந்த மாநாட்டில் கலந்து கொண்டது.

ஆசியாவின் மிக முக்கியமான பாதுகாப்பு மாநாடாக (19ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ்,காணி அதிகாரத்தால் நாடு ஒருபோதும் பிளவுபடாது



### அமைச்சர் ராஜித கருத்து

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில் தவறில்லை. இதனால் நாடு பிளவுபடப் போவதில்லை. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பொலிஸ், காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கும்படி நான் வலியுறுத்துவேன்.

எனவே கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும். இவ்வாறு மீன்பிடி நீரியல் வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.


காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கியதால் உலகில் எந்தவொரு நாடும் பிளவுபட்டதாக சரித்திரத்தில் இல்லை. தனிநாடுதான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்ற நிலைப்பாட்டிலிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று சற்று இறங்கிவந்து ஐக்கிய நாட்டுக்குள் அதிகாரப் பரவலாக்கலை ஏற்றுக் கொண்டுள்ளது. இதை நாம் (19ஆம் பக்கம் பார்க்க)

## பள்ளிகளின் விபரங்களை கேட்கிறது குற்றப்புலனாய்வு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள அனைத்து பள்ளிவாசல்கள் மற்றும் மத்ரஸாக்களின் விபரங்களை அவசரமாக ஒப்படைக்கும்படி குற்றப் புலனாய்வுப் (19ஆம் பக்கம் பார்க்க)

## மருதனார்மடத்தில் கோர விபத்து யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் பலி



(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள்-மினி பஸ் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் வீரசிங்கம் ஜெகதீஸ்வரன் (கணித பாட இணைப்பாளர்) சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த கோர விபத்துச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் மருதனார்மடம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளுடன் தெல்லிப்பழையை நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தும் உடுவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் மருதனார்மடம் பகுதியில் வைத்து நேருக்கு நேர் மோதிக் கொண்டது.

திருமண வீட்டுக்கு சென்று வருவதாகக் கூறி யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த போது இந்த கோர விபத்தில் அகப்பட்டு ஆசிரியர் உயிரிழந்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)


உங்களது அனைத்து வகையான பாவனை (Bill, Reload) கட்டணங்களை ஒரே இடத்தில் செலுத்திக் கொள்ளுங்கள்!

Dialog | Sri Lanka Telecom | airtel | etisalat | Sri Lanka Telecom Mobitel We Care. Always. | (CEB) | WESTERN UNION MONEY TRANSFER | HSBC

வெளிநாடுகளில் இருந்து உங்கள் உறவுகளிடம் இருந்து வரும் பணத்தை WESTERN UNION பணப்பரிமாற்ற முறை மூலம் கணப்பொழுதில் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் அனைத்து சேவைகளையும் தாமதம் இன்றி இலகுவாக பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள் அருகில் உள்ள

சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சி அறைகளை

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சுன்னாகம் மானிப்பாய் நெல்லியடி சாவகச்சேரி கிளிநொச்சி சங்கானை

SINGER EXPRESS PAY

# புத்தரின் போதனைகளை பின்பற்றினால் பிரச்சினைகள் தீர்க்கப்படும்-ஜனாதிபதி

(கொழும்பு)

வல்லரசு, பிராந்திய வல்லரசு, பொருளாதார வல்லரசு என்பன போன்ற தமக்கு கொடுக்கப்பட்ட முத்திரைகளின் அடிப்படையில் மற்றவர்களுக்கு போதனை செய்ய சில நாடுகளும் குழுக்களும் முயற்சி செய்து வருகின்றன என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஐ.நா. வெசாக்தின வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புத்தர் பெருமானாரின் போதனைகள் 26 நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்ததைப் போல் இன்றைக்கும் பொருத்தமானவையாக உள்ளன. நவீன உலகின் தலைவர்கள் இந்த ஆலோசனைகளை பின்பற்றுவார்களாயின்



பல உள்ளூர் மற்றும் சர்வதேச பிரச்சினைகள் மனித குலத்திற்கு நன்மையளிக்கும் வகையில் தீர்க்கப்படும் என்றார். (ந-6,11)

# உண்மையைக் கண்டறியவரும் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க மாட்டோம்-மொகான்

(கொழும்பு)

உள்நாட்டு விவகாரம் குறித்து இலங்கையில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு எந்தவொரு நாட்டுக்கும் இடமளிக்க முடியாது என்று முன்னாள் சட்டமா அதிபரும், ஜனாதிபதியின் சட்ட ஆலோசகருமான மொகான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைக்கான பயணத்துக்கு முன்னதாக ஐ.நாவின் உண்மை கண்டறியும் குழு கொழும்பு வருவதற்கான சாத்தியம் உள்ளதா என்பது குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

போருக்குப் பிந்திய நிலைமைகள் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் குறித்து நேரில் கண்டறிய வருமாறு நவநீதம்பிள்ளைக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

ஆனால் எந்தவொரு குழுவுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை. நவநீதம்பிள்ளைக்கு கூட கடந்த ஆண்டு தான் அழைப்பு விடுக்கப்பட்டது.

உண்மையைக் கண்டறியும் நோக்கில் தமது அதிகாரிகள் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்குமாறு நவநீதம்பிள்ளை அரசாங்கத்திடம் கேட்டுள்ளார்.

நவநீதம்பிள்ளை தனது பயணத்துக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கவோ, பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்ளவோ இந்த அதிகாரிகளை அனுப்புவதானால் அதுபற்றி அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ளும்.

அவர்கள் தொழில்நுட்ப உதவிகளை வழங்க விரும்பினால் அரசாங்கத்தின் இணக்கத்துடன் தான் அதைச் செய்ய முடியும். யாரும் வந்து இங்கு விசாரணைகளை நடத்த அனுமதிக்க முடியாது எனவும் மொகான் பீரிஸ் தெரிவித்தார். (ந-6,11)

# இருவேறு சிறுமிகள் மீது அப்பனும், அண்ணனும் வல்லுறவுக் கொடூரம் - வவுனியாவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தந்தையார் தனது மகளினையும் அண்ணன் தனது தங்கையினையும் வன்புணர்வுக்குட்படுத்திய கொடூர சம்பவம் ஒன்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ள போதிலும் குறித்த சம்பவத்தோடு தொடர்புடைய தந்தையினையும், இளைஞரினையும் வவுனியா பொலிஸார் நேற்று முன்தினமே கைது செய்துள்ளனர்.

இக் கொடூர சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் தனது 6 வயதே ஆன பாலகியை தந்தையார் மதுபோதையில் நீண்ட நாட்களாக துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கி வந்துள்ளார்.

இதில் தனக்கு என்ன நடைபெறுகின்றது என்பதை அறியாத குறித்த பாலகி தனது தாயிடம் கூறவே தாயார் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து குறித்த தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் அதே இடத்தினைச் சேர்ந்த மற்றொரு பகுதியில் 15 வயதுடைய சிறுமியை அச் சிறுமியின் அண்ணன் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி வந்துள்ளார்.

குறித்த சம்பவம் ஆரம்பத்தில் வெளிவராத போதும் தற்போது வெளிக்கிளம்பியதனைத் தொடர்ந்து குறித்த இளைஞனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இரு சிறுமிகளும் வவுனியா வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதோடு குறித்த இரு பாதகர்களும் செட்டிக்குளம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ந-4)

# யாழ். மத்திய கல்லூரி சமூகத்தின் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் வீரசிங்கம் ஜெகதீஸ்வரனின் மரணச்சடங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணியளவில் சுன்னாகம் பிரதேச செயலக ஒழுங்கையில் இடம்பெற இருப்பதை முன்னிட்டு சகல ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், சேவைக்கழக உறுப்பினர்கள், இன்ரறக் கழக உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுவதுடன் சாரண உறுப்பினர்கள், பரியோவான் முதல் உதவி படையினர், பாண்ட் வாத்திய குழு உறுப்பினர்கள் அனைவரையும் சீருடையுடன் பாடசாலையில் காலை 9.00 மணிக்கு ஒன்று கூடுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

# தெரிவுக்குழுவுக்கான பிரதிநிதிகள் ரணில் நாடு திரும்பியதும் நியமிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் அரசால் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு தமது பிரதிநிதிகளை நியமிக்கும் நடவடிக்கைகளில் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டு வருகிறது.

தெரிவுக் குழுவில் பங்குகொள்ளும் தமது கட்சியின் பிரதிநிதிகளின் பெயர்ப்பட்டியல், நியூசிலாந்து சென்றுள்ள கட்சித் தலைவர் ரணில் நாடுதிரும்பியவுடன் உறுதிப்படுத்தப்பட்டு உத்தியோகபூர்வமான முறையில் அறிவிக்கப்படுமென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.



நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை இயக்கும் நடவடிக்கைகள் இழுபறி நிலையில் உள்ளன. இதனை இயக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பங்களிப்பு அவசியமென அரசு தெரிவித்திருந்தது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் எதிர்க் கட்சிகள் அங்கம் வகிக்க வேண்டுமெனில் அரசு அதன் நம்பகத் தன்மை, உண்மைத்தன்மைகளை உறுதிசெய்து தெரிவுக்குழுவுக்கான சிறந்ததொரு சூழலை உருவாக்க வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி வேண்டுகோள் விடுத்திருந்தது.

அது மட்டுமல்லாது, தெரிவுக் குழு அமர்வுக்கு சமாந்தரமாக அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டியது அவசியம் எனவும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் விக்கிரமசிங்க வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-6,11)

# குருமண்காடு காளிகோயில் தேர்த்திருவிழா இன்று இரவு

(பூந்தோட்டம்)

வவுனியா குருமண்காடு காளி கோவிலில் இன்று மாலை சப்பரத் திருவிழாவும் இரவு 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஆலயத்தின் அருகில் இடம்பெற்ற மரண நிகழ்வு காரணமாக நேற்று இடம்பெறவிருந்த சப்பர திருவிழாவினை நடத்த முடியாது போனதன் காரணமாக இன்று இரு திருவிழாக்களையும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ந-266)


விழித்தெழு மானிடா

உங்கள் வாழ்க்கைப்பயணம் எங்கே போகிறது.......?

உங்களின் வாழ்க்கையில் புதியதொரு மாற்றம் ஏதேனும் எதிர்பார்க்கின்றீர்களா ?

எம்முடன் இணையுங்கள்!

வாழ்க்கை அபிவிருத்தி மற்றும் பொருளாதார பிரச்சினைக்கான தீர்வு இவை சம்பந்தமான விழிப்பூட்டும் நிகழ்ச்சியொன்று நடைபெறவுள்ளது

எனவே தாங்களும் பங்கு பற்றி நன்மை அடையுங்கள்

20 - 50 வயதுக்கு இடைப்பட்டோர் பங்குபற்றவும்

இடம் : ராஜா கிறீம் ஹவுஸ், இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்

காலம் : 03.06.2012

நேரம் : 8.30 a.m

தொடர்பு : 077 7574100, 075 0394649

இந் நிகழ்ச்சியினை ஒழுங்கு செய்து நடத்துபவர்கள் Best Life The Trusted Network



உ

ஓம் சக்தி



தீமிதிப்பு

கந்தர்மடம் அரசடி வீதி

அருள்மிகு

செல்வநாகபூஷணி அம்பாள் திருக்கோயில்

வைகாசி விசாக திருநாளில் 03.06.2012 ஞாயிற்றுக்கிழமை

நந்தன வருடம் வைகாசி திங்கள் 21ம் நாள்

அம்பிகை அடியார்களே!

அடியார்களின் துயர் துன்பங்கள், நோய் பிணி நீங்கவும், நாட்டில் அமைதி வேண்டியும் செல்வநாகபூசணி அம்பாள் உபாசகரும், தொண்டரும் அவரின் ஆசியைப் பெற்ற தொண்டர்களும் வைகாசி விசாக திருநாளில் அம்பாளின் முன்னிலையில் தீ மிதிக்கவுள்ளார்கள். அடியார்களும் அதில் பங்குபற்றி அருளைப் பெற்றுய்யும்படி வேண்டுகின்றோம்.

நிகழ்ச்சி

- காலை 8.30 மணிக்கு பூசை தொடர்ந்து பொங்கல் ஆரம்பம், தீ மூட்டுதல் நடைபெறும்.
- மாலை 4.00 மணிக்கு பூசை, தொடர்ந்து அம்பாள் வெளி வீதி வந்து தீ மிதித்தல் நடைபெறும்.

பின் அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெற்று பூசை நடைபெறும்

- மறுநாள் 04.06.2012 திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு பொங்கல், அம்பாள் வீதி உலா வருதல் நடைபெறும்.

குறிப்பு : அடியார்கள் அம்பாளின் தீ மிதிப்புக்கு தங்களால் இயன்ற விறகு, பால், தயிர், இளநீர் முதலிய பொருளுதவியும் வழங்கி பங்கு பற்றி அவள் அருளைப் பெற்றுய்யும் படி வேண்டுகின்றோம்.

அம்பாள் அடியார்களும், ஆலய தர்மகர்த்தாவும்.



விற்பனை முகவர்கள் தேவை

குடிநீர் போத்தல்கள், பழச்சாறு போத்தல்கள், சோயாமீற், நூடில்ஸ், சோஸ், வேபர்ஸ் ஸ்டிக், ஜாம் கப், ஜிஜிப்ஸ் மேலும் பல பொருட்களை உற்பத்தி செய்யும் கம்பனிக்கு யாழ்ப்பாணம் , கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களுக்கு விற்பனை முகவர்கள் தேவை.

மேலதிக விபரங்களுக்கு:

SEELAN FOOD AND BEVERAGES (PVT) LTD

NO.328/2 HIGH LEVEL ROAD,

MAKUMBARA, PANNIPITIYA.

E-MAIL:SEELANFOODS@GMAIL.COM

0114343909-910, 0770600420

(8558)



ஒறிபிளேம் கிளிநொச்சி நகரில் இலவச அழகுக்கலை பயிற்சி

உங்கள் கனவுகளை நனவாக்க உங்களுடன் இணைகின்றது.

இலவச அழகுக்கலை பயிற்சியினால் பல அழகுக்கலை ஆலோசகர்களையும் சுயாதீன முகாமையாளர்களையும் உருவாக்கி வெற்றியடையச் செய்த சுவீடன் நாட்டு ஒறிபிளேம் (Oriflame) நிறுவனம் மீண்டும் கிளி நொச்சியில் இலவச அழகுக் கலை பயிற்சியை ஆரம்பிக்கவுள்ளது. Facial, Gold facial, Pedicure, Manucure, Threading, Hair Style, Bridal Make up.... என அனைத்து பயிற்சி நெறிகளும் செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.

(வீட்டில் இருந்தவாறே பொழுதுபோக்கு நேரத்தில் மேலதிக வருமானமாக 12000/- மேல் உழைப்பதற்கான வழிகாட்டலும் வழங்கப்படும்.)

பயிற்சியில் இணைய விரும்புவோர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும். அங்கத்துவப் பணம் 590/- செலுத்தி இணைந்து கொள்ளலாம்.

காலம் : 03.06.2012 நேரம் : 1.00 மணி

இடம் : கிளி. மத்திய கல்லூரி

தொடர்புகளுக்கு : 0770784428

(C-143)

எதிர்காலம் உங்கள் கையில்

## சைவ சன்மார்க்க வித்தியின் பரிசளிப்பு விழா இன்று

யாழ்.ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் செல்வி பிரதா நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், சிறப்பு விருந்திராக வலிகாமம் கல்வி வலய மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

விழா ஆசியுரையினை சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் முத்தமிழ் குருமணி சிவ ஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்களும் பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியாரும் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய ஆசிரியையுமான திருமதி பத்மராணி யோகநாதன் வழங்குவார். (அ-7)

## 20 நடமாடும் உணவகங்களில் 7 உணவகங்கள் மட்டும் 'ஏ' தரத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை சுகாதாரப் பிரிவினரால் நடமாடும் உணவு விற்பனை நிலையங்கள் தரக்கணிப்பீட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்ட கணிப்பீடுகளை யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் அ.எ. ஞானஜோதி தெரிவித்துள்ளார்.

மேற்கூறப்பட்ட நடமாடும் வியாபார நிலையங்களில் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் 20 நடமாடும் உணவகங்கள் அடங்குகின்றன.

அவற்றில் ஏழு ஏ(A) தரத்திலும் பதின்மூன்று பி (B) தரத்திலும் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவற்றின் தரத்தினை மேம்படுத்துவதற்கு சுகாதாரப் பரிசோதகர் குழு இரவு நேரப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன்போது அடுப்பு பாவனை, வண்டிகளின் சுகாதார நிலை மேம்பாடு, உணவு கையாள்பவர்களின் மருத்துவ அத்தாட்சிப் பத்திரம், உற்பத்தி நிலையங்களின் சுகாதார நிலை, தனிநபர் சுகாதாரம் போன்றன கவனத்திற் கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் விற்பனை செய்யப்படும் இடம், பொதுச்சுகாதாரப் பகுதியினரின் சிபார்சிற்கமைவானதாகவும் இருத்தல் வேண்டும்.

இவ் இரவு நேரப் பரீட்சையில் நடமாடும் உணவகங்களும் வெதுப்பகங்களும் கவனத்திற் கொள்ளப்பட்டு பரீட்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே, உணவு கையாளும் நிலைய உரிமையாளர்கள் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களின் அறிவுரைகளுக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும் எனவும் அவ்வாறு செய்யத் தவறின் சுகாதாரமற்ற உணவைக் கைப்பற்றி அழிக்கப்படுவதுடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளுக்கு உள்ளாக நேரிடலாம் எனவும் சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (அ-7)

## குடத்தனையில் மணல் ஏற்றும் உழவியந்திர உரிமையாளர்களுடனான கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு குடத்தனையில் மணல் ஓட்டத்தில் ஈடுபடும் உழவு இயந்திரங்களுக்கு மணல் ஓட்டம் சமமாக வழங்கப்படுவதாகவும் அவர்களுக்கு கொடுப்பவுகளை குறித்த திகதியில் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

குடத்தனை மணல் ஏற்றும் நிலையத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலிலே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் மகேஸ்வரி நிதியத்தின் இணைப்பாளர் த.ரஜீவ் உழவு இயந்திர உரிமையாளர்களின் அபிப்பிராயங்கள் மற்றும் தேவைகள், குறைபாடுகளைக் கேட்டறிந்து மணல் ஏற்றும் உழவு இயந்திர உரிமையாளர்கள் மாதாந்தம் சம அளவு வருமானம் ஈட்டும் செயற்றிட்டத்தினையும் வழங்கினார்.

அத்துடன் மணல் ஏற்றும் சேவையில் ஈடுபடும் உழவு இயந்திர உரிமையாளர்களின் தேவைகள், குறைகள் இனங்காணப்பட்டு அதற்கு உழவு இயந்திர உரிமையாளர்களின் சம்மதத்தின் பேரிலேயே உடனடியாகத் தீர்வுகள் காணப்பட்டன.

மணல் ஏற்றிச் செல்லும் புதிய நடைமுறைகள் சம்பந்தமாகவும் விளக்கமளிக்கப்பட்டது.இந்நிழ்வில் மகேஸ்வரி நிதியத்தின் உத்தி யோகத்தர்களான ஆர்.நிரோஷானந்த், கி.கௌரி மற்றும் உழவு இயந்திர உரிமையாளர்கள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9-10)

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழத்தினால் நடத்தப்படும் அமரர் பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரனின் நினைவுப் பேருரை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு ஜதராபாத் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும் பௌதீகவியல் பேராசிரியருமான இராமகிருஸ்ணா இராமசாமி குழப்பம்: ஓர் இடை நிலை இராச்சியம் எனும் தலைப்பில் நினைவுப் பேருரையை ஆற்றவுள்ளார். (அ-2)

## வாரம் ஒரு தகவல்

## ஆழ்நிலை தியானம்!

"இவர் எவ்வளவு நேரமாக இப்படி கண்ணை மூடிக்கொண்டு அசையாமல் இருக்கின்றார்?"

"நான் இங்கே வந்ததிலிருந்து..."

"நீங்கள் இங்கே வந்து எவ்வளவு நேரம் ஆகிவிட்டது?"

"நான்கு மணி நேரம் கடந்து விட்டது!"

"எப்பொழுது கண்ணைத் திறப்பார்?"

"அது தெரியவில்லை!"

"இந்த ஆழ்நிலைத் தியானம், இதைப்பற்றி அமெரிக்க ஆயுர்வேதப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் தீபக் சோப்ரா என்ன சொல்கின்றார் தெரியுமா?"

"என்ன சொல்கின்றார்?"

"இப்படி தியானம் செய்வதன்மூலமாக இதயத்தில் தாக்குதல் ஏற்படுகின்ற அபாயத்தை தவிர்க்க முடியும் என்று கூறுகின்றார்!"

"அது எப்படி முடியும்?"

"ஆழ்நிலைத் தியானமானது அதிகளவு கொழுப்பைக் கரைத்து விடுகின்றதாம்! அத்துடன் தூய்மையான ஒட்சிசன் இதயத் தசைக்குச் சென்றடைவதற்கும் உதவி செய்கின்றதாம்! இதனாலே மார்பு வலி தவிர்க்கப்படுகின்றது. மாரடைப்பு (ஹார்ட் அட்டாக்) ஏற்படுகின்ற அபாயமும் தவிர்க்கப்படுகின்றது"

"அப்படியா?"

"ஆமாம்! ஆனால் ஒன்று... தியானத்தின் உச்சக்கட்டத்தை அடைகின்ற போதுதான் உடலளவிலே ஏற்படுகின்ற சௌகரியம்" தெரியும் என்றார்.

"ஓ...! அதனாலேதான் இவ்வளவு ஆர்வமாக இவரைத் தேடி வந்திருக்கின்றீர்களா?"

"ஆமாம். அதை இவரிடமிருந்து கற்றுக் கொள்ளலாம் என்ற ஒரு ஆசைதான். ஆனால், இவர் இப்போதைக்குக் கண்ணைத் திறக்கமாட்டார் போல இருக்கின்றது!"

"நான் இங்கே வந்த சமயத்திலே தியானம் செய்ய ஆரம்பித்தவர்... நான் எழுந்து இந்த இடத்தை விட்டுச் சென்ற பின்னர்தான் தியானத்தை முடிப்பார் போலுள்ளது என நினைக்கின்றேன்!"

"அப்படி என்றால்... நீங்கள்...?"

"இவர் குடியிருக்கின்ற வீட்டிற்குச் சொந்தக்காரன். வீட்டு வாடகையை வசூல் செய்ய வந்திருக்கின்றேன்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

03.06.2012
(வைகாசி 21, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 7.41 மணிவரை
விசாகம் பிற்பகல் 1.06 மணிவரை
இராகுகாலம் 4.22-5.22 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
வைகாசி விசாகம்

**மேடம்** குழப்பங்கள் தீர கதிரவனை வழிபட வேண்டிய நாள், உற்றார்,உறவினர்கள் வழியில் சுப விரயங்கள் அதிகரிக்கலாம், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.,

**இடபம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அதிர்ஷ்டகரமான நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும், முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்** கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் தோன்றும், செய்தொழிலை விருத்தி செய்ய நடவடிக்கை எடுப்பீர்கள்.

**கடகம்** விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள், தொழிலில் பங்காளிகளுடன் ஏற்பட்ட பகை அகலும், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட்டு சிறப்படைய வேண்டிய நாள், தாய் வழி உறவில் அனுகூலமுண்டு, கல்வியில் நாட்டம் காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** எடுத்த செயலை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், உடன் பிறப்புக்கள் கூட உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம்.

**துலாம்** எதிர்பாராத வகையில் தனவரவுகள் கிடைக்கப் பெறலாம், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பால் பொருட் சேர்க்கையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்** பயணத்தால் பலன் கிடைக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், பணவரவு திருப்தி தரும், கற்பனைகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, உறவினரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள்.

**தனுசு** செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்களால் அமைதி குறையலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்,வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், தொழில் முன்னேற்றமுண்டு,நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும், புதிய பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள்


**மீனம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், வழிபாட்டால் முன்னேற்றமுண்டு.

வளவன்


## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 100 | 50 |
| உருளைக்கிழங்கு | 90 | 80-100 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 60 | 100 |
| தக்காளி | 120 | 170 | 110 | 140 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 30 | 40 |
| கோவா | 60 | 70 | 60 | 70 |
| கரட் | 90 | 120 | 70 | 120 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 |
| புடோல் | 45-50 | 60 | 40 | 80 |
| வாழைக்காய் | 30 | 20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 100-160 | 90 | 80-140 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 70 | 90 |
| பாகற்காய் | 120 | 160 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 90 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 | 100 |
| பயற்றங்காய் | 150 | 160 | 100 | 100 |
| லீக்ஸ் | 120 | 140 | 150 | 160 |
| பீற்றூட் | 80 | 100 | 70 | 120 |
| கறிமிளகாய் | 100 | 110 | 100 | 80-160 |
| முருங்கைக்காய் | 250-300 | 300 | 200 | 260 |
| போஞ்சி | -- | 140 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 100 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 | 25 | 10 |
| தேசிக்காய் | 130 | 80 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 30 | 20 | 16-20 |

# மானிப்பாய் - சுதுமலை
# ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான
# தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் - 03.06.2012



## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



உலகமெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதிபரா சக்தியாகவும் எம்பெருமானுடைய அருட்சக்தியாகவும் விளங்குகின்ற அன்னை சுதுமலையிலே ஸ்ரீ புவனேஸ்வரி அம்மையாக அருள் பாலிக்கின்றாள். அந்த அருட் தாய்க்கு இன்று ரதோற்சவம்.

அன்னைக்கு அன்னையாகவும் தாய்க்குத் தாயாகவும் உலக ஜீவராசிகளுக்கெல்லாம் அருள் சுரக்கும் ஸ்ரீ புவனேஸ்வரி இன்று அழகிய சித்திரத் தேரிலே ஆரோகணித்து அடியார் பெருமக்களுக்கு திருவருள் புரிகின்றார். அந்த அருள்மிகு அம்பிகையின் இன்னருள் சகலருக்கும் கிடைக்க வேண்டுமென்று நல்லைக்குருமணியின் பாதபங்கஜம் பணிந்து புவனேஸ்வரி திருவடி வணங்கி அருளாசி நல்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இன்றைய ரதோற்சவம் சிறப்புற்றுத் திகழ்ந்து அம்பிகையின் திருவருள் அகிலமெங்கும் பரவி ஈழம் வாழ் மக்கள் அனைவருமே ஆனந்தமாய் வாழ வேண்டுமென்று உளமார வாழ்த்தி அருளாசி நல்கி வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன குரு முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதினம்,
யாழ்ப்பாணம்.

## தர்மகர்த்தா சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



சுதுமலை கிராமத்தில் புராதனமும் அற்புதமும் நிறைந்த எங்கள் சுதுமலை புவனேஸ்வரி அம்பிகையை நம்பிக்கையோடு பூசித்து வருவதால் பல்வேறு துன்பங்களில் இருந்தும் காப்பாற்றி வருவதையும் அம்பாள் அடியவர்களுக்கு பல நிலைகளில் நின்று பல்வேறு அனுபவங்களை அவ்வப்போது பெற்று அம்பிகையின் அருட்காட்சியை பெற்றிருப்பது வியக்கத்தக்கது. அம்பிகையின் திருவருளினால் ஆலயப் பணிகள் சிறப்பாக செய்வதற்கும் அம்பாள் எம்மை நன்கு வழிநடத்தி எமது அம்பிகை அடியார்களின் ஆர்வத்திலும் தாமே முன்வந்து திருப்பணி முடிப்பதற்கு உதவிகள் நல்கி மிக சிறப்பாக நடந்து கொண்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

இதனால் பல திருப்பணிகள் நிறைவேறியுள்ள நிலையிலும் சிறப்பாக ஆலயத்திற்கென அன்னதான, கல்யாண மண்டபம், தீர்த்தம் ஆடுவதற்கு திருக்கேணி, பரிவார மூர்த்திகளுக்கு மூன்று சித்திரத் தேர், கைலாச வாகனம், மஞ்சம் என்பன நிறைவேறியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. இதன்மூலம் எமது கிராமத்தில் சமயம் மட்டுமல்லாது கலை, கலாசாரம் வளர்ந்து செல்வதை காணக்கூடியதாக உள்ளது. அடுத்த வருடம் கும்பாபிஷேகம் செய்ய நிச்சயித்திருப்பதால் மேலும் அம்பிகை அடியார்களின் உதவியும் சமய முன்னேற்றத்திற்கான சரியான பாதையை அமைப்பதற்கு வழி வகுக்கும் என வேண்டி உங்கள் அனைவருக்கும் சகல செல்வங்களும் சௌபாக்கியங்களும் கிடைக்க சர்வ அலங்கார ரூபியாக தேரேறி வரும் அம்பாளை வணங்கி வாழ்த்தி வேண்டிக் கொள்கின்றேன்.

வைத்திய கலாநிதி ஆ.சிவபாதம்,
சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான
பரம்பரை அறங்காவலர், தர்மகர்த்தா சபைத் தலைவர்.

## 300 வருட பழைமையுள்ள ஆலயம்

யாழ்ப்பாண நகரின் வடபால் நான்கு மைல் தூரத்தில் உள்ளது சுதுமலை. இதனை சுதுவையம்பதி, சுதுவை நகர் சுதுகிரி என்றும் அழைப்பதுண்டு. குளம் சூழ்ந்த வயல்களும் வான் பயிர்களும் செய் பயிர்களும் வேம்பு, அரசு, ஆல், மகிழ், மருது, கடம்பு போன்ற சோலை விருட்சங்களும் இக்கிராமத்தை அழகுபடுத்துகின்றன. இக்கிராமத்தின் மையத்திலே ஆகமவிதிகளுக்கமைய கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், தரிசன மண்டபம், ஸ்தம்ப மண்டபம், இராஜகோபுரம் ஆகிய வற்றுடன் புவனேஸ்வரி அம்மை அருள் பாலித்து வருகின்றாள். இவ் ஆலயத்தைச் சூழ சிவன் கோவில், முருகன் கோவில், வைரவர் கோவில் ஆகியனவும் அமைந்து அழகு செய்கின்றன. பழைமை வாய்ந்த இந்த ஆலயம் 1775 ஆம் ஆண்டு மண்ணால் கட்டப்பட்டதாகவும் 1822 ஆம் ஆண்டு கல்லால் கட்டப்பட்டது எனவும் யாழ்ப்பாண கச்சேரிப்பதிவுகள் கூறுகின்றன. இக்காலத்தில் இவ் ஆலயம் பர்வதபத்தினி அம்மன் கோவில் என்று அழைக்கப்பட்டதாகவும் அறிய முடிகிறது. கண்ணகித் தெய்வம் மதுரை நகரை அழித்து அவ்வேகத்துடன் ஈழம் நோக்கி நவாலி களுவோடை ஊடாக இங்கு வந்து தங்கிய தாகக் கருதப்படுகிறது. இதனால் தங்கு சங்கனை எனவும் அழைக்கப்படுகிறது.

கண்ணகி வழிபாட்டைப் போன்றி கண்ணகிக்கு விழா எடுத்து வரும் சமயம் இவ்வூர் அன்பரான கதிர்காமர் வேலாயுதர் எனும் அடியவர் தனது வயலில் உச்சி வேளையில் உழுது கொண்டு நிற்கும் சமயம் பால் போல் நிறமுள்ள நரைத்த மயிர் தொள தொள உடல் வெண்ணிற ஆடை அணிந்தவராக மூதாட்டி ஒருவர் சோலையின் நடு மத்தியிலே நிற்பதை அவதானித்தார்.

உழுது கொண்டு நின்றவர் அம்மூதாட்டியிடம் சென்றார். அம் மூதாட்டி தனக்கு தாகம் அதிகம் எனவும் குடிப்பதற்கு நீர் தேவை எனவும் கூறினார். சிறிது நேரம் தங்கும் படி கூறிவிட்டு தனது வீட்டிற்குச் சென்று இளநீருடன் வந்து பார்த்த பொழுது மூதாட்டியைக் காணவில்லை. எங்கு தேடியும் காணாது மனம் சோர்ந்தார். அன்றிரவே அம்பாள் காட்சி கொடுத்து என்னை இவ்விடத்தில் வைத்து ஆதரிக்கும்படி ஆஞ்சையிட்டு மறைந்தருளினார். அம்பாள் தோற்றமளித்த இடத்தில் அம்பாளை வழிபட்டு வைகாசி மாதத்தில் பொங்கல், குளிர்த்தி, சுளகு மடை படையல் போன்ற நிவேதனப் பொருட்களை வைத்து தேவி வழிபாடு செய்து வந்தனர்.

மலரமைப்பு :- வி.கிரிதரன்
மானிப்பாய்

## ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி



தேரேறி வரும் அன்னைக்கு எங்கள் பலகோடி வணக்கங்கள்.

வரலாற்றுப்புகழ் பெற்றதும் பல அற்புதங்களை செய்து மக்கள் அனைவரையும் பக்தி வெள்ளத்தில் ஈர்த்து, தன்வசப்படுத்தி அருளாட்சி செய்கின்ற சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகையினுடைய தேர்த்தினம் இன்றாகும் . தேர்த்தினமானது மும்மலங்களையும் அழிக்கின்ற பஞ்சகிருத்திய அம்சங்களில் ஒன்றாகும் என்பது திருவிழாக்களில் முக்கிய சிறப்பம்சமாக அமைகின்றது. ஆரம்ப காலத்திலே அம்பாளுக்கு மட்டும் அழகான சித்திரத் தேர் அமைக்கப்பட்டு அம்பாள் தேரில் ஆரோகணித்து வந்ததை நாம் அறிவோம். அதன் பின்னர் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக விநாயகப் பெருமானுக்கும் சித்திரத்தேர் அமைக்கப்பட்டு வந்ததை நாம் தரிசித்தோம். இம்முறை சுப்பிரமணிய சுவாமிக்கும் புதிதாக சித்திரத்தேர் ஓர் அம்பிகை பக்தனால் அமைக்கப்பெற்று இன்றைய தேர்த்தினத்தில் விநாயகர், சுப்பிரமணியர், அம்பாள் முறையே வீதிவலம் வரும் காட்சியை நாம் எல்லோரும் கண்டுகளித்து அம்பிகையின் அருள் பெறுவோமாக.

சர்வே ஜனாஹா சுஹினோ பவந்து
சிவஸ்ரீ.ச.மஹேஸ்வரக்குருக்கள்
பிரதமகுரு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்,
தேவஸ்தானம், சுதுமலை.

## செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி



இயற்கை அழகும் திருவருள் மேன்மையும் மிக்க புண்ணிய பதி சுதுமலை. அத்திருப்பதியில் கோவில் கொண்டுள்ள புவனேஸ்வரி அம்பாளின் அற்புதங்கள் சொல்லில் வடிக்க முடியாது. பலவூர் மக்களும் பக்தியோடு பொங்கிப் படைத்து அம்பாள் தேர் ஏறி வரும் திருக்காட்சியைக் காணக் காத்திருப்பர். தீராத துன்பங்களை விரட்டும் அம்பாளின் அருளால் பல்வேறு நலன்களைப் பெற்ற அடியார்கள் ஏராளம் பேர் உள்நாட்டிலும வெளிநாட்டிலும வாழ்கிறார்கள். அம்பாளின் நிழலுக்கு வந்து விட்டால் பேராறுதல் கிடைக்கும் என்று கருதுகின்ற பக்தர்கள் தினமும் இத்திருக்கோவிலைத் தேடி வருகிறார்கள்.

இவ்வாண்டு அம்பாளுடைய திருக் கோவிலில் முருகப் பெருமானுக்கு புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எல்லாம் வல்ல ஈஸ்வரி திருத்தேரில் பவனி வந்து அடியார்களின் வாழ்வை மேம்படுத்த வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

யாவர்க்குமாம் இன்னுரைதானே
கலாநிதி.ஆறு.திருமுருகன்
தலைவர்
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் ,தெல்லிப்பளை.

## தேர்த் திருவிழா நிகழ்ச்சி நிரல்

காலை 6.00 மணி அபிஷேகம்
காலை 7.30 மணி விஷேட பூஜை
காலை 08.00 மணி ஸ்தம்ப பூஜை
காலை 9.00 மணி வசந்தமண்டப பூஜை
காலை 10.30 மணி தேர்ப்பவனி
மாலை 03.00 மணி பச்சை சாத்தல்


சுந்தர்சன்
பிரதான வீதி
மானிப்பாய்

V.S.M ஸ்ரோர்ஸ்
ஆலடிச்சந்தி
மானிப்பாய்

ஐங்கரன் மோட்டோர்ஸ்
Market View
Manipay.

அம்பாள்ஸ்ரோர்ஸ்
அம்பாள் அரைக்கும் ஆலை
அம்மன் கோவிலடி,
சுதுமலை.

றஞ்சிதா வைத்தியசாலை
சுதுமலை-சங்குவேலி
சிறீ றஞ்சிதா வைத்தியசாலை
அளவெட்டி
ரின் பாக் & ஹெல்த் ஸ்பொட்
சுன்னாகம்

பிறேம் நகைமாடம்
171, பிறேம் பிளாஸா
யாழ்.வீதி
மானிப்பாய்

விநாயகர் பட்டுச் சோலை
அனைத்து ஆடைத்திணிசுகளையும் எண்ணம்போல் தெரிவு செய்திட
ஆலடிச்சந்தி
மானிப்பாய்

PC SYSTEMS
Total IT Solution Providers
Photocopy
printing
Internet Browsing
Skype Call
International & Local Call Centre
Internet Browsing Centre
Cable TV Accessories Sales Centre
Aladi Junction, Jaffna Road, Manipay
Call: (021)-4591525.

யாழு பான்சி
அழகு சாதனப் பொருட்களை
பெற்றுக்கொள்ள
சுதுமலை தாவடிவீதி
மானிப்பாய்

Selva Communication
சுதுமலைமத்தி
மானிப்பாய்

TA Mobil &
கணனி சார் உபகரணங்களையும் உத்தரவாதத்துடனும் மலிவாகவும் பெற்றிடலாம்
No:-Aalady Junction
Manipay
T.P:0212255210

## "நெல்சன் மண்டேலா" வெற்றிக்கிண்ணத்துக்காக சர்வதேச அரங்கில் போட்டியிடும் தமிழீழ அணி

வீவா உலகச் சுற்றுக்கிண்ணப் போட்டியில் தமிழீழம் சார்பாக ஓர் அணி பங்கேற்கவுள்ளது என உலகளாவிய தமிழ் இளையோர் அவை அறிவித்துள்ளது.

சர்வதேச அரங்கில் இடம்பெறும் ஒரு காற்பந்தாட்ட போட்டியான வீவா உலகச் சுற்றுக்கிண்ணப் போட்டி இம்மாதம் எர்பில், குருதிஸ்தான், வட ஈராக் இல் இடம்பெறவுள்ளது.

**FIFA** உலகச் சுற்றுக்கிண்ணப் போட்டியில் அனுமதி பெறாத மற்றும் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகாரம் பெறப்படாத தேசிய இன மக்களுக்காகவே வீவா சுற்றுக்கிணப்ப போட்டி NOUVELLE FEDERATION- BOARD (N.F.BOARD) ஆல் நடத்தப்படுகிறது.

காற்பந்தாட்டத்தில் தங்கள் திறமைகளை தமிழீழ விளையாட்டு வீரர்கள் புலம்பெயர் நாடுகளில் வெளிப்படுத்தியுள்ளனர். வீவா உலகச் சுற்றுக்கிண்ணப் போட்டியில் கலந்து கொள்வதன் மூலம் இவர்களுக்கு தாங்கள் தமிழீழத்தைச் சேர்ந்த காற்பந்தாட்ட வீரர் என்னும் அங்கீகாரமும் கிடைக்கும்.

இவ்வாண்டு வீவா சுற்றுக்கிண்ணப் போட்டியில் தமிழீழம், டாம்பூர், இராக்கி குருதிஸ்தான், வட சைபிரசு, ரேடியா, ஒக்சிரான்ரியா, புரோவென்சு, மேற்கு சகாரா மற்றும் சான்சிபார் ஆகிய ஒன்பது அணிகள் மோதவுள்ளன. இவ்வணிகள் நெல்சன் மண்டேலா வெற்றிக் கிண்ணத்துக்காக கடுமையாக போட்டியிடவுள்ளன. தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தன் மக்களின் விடுதலைக்காக விடாமுயற்சியுடன் போராடினார். அவரின் நினைவாகவே இவ் வெற்றிக் கிண்ணத்திற்கு அவரது பெயர் சூடப்பட்டது.

இச்சுற்றுக்கிண்ணப் போட்டியானது தமிழர் வரலாற்றில் இடம்பெறும் ஒரு முக்கிய வரலாற்றுப் பதிவாகும். இது ஒரு போட்டி என்பதை தவிர்த்து தமிழீழத்துக்கான சர்வதேச அங்கீகாரத்தின் ஒரு படிக்கல்லாக அமைகிறது.

இந்த சர்வதேச போட்டியில் தமிழீழ அணி பங்கு பெறுவது எமது நாட்டின் அடையாளத்தை உலகத்திற்கு வெளிப்படுத்துவதற்கு நிச்சயம் உறுதுணையாக இருக்கும்.

தமிழ் மக்களின் பண்பாடும் அடையாளமும் சர்வதேச சமூகங்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இப்போட்டி மிகவும் உறுதுணையாக அமையும் என குறிப்பிடப்படுகிறது. ஒரு சர்வதேச அரங்கில் நடைபெற இருக்கும் இந்த போட்டியில் முதல் முறையாக தமிழீழ அணியைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் தங்கள் கைகளில் தமிழீழ தேசிய கொடியை ஏந்தி வருவார்கள்.

(அ-2-7)


இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



ஒன்பதாம் திருவிழா (03.06.2012)

ஆறுதல் தர வாராய் ஆறுமுகா!



விஞ்சு புகழ் இணுவையிலே
வீற்றிருக்கும் திருக் குமரா...
அஞ்சுதல் இல்லை என்றே
ஆறுதலை நீ தரவே...
வள்ளி, தெய்வயானை அங்கே
உன் வலமிடமாய் அமர்ந்திருக்க
வெள்ளி மயில் மீதிலே
உன் வீதி உலாக் கண்டு மகிழ்வோமே



சண் ஜெகன்

9ஆம் திருவிழா உபயகாரர்

(சி-081)


# வெளிநாடுகளுக்கு தப்பியோடிய புலிகள் தேசிய அரசியலுக்குள் ஊடுருவியுள்ளனர்

## ரூபாவின் பெறுமதியை வீழ்த்த சதித்திட்டம் என்கிறார் விமல்

(கொழும்பு)

**வெளிநாடுகளுக்கு தப்பியோடிய புலிகளாலும் மேற்குலக நாட்டவர்களினாலும் இலங்கைக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் இவர்களின் நிழல்கள் தேசிய அரசியலுக்குள் ஊடுருவி பிரிவினைவாதத்திற்கு நாட்டை நகர்த்தி செல்கின்றனர் எனவும் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

வெனிசூலாவின் கிளர்ச்சியினை புரிந்து கொள்வோம் என்ற நூல் வெளியீடு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் விசேட உரையாற்றிய போதே அமைச்சர் விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் மையப் பகுதியை நோக்கி பிரிவினைவாத சக்திகளால் பிரயோகிக்கப்படும் சவால்களை எதிர்கொள்ள பொதுமக்களின் ஆதரவு அரசிற்கு அத்தியாவசியமானதாகும்.

எனவே, பேதமின்றி அரசுக்கு ஆதரவு வழங்க பொதுமக்கள் முன்வர வேண்டும். ஓகஸ்ட் மாதத்திற்குள் ரூபாவின் பெறுமதியினை மேலும் வீழ்ச்சியடையச் செய்ய சர்வதேச புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

இதற்கு முகம்கொடுக்கும் வகையில் மத்திய வங்கி உசார் நிலையில் இருக்க வேண்டும். டுவிட்டர் மற்றும் பேஸ்புக் ஊடாகவும் நாட்டிற்கு எதிரான சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பூகோளவியல் ரீதியில் லத்தீன் அமெரிக்க நாடுகள் இலங்கைக்கு தூரத்தில் காணப்பட்டாலும் அரசியல் ரீதியில் மிக நெருங்கிய நிலையிலேயே உள்ளது.

ஆனால், அந்த நாடுகள் மேற்குலக ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகளுக்கு ஒன்றிணைந்து போராடி வருகின்றன. குறிப்பாக வெனிசூலா மற்றும் கியூபா போன்ற நாடுகள் முன்னுதாரணமாக கொள்ளலாம்.

இதேநிலையே இன்று இலங்கைக்கும் ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவின் தலைமையிலான மேற்குலக ஏகாதிபத்திய நாடுகள் இலங்கையை பல்வேறு நோக்கங்களுக்காக ஆக்கிரமிக்கும் முன்னெடுப்புகளே இன்று காணப்படுகின்றது. இதற்கு உள்நாட்டில் பல தரப்புக்களை ஒற்றர்களாகவும் பொருளாதார சதிகாரர்களாகவும் மேற்குலக சக்திகள் பயன்படுத்துகின்றன.

சிறையிலிருந்து விடுதலையான சரத் பொன்சேகா சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கூறுகின்றார். இது யாருடைய தேவையாக இருக்க முடியும்.

யுத்த காலப் பகு தியில் வீழ்ச்சியடை யாத ரூபாவின் பெறு மதி தற்போது வீழ்ச்சி கண்டு ள்ளது என்றால் இதன் பின்னணியில் நாட்டிற்கு எதிராக சக்திகள் உள்ளமை வெளிப்படுகின்றது. நட்டத்தில் இயங்கும் மிஹின் லங்கா மற்றும் எயார் லங்கா போன்ற துறைகளை பாதுகாத்து பலகோடி ரூபா செலவிடும் அரசால் ரூபாவைத் தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை என்பதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே, நாட்டிற்குள் ஊடுருவியுள்ள அந்நிய சக்திகள் பல்வேறு துறைகளிலும் ஆக்கிரமிப்புக்களை மேற்கொண்டு வருகின்றன. இவர்களே இன்று எதிர்க்கட்சியினைப் போன்று கருத்துக்களை கூறி வருகின்றனர்.

ஆகவே நாடு எதிர்கொண்டுள்ள பல்துறை சார் சவால்களை தோல்வியடையச் செய்ய பொது மக்கள் அரசுடன் ஒன்றிணைய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## முபாரக்கிற்கு ஆயுட்கால சிறை

எகிப்தில் பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கிற்கு ஆயுட்கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களை கொல்வதற்கு உத்தர விட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுக்காக இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நடைபெற்று வந்த வழக்கு விசாரணைகளின் இறுதித்தீர்ப்பு நேற்றைய தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் நடத்தப்பட்ட மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடுத்து ஹொஸ்னி முபாரக் பதவி விலகியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-7)


பூசகர் தேவை

வடமராட்சி, அல்வாயில் அமைந்துள்ள 3 நேரப் பூசை நடைபெறும் பிள்ளையார் கோவில் ஒன்றிற்கு பிராமணப் பூசகர் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தங்குவதற்கு வீடு வழங்கப்படும். உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

T.P. 0776152326,
0772852752

(8549)



- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

23

May 2012 to October 2012

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
• வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
• ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator

MARUTHUR . A. HASSEN

(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.

Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org

Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.06.2012

(சி/133)

# யாழ்ப்பாணத்தில் குற்றச்செயல்கள் பாரியளவில் இடம்பெறுவதில்லை

## யாழ். பிரதிப்பொலிஸ்மா அதிபர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் குற்றங்கள் அதிகரித்து செல்கின்றன என ஊடகங்கள் சில மிகைப்படுத்தி செய்திகளை வெளியிடுவதாக யாழ். மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் முன்னைய காலத்தைப்போல் குற்றச் செயல்கள் அதிகரித்து காணப்படவில்லை என்றும் அவ்வாறு குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கில் இடம்பெறும் குற்றச் செயல்களில் ஒருசில பாரிய குற்றச் செயல்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

சில ஊடகங்கள் ஒருசில சம்பவங்களினை வைத்துக் கொண்டு வடக்கில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாகவும் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை கைது செய்வதில் பொலிஸார் அசமந்தமாக உள்ளனர் என்றும் செய்திகள் வெளியிடுகின்றன. இது உண்மைக்கு புறம்பான செய்தியாகும்.

சென்ற காலத்தில் சாராயம் விற்ற 21 பேரையும் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 34 பேரையும் ஹெரோயின் வழக்குகளில் இரண்டையும் பதிவு செய்துள்ளோம்.

மேலும் களவு, கொள்ளை, திருட்டு, போன்றவற்றில் ஈடுபட்டவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

மேலும் யாழ். பல்கலைக்கழக மாணவன் தாக்கப்பட்டமை, அதிபரொருவரின் கொலை, அச்சுவேலி பெண் கொலை, சுன்னாகம் ஆயுதமுனைக் கொள்ளை எனப் பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டதோடு ஒரு சில சம்பவங்களின் சூத்திரதாரிகள் பொது மக்களினாலேயே பிடிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ-4)

# கண்டல் தாவரங்கள் வளர்ப்புத்திட்டம்

சுற்றாடல் பாதுகாப்பு விசேட வேலைத் திட்டத்தின்கீழ் வடமேல் மாகாண கடற்றொழில் மீன்பிடித்துறை அமைச்சின் ஏற்பாட்டில் கற்பிட்டி திகழி களப்பு பிரதேசத்தில் 2 ஆயிரம் கண்டல் தாவரங்கள் நேற்றுமுன்தினம் நாட்டி வைக்கப்பட்டது.

வடமேல் மாகாண மீன்பிடி கடற்றொழில் அமைச்சர் சனத் நிசாந்த பெரேரா பிரதம அதிதியாக கலந்து கொண்டு குறித்த கண்டல் தாவரங்களை நாட்டி வைத்தார்.

இந்த நிகழ்வில் வடமேல் மாகாண சபை உறுப்பினர் என். டி. எம். தாஹிர், புத்தளம் வலயக் கல்விப் பணிப்பாளர் சத்தா மங்கள உள்ளிட்ட கல்வித் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (அ-2)

# இலங்கையர் 13 பேர் மாலைதீவில் கைது

(கொழும்பு)

இலங்கையர் 13 பேர் மாலைதீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப் பொருள் பாவனை குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ஹசன் ஹனில் தெரிவித்துள்ளார்.

இலங்கையர் உட்பட பங்களாதேஷ் நாட்டவர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். தலைநகர் மாலேயில் கடந்த 31 ஆம் திகதி நடத்திய சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-2)

"கடும் முயற்சியினால் எமது சொந்த எதிர்பார்ப்புகளை நாமே முந்திவிடுவோம்"

ரொபர்டா வில்லியம்ஸ்

புதுவிதமான தொழில்நுட்பத்தினை பாவிக்கும் மற்றும் வாடிக்கையாளருக்கு தனித்துவமான அனுபவத்தினை பெற்றுக்கொடுக்கும் வகையில் ஊழியர்களின் ஆற்றல்களை மேம்படுத்த உபயோகிக்கும் "உணர்வுபூர்வமான நோக்கு" இனை DIMO வைச்சேர்ந்த நாம் நம்புகிறோம். இந்த நோக்கின் மூலம், உல்லாசமான தொழிற்சூழலையும் தொழிற்துறை முழுவதும் சிறந்த அனுபவங்களையும் DIMO வழங்குகிறது.

கடந்த 7 தசாப்தங்களாக DIMO, தனது மதிப்புக்குரிய வாடிக்கையாளர்களுக்கு உலகத்தர தொழில்நுட்பத்தினை வழங்கியதன் மூலம் இலங்கையின் பொறியியல் துறையின் தளத்தினை மாற்றி வந்தது. பொறியியல் துறையில் முன்னணியில் திகழும் DIMO, கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக உலகின் அதிசிறந்த தயாரிப்புகளை இலங்கையில் பிரதிநிதித்துவம் செய்கிறது.

இப்போது நாம் DIMO வின் உலகத்தர தொழில்நிபுணர் அணியுடன் இணையக்கூடிய செயற்றிறன் மிகுந்த தனி நபர்களை எதிர்ப்பார்க்கிறோம்.

BOSCH

சிறந்த பாவனையைக் கொடுக்கும் தலைசிறந்த மோட்டார் வாகன பாகங்களையும் பவர் டூல்களையும் உற்பத்தி செய்யும் உலகப் புகழ் பெற்ற ஜெர்மனிய நிறுவனமே BOSCH. இப்பொழுது BOSCH நிறுவனம் திறன்வாய்ந்த நபர்களை கீழ்க்காணும் பதவிகளில் இணைத்துக் கொள்ளவுள்ளது.

விற்பனை அதிகாரிகள் - பவர் டூல்ஸ்/ துணைப் பொருட்கள், கராஜ் உபகரணங்கள் மற்றும் மோட்டார் வாகன பாகங்கள்

தகைமைகள்
- க.பொ.த. உயர் தரப்பரீட்சையில் சித்தி
- மேற்கூறப்பட்ட துறையில் குறைந்தது 2 வருட முன் அனுபவம் இருத்தல் வேண்டும்
- கட்டுமாணம் / கட்டுமாண பொருட்கள் அல்லது ஒடோமோபைல் / லுப்ரிகன்ட் துறைகளில் முன் அனுபவங்கள் இருத்தல்
- ஆங்கிலம் மற்றும் தமிழில் தேர்ச்சியும் சிங்கள மொழியில் போதிய அறிவும் இருத்தல் மேலதிக தகைமையாகும்
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மிகக் குறைந்த மேற்பார்வையில் சுதந்திரமாக வேலை செய்யும் இயலுமை
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்

பொறுப்புகள்

நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைவதுடன் எமது உற்பத்திகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், எமது முகவர் மற்றும் விநியோகஸ்தர் வலையமைப்பை விஸ்தரிப்பதிலும் பங்கேற்க வேண்டும். மேற்கூறப்பட்ட தொழில்துறைகள் சம்பந்தப்படும் இடங்களில் (கட்டுமாண இடங்கள், கராஜ்கள், சேவை நிலையங்கள்) நீண்ட நேரங்கள் வேலை செய்யவும் தாயாராக இருத்தல் வேண்டும்.

**DIMO சமசந்தர்ப்பம் வழங்கும் தொழில் வழங்குனர் ஆவர்**

DIMO குடும்பத்தில் அங்கம் பெறுவதால் கிடைக்கும் வரப்பிரசாதங்கள் சகிதம் கவர்ச்சிகரமான ஊதியமும் வழங்கப்படும். உங்கள் சுயவிபரக்கோவையை பெயர், முகவரி, உறவினரல்லாத இருவரின் விபரத்துடனும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினையும் குறிப்பிட்டு கீழ்காணும் முகவரிக்கு 7 நாட்களுக்குள் அனுப்பவும்.

General Manager - Human Resources
**DIESEL & MOTOR ENGINEERING PLC**
65, ஜேதவன வீதி, கொழும்பு 14.
E-mail: careers@dimolanka.com
www.dimolanka.com
www.facebook.com/careersDIMO

BOSCH
Invented for life

(சி-132)

dimo TECHNOLOGY

# 10 இலட்சம் ரூபா செலவில் பனம்பொருள் உற்பத்தி பயிற்சி தொழிற்சாலை

## கிளிநொச்சியில் அமையும்

(கொழும்பு)

இலங்கை சிறுவர் நிதியம் அவுஸ்திரேலிய சிறுவர் நிதியத்தின் நிதி அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் 10 இலட்சம் ரூபா செலவில் பனம்பொருள் உற்பத்திப் பயிற்சி தொழிற்சாலை ஒன்றை எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது என இலங்கை சிறுவர் நிதியத்தின் கிளிநொச்சி மாவட்ட கிரேஷ்ட திட்ட அமைப்பாளர் சிறி சரவணபவான் அறிவித்துள்ளார்.

இத்தொழிற்சாலையில் ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி நெறியானது வன்னிப்போரின் போது கணவன்மாரை இழந்த பெண்களுக்கும் மாற்றுத்திறனுடைய பெண்களுக்குமே ஆரம்பிக்கப்படவுள்ளது. நான்கு மாதகாலம் கொண்ட இப் பயிற்சி நெறியினை பூர்த்தி செய்வதன் மூலம் சுயதொழில் செய்யக்கூடியதான வாய்ப்பினை இவர்கள் பெற்றுக் கொள்வர். இதில் பங்கு கொள்பவர்களுக்கு போக்குவரத்து வசதி கருதி அவர்களுக்கான போக்குவரத்து கட்டணம் அல்லது துவிச்சக்கர வண்டி இலவசமாக வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியை பின்பற்ற விரும்பும் கிளி. மாவட்டத்தைச் சேர்ந்த பூநகரி, கண்டாவளை, கரைச்சி பிரதே சங்களிலுள்ள விதவைகள், மாற்றுத் திறனுடையபெண்கள் சிரேஷ்ட திட்ட இணைப்பாளர், இலங்கைச் சிறுவர் நிதியம், இல.100, ஆனந்தபுரம், கிளிநொச்சி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்வதன் மூலமோ அல்லது 07737 64794 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலமோ இணைந்து கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-7-15)

# எகிப்தில் அவசரகாலச் சட்டம் 31 வருடங்களின் பின் நீக்கம்

எகிப்தில் அமுலில் இருந்த நாடளாவிய அவரசகால சட்டமானது 31 வருடங்களின் பின் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

கடந்த 1981 ஆம் ஆண்டு ஜனாதிபதி அன்வர் சதாத் படுகொலை செய்யப்பட்டதிலிருந்து மேற்படி அவசரகால சட்டம் தொடர்ந்து அமுலில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த அவசரகால சட்டமானது சந்தேக நபர்களை கைது செய்யவும் அவர்களை விசேட நீதிமன்றங்களில் நிறுத்தவும் பாதுகாப்பு படையினருக்கு பெருமளவு அதிகாரங்களை வழங்கியது. ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கிற்கு எதிராக கடந்த வருடம் இடம்பெற்ற மக்கள் எழுச்சியின் போது மேற்படி அவசரகால சட்டத்தை நீக்குவது முக்கிய கோரிக்கையாக முன்வைக்கப்பட்டிருந்தது.

எனினும் அதிகாரத்தை கைமாற்றும் வரை நாட்டை பாதுகாப்பதற்கான தேசிய கடப்பாட்டை தாம் தொடர்வதாக எகிப்திய ஆயுதப் படையினருக்கான உச்ச சபை தெரிவித்துள்ளது.

எகிப்தில் அவசரகால சட்டம் நீக்கப்பட்டமையானது ஜனநாயக மாற்றத்தை நோக்கிய முன்னடியெடுத்து வைப்பாக உள்ளதென அமெரிக்க இராஜாங்க திணைக்களப் பேச்சாளர் மார்க் டோனர் தெரிவித்தார்.

எகிப்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 16, 17 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள இரண்டாம் சுற்று ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் சகோதரத்துவ கட்சியை சேர்ந்த முஹமட் முர்ஸியும் முன்னாள் விமானப்படை கட்டளைத் தளபதிகளில் ஒருவரும் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கின் ஆட்சிக்காலத்தை சேர்ந்த பிரதமருமான அஹமட் ஷபீக்கும் போட்டியிடவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-7)

உ

தில்லையம்பதியாள் துணை

# சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி
# அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்
## 37 ஆவது ஆண்டு இரதோற்சவ விழா சிறப்பு மலர் -03.06.2012


### மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச்செய்தி



கோண்டாவில் கிராமத்திலே தில்லையம்பதி புண்ணிய சேத்திரத்திலே அன்னை சிவகாமியாக வீற்றிருந்து வேண்டுவோருக்கு வேண்டுவன எல்லாம் அள்ளிக் கொடுத்து கொண்டிருக் கின்ற தாயானவளுக்கு இரதோற்சவம் இன்றைய தினம் நடை பெறுவதையிட்டு அகம் மகிழ்வதோடு அம்பாள் தேரில் ஆரோ கணித்து மனித ஆன் மாக்களின் ஆணவத்தை அழித்து எல்லா ஜீவராசிகளும் சக்தியின் திருவருளால் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டும். உலகத்திலே இருக்கின்ற அனைத்து மக்களும் அம்பாளின் பூரண சக்தியால் ஆரோக்கியமாக வாழ இன்றையநாளில் அன்னையைப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

"சர்வே ஜனஹா சுகினோ பவந்து"

பிரம்மஸ்ரீ நா.திவாகரக்குருக்கள்,
பிரதமகுரு தில்லையம்பதி.



ஊர் கூடி வடம்பிடித்தே உளம் உருகச்-சித்திரத்
தேர் ஏறி வலம் வந்தாள் தேவி சிவகாமி

### பக்தர்கள் புடைசூழ ரதமேறுகிறாள்



தில்லையிலே திருக்கூத்தாடும் எம்பிரான் திருக்கூத்தன் நடராஜப் பெரு மான் பஞ்சகிருத்தியங்களை தன் நடனத்தின் மூலம் செய்கிறார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாம். பஞ்சபூதங்களான நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு என்பவற்றில் சிதம்பரம் சிறப்பிக்கப்படும் ஷேத்திரமானது தில்லை எனப் புகழப்படுகின்றது. அதை ஆகாச ஷேத்திரம் எனவும் கூறுவர். அந்த ஆகாச ஷேத்திரத்தின் நாயகி சிவகாமசுந்தரி. சிவனுடைய ஆசைக்கு தகுந்த மெருகு கூடிய அழகை உடையவள். அத்தகைய அழகு மிகு லோகமாதா எமது நாட்டில் கோண்டாவில் பதியில் தில்லையம்பதி என சிறப்பிக்கப்படும் கிராமத்தில் எழில்மிகு ஆலயத்தில் அழகில் அருள்பாலிப்பவள்ாய் அமர்ந்து நந்தன வைகாசி மாத வருட மஹோற்சவ தேர்த் திருவிழா மூலமாக பக்தர்களின் பாவவினை அழிக்க ரதமேறுகிறார். காணக் கண் கோடி வேண்டும்.

மகாதேவ ஸ்ரீவத்சாங்க சக்தி உபாஷகர்,
கண்ணகை அம்மன் கோயில்,
தர்மசாஸ்தா குருகுலம்,
இணுவில்.

### தனிப்பெரும் நாயகியே வரம் அருள்வாய்



தனக்கு மேல் தலைவியில்லாத தனிப்பெரும் நாயகியாய் விளங்கும் கோண்டாவில் தில்லையம்பதி அருள் மிகு சிவகாமி அம்பாளின் மஹோற்சவப் பெருவிழாவில் சிறப் பாக இன் றைய தேர்த்திருவிழாவில் அன்னை பார்வ தேவியின் அருட் கடாட்சத் தினால் உலகமெல்லாம் இன்புற்று வாழ எம்பெருமாட்டியை தொழுது ஆராதிக் கின்றேன்.

த. இரத்தினகுணசிங்கம்,
தலைவர்,
மத்திய கிராம முன்னேற்றச்சங்கம்.

### எங்களைக்காத்து நிற்கும் எங்கள் ஆதிமகா சக்தி



தில்லையம்பதியில் அருளாட்சி புரியும் ஆதிமகா சக்தி அன்னை ஸ்ரீ சிவகாமி அம்பாளின் நந்தன வருஷ மஹோற் சவ நாளில் இரதோற்சவம் இன்று பெரு விழாவாக நடைபெறு கின்றது. வரலாற்றுப் பெருமைகளை தன்னகத்தே கொண்ட எமது திருக் கோயில் இக் கிராமத்தின் பண்பாட்டுக் கருவூலத்தின் உறைவிடமாக உள்ளது. துன்ப துயரங்களிலிருந்து எங் களை காத்து நிற்கும் எங்கள் ஆதி மகா சக்தியின் இரதோற் சவ வைபவத்தில் அடியார்கள் அன்னையின் அருளைப் வேண்டி நிற்கின்றார்கள்.

''தில்லையம்பதியானை தினமும் தொழுதால் நல்லருள் என்றும் கிடைக்கும்''

தம்பிஜயா ராதா,தலைவர்,
திருக்கோயில் பரிபாலனசபை, தில்லையம்பதி

### வேண்டும் வரம் தருவாள் அன்னை



அருள்மிகு தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் தரணியெங்கும் வாழ்கின்ற அனைத்து பக்தகோடி களையும் ஆட்கொண்டு வேண்டுவோர் வேண்டும் வரங்களை வாரி வழங்கி அருளாட்சி புரியும் அன்னையவள் இன்று ரதமேறீ பவனி வந்து தரணியெங்கும் சாந்தி, சமாதானம் நிலவ அருளாட்சி புரியட்டும்.

இரா. ஜெயக்குமார்,
பொருளாளர்,
பரிபாலனசபை தில்லையம்பதி.

## ஆலய வரலாறு

அன்று சிவபூமி என்று திருமூலர் அழைத்த மணி நாடாம் இலங்கை மண்ணின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களுள் ஒன்றாக விளங் கும் இத்திருக்கோயிலும் ஒன்றாகும். ஆரம்பத்தில் பேச்சியம்மன் எனும் திருநாமத்துடன் அன்னை சிவகாமி 1850 ஆம் ஆண்டுகளுக்கு முன் சூளைகள் சூழ மாமர நிழலில் முன்னைய பெரியார்களால் பராமரிக்கப் பட்டுவந்தாலும் வேலன் என்னும் பெரியவராலேயே அம்பிகையின் ஆலயம் தோற்றம் பெற்றது எனலாம்.

1855ஆம் ஆண்டு தொடக்கம் ஆசார சீலரான வேலன் என்பவர் அன்னையின் ஆலயத்திற்கு விளக்கு வைத்து வழிபடத்தொடங்கினார். இது ஆலய வழிபாட்டின் மறுமலர்ச்சிக் காலம் எனலாம். அத்துடன் கருங்கல்லினாலான அம்பிக்கையின் திருவுருவ விக்கிரகம் கோயிலில் வைக்கப்பட்டது.

1910ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வாலயம் நான்கு பக்கமும் சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டு கூரை ஓட்டினால் வேயப்பட்டு 15 அடி விஸ்தீரணம் கொண்ட ஆலயமாக உருப்பெற்றது. பஞ்சமணியும் சேமக்கலமும், சந்தனக்கிண்ணம் மற்றும் பூசை மணியும் இன்று வரை பேணிப் பாதுகாத்து வருதல் குறிப்பிடத்தக்கது.

சைவ ஆசாரத்தைப் பேணும் சைவப் பெரியார்கள் சபாபதி மார்க் கண்டேயர் அவர்கள் பூசைக்காக நியமிக்கப்பட்டார். இக்காலத்திலேயே தான் வைகாசி விசாக பட்சத்தில் ஆடு, கோழி போன்ற உயிர்ப் பலியிடுதலும் மடைபோடுதலும் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து 1958 வரை தொண்டு சென்றது. 1959ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் மூத்தன் இராசன், பொன்னன் சுந்தரலிங்கம், இவ்வூரைச் சேர்ந்த வீரகத்தி தம்பிஐயா ஆகியோரின் பெருமனதினால் தர்ம பரிபாலன சபை உருவாக்கப்பட்டு இச் சபையினால் இவ்வாலயம் பொறுப்பேற்கப்பட்டு இரண்டு காலப்பூசைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

நித்திய பூசகராக அன்று முதல் வீ.தம்பிஐயா நியமிக்கப்பட்டார். இவர்களது முயற்சியால் ஆலயத்தில் நடைபெற்று வந்த வைகாசி விசாகப் பொங்கலில் இடம்பெற்ற பலியிடுதல், மடைபோடுதல் போன்ற முறைமைகள் மாற்றப்பட்டு ஆலயத்தின் புறச்சூழலில் அமைந்திருந்த சூளைமேடுகள் அகற்றப்பட்டு ஆலயத்திற்கென ஒரு விஸ்தீரணம் கொண்ட இடம் ஒதுக்கப்பட்டது.

1962ஆம் ஆண்டு அன்னையின் அருட்கடாட்சத்தினால் ஒன்று கூடிய மக்கள் ஆலயத்தை சிறப்பான திருப்பெருங்கோயிலாக அமைப் பதற்கு பாலஸ்தாபனம் செய்தனர். 1965ஆம் ஆண்டு யாழ். மாவட்ட முன்னாள் நீதிபதி சோ.தனபாலசிங்கம் அவர்களும் யாழ். பொலிஸ் சுப்பிரண்டர் வான்சண்ட் அவர்களும் வடமாகாண அரசாங்க அதிபர் ஜவான் சமரசிங்க அவர்களும் அத்திவாரக்கல் நாட்டு விழாவில் முன்னின்று செய்தனர்.

1965ஆம் ஆண்டு ஆனிமாதம் 17ஆம் திகதி வியாழக்கிழமை உத் திரட்டாதி நட்சத்திரத்தில் சுபமுகூர்த்த நன்நாளில் பிரம்மஸ்ரீ குமார சுவாமி குருக்கள் அவர்களால் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நடை பெற்றது. அன்றிலிருந்து சிவகாமி அம்பாள் என்ற திருநாமம் சூட்டப்பட்டது. 1966ஆம் ஆண்டு வைகாசி விசாகத்தை முன்னிட்டு பத்து தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் பாலித்தது.

09.07.1971ஆம் ஆண்டு தேர்த் திருப்பணி அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து ரிஷபம், பலிபீடம் , கொடித்தம்பம், வசந்தமண்டபம், மணிக்கோபுரம், திருமஞ்சனக் கிணறு முதலான திருப்பணி வேலைகள் நிறைவேற்றப்பட்டு 1976ஆம் ஆண்டு தேர்வெள்ளோட்டமும் இடம்பெற்றது.

மீண்டும் 1982இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு உலக இந்து மகா சபை இலங்கை இணைப்பிரதித் தலைவராக இருந்த அரச அதிபர் யோகேந்திரா துரைச்சாமி அவர்களால் தைப்பூசத்தினத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டன.

1989 ஆம் ஆண்டு சிவஸ்ரீ க.குகதாசக் குருக்கள் தலைமையில் பங்குனி உத்தர பௌர்ணமி நிறைநாளில் மகா கும்பாபிஷேகம் அம்பாளின் அருட்கடாட்சத்தில் சிறப்புற நடைபெற்றது.

1990இல் திருக்கோவில் வருடாந்த சங்காபிஷேக தினத்தன்று காசி யிலிருந்து காசி விஸ்வநாதர் இங்கு வரவழைக்கப்பட்டது.1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பங்குனி உத்தர சங்காபிஷேகத்தின் போது அம்பாளின் கடாட்சத்தினாலும் அடியார்களின் பெரும் காணிக்கையினாலும் அம்பாளுக்குப் பொன்முடியும் திருகோரணம் சூட்டும் விழாவும் கொண்டாடப்பட்டது.

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஸ்ரீசக்கரம் 1998இல் இடம் பெற்ற பங்குனி உத்தரதினத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 2000ஆம் ஆண்டு 25ஆவது கொடியேற்றத்தை முன்னிட்டு அடியார்களின் பெரும் காணிக்கையினால் அம்பாளுக்குத் தங்கக்குடை சூட்டும் விழாவும் இராஜ கோபுரம் அமைப்பதற்கான அங்குரார்ப்பண வைபவமும் நடைபெற்றன.

இதைத்தொடர்ந்து 2002ஆம் ஆண்டு (மகோற்சவ காலப்பகுதியில்) பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் அவர்களால் இயற்றப்பட்ட தில்லையம் பதியாள் கீர்த்தனைகள் தென்னிந்தியக் கலைஞர்களான கலைமாமணி டாக்டர் சீர்காழி ஜி.சிவசிதம்பரம் மற்றும் ரி.எம்.எஸ். செல்வக்குமார் ஆகியோரால் பாடப்பட்டது.

2003ஆம் ஆண்டு மகோற்சவப் பெருநாள் நிறைவுற்ற கையோடு பாலஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு நவக்கிரகமும் புதிதாக அமைக்கப் பட்டு அம்பாளுக்குச் செங்களனித் தடாகமும் அமைக்கப்பட்டது. அத்துடன் வசந்தமண்டபத் தெற்குவாசல் திறக்கப்பட்டது.

இந்தியாவின் கும்பகோணத்திலிருந்து தருவிக்கப்பட்ட நடராஜப் பெருமான், மாணிக்கவாசகர், நவக்கிரக மூர்த்திகள் என்பன பிரதிஷ்டை செய்யப்பட்டதுடன் தமிழகத்தின் கும்பகோண நவக்கன்னிகை எனப் போற்றப்படும் மகாமாசிமா தீர்த்தங்கள் கொண்டு 2004ஆம் ஆண்டு சுபானு வருடம் பங்குனி உத்தரதினத்தன்று சிவஸ்ரீ.சதா மகாலிங்க சிவக்குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அத்தோடு அருட்கவி செம்மல் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர், இரா. இராஜேஸ்வரன் ஆகியோரால் இயற்றப்பட்டு தென்னிந்தியப் பாடகர் களான ரி.எம்.எஸ்.செல்வக்குமார் ,கலைமாமணி டாக்டர் சீர்காழி ஜி.சிவ சிதம்பரம் ஆகியோரால் பாடப்பெற்ற தில்லையம்பதியாள் கும்பாபி ஷேகக் கீர்த்தனைகள் பாகம்-4 வெளியீடு செய்யப்பட்டது.

அன்னையின் அளப்பரிய அருளினால் நவகோணவடிவில் ஐந்து தளங்களை உள்ளடக்கிய இராஜகோபுரத் திருப்பணி வேலைகள் தென்னிந்திய சிற்பவல்லுநர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் ஈழத்து சிற்பவல்லுநர்களால் திருப்பணி வேலைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. வெளிநாடுகளில் வாழும் அன்னை யின் அடியவர்களினாலும் எங்கள் கிராமத்து அடியவர்களின் நிதியினா லும் அவர்களின் உழைப்பினாலும் நிர்மாணிக்கப்பட்ட இராஜகோபுரம் வானுயர்ந்து காட்சிதந்து எமக்கு அருளாட்சி வழங்குகின்றது.

இந்த இராஜகோபுரத்திற்குரிய துவாரபாலகிகள் இரண்டும் தென் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ளன. அத்தோடு இராஜ கோபுரத்திற்குரிய கண்டாமணியும்,தென்னிந்தியாவில் உருவாக்கப் பட்டு கொண்டுவரப்பட்டுள்ளது. அம்பாளின் அருளினால் இராஜகோபுர திருப்பணிகள் யாவும் பூர்த்தி அடைந்த நிலையில் மகாகும்பாபிஷேகம் 18.03.2010 அன்று நடைபெற்றது.

அத்தோடு மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர், இரா. இராஜேஸ்வரன், சி.கணேசலிங்கம், கு.உதயரூபன் ஆகியோரால் இயற் றப்பட்டு தென்னிந்திய பாடர்களான வீரமணிராஜ், தீபன் சக்கரவர்த்தி, கிருஸ்ணராஜ், முருகேஸ் ஆகியோரால் பாடப்பெற்ற "கோபுர தரிசனம்" கீர்த்தனைகள் பாகம்-5 வெளியீடு செய்யப்பட்டது.

அத்துடன் இவ்வருடம் மகோற்சவமானது 12 தினங்களாக உற்சவம் நடைபெற அம்பிகையின் திருவருள் கிடைக்கப்பெற்று இன்று இரதோற்சவம் நிகழ்கின்றது. திருப்பணிச் செல்வர் முத்தன் இராசன் குடும்பத்தினரால் அவரது ஞாபகார்த்தமாக தில்லையம்பதியாள் திருக்கல்யாண மண்டபம் 2011 ஆனி மாதம் அவரது பேரன் சத்தியப்பிரியன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு தொடர்ந்து வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட மஹா மேரு யந்ரஸ்ரீசக்கரம் பிரம்ஸ்ரீ நா. திவாகரக்குருக்கள் தலைமையில் 18.03.2012 இல் கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. இன்று 37 ஆவது மஹோற்சவப் பெருவிழா இனிதே நடைபெறுகின்றது.

"தில்லையம்பதியாளே! சிவகாம சுந்தரியே!! சரணம்!!!"

ஆக்கம் :- தி.கெங்கேஸ்வரன்
செயலாளர்,
தில்லையம்பதி பரிபாலனசபை


தியானந்தேஸ்வரி எலக்ரிக்கல்
பலாலி வீதி,
கோண்டாவில்

கோபி அலங்காரப் பந்தல்
இந்து, கிறிஸ்தவ மணப் பெண் அலங்காரம், கேக் ஐசிங்.
தில்லையம்பதி, கோண்டாவில்.

முத்தொளி வீடியோ
தில்லையம்பதி,
கோண்டாவில்.

விஜய் சில்க்ஸ்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

செல்வா எலக்ரிக்கல்ஸ்
43/1, பலாலி வீதி,
திருநெல்வேலி.

பாலா வீடியோ
தில்லையம்பதி,
கோண்டாவில்.

வேதா வீடியோ அன் போட்டோ
அழகு கலை நிலையம்
தில்லையம்பதி, கோண்டாவில்.

புலவர் வீடியோ
PULAVAR VIDEO

# இன்று முருகனின் பிறந்தநாள்

## வைகாசி விசாகம்



### முருகனின் அவதாரம்

சிவபெருமானின் ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோயாதம் முதலிய ஐந்து முகங்களோடு அதோமுகம் எனப்படும் ஆறாவது முகத்தோடு எழுந்தருளினார். அம்முகங்களில் நெற்றிக் கண்ணிலிருந்து அக்னி சொரூபமாய் தீக்கனல் கிளம்பியது. வாயுவும் அக்னி தேவனும் அத்தீப்பொறிகளை கங்கையில் சேர்த்தனர். கங்கை சரவண தடாகத்தில் கொண்டு சேர்த்தது. சரவணத்தில் முருகப்பெருமான் அவதரித்தார்.

ஆறு முகங்களில் இருந்து தோன்றிய குழந்தைகள் ஆறு பேரையும் தேவர்கள், முனிவர்களின் பத்தினிகளான கார்த்திகைப் பெண்களிடம் ஒப்படைத்தனர். அவர்கள் சீராட்டி பாலூட்டி ஆறு குழந்தைகளையும் வளர்ந்தனர். அந்த ஆறு பெண்களையும் வானில் கார்த்திகை என்னும் நட்சத்திரமாக திகழும்படி முருகப்பெருமான் அருள் புரிந்தார்.

### நவமணியில் தோன்றிய நவவீரர்கள்

சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து தீப்பொறிகள் கிளம்பின. அதன் வெம்மை தாங்கமுடியாமல் பார்வதி எழுந்தோடினாள். அந்த வேகத்தில் பாதச் சிலம்புகளில் இருந்த நவமணிகள் சிதறின. அம்மணிகளில் இருந்து நவ சக்திகள் தோன்றினர்.

நவ சக்திகள் 9 பேரும் இறைவனை விரும்பி கருவுற்றனர். நவ சக்திகளுள் மாணிக்கவல்லி வீரபாகு தேவரையும் முத்துவல்லி வீரகேசரியையும் புஸ்பராகவல்லி வீரமகேந்திரரையும் கோமேதகவல்லி வீரமகேஸ்வரரையும் வைடூரியவல்லி வீரபுறந்தரரையும் வைரவவல்லி வீரராக்தரரையும் மரகதவல்லி வீரமாக்தாண்டரையும் பவளவல்லி வீராந்தகரையும் இந்திரநீலவல்லி வீரதீரரையும் பெற்றனர். இந்த 9 வீரர்களும் சிவபெருமானை வணங்கி படைக்கலன்கள் பல பெற்றனர். இவர்கள் முருகனுக்கு ஏவல் புரியும்படி சிவபெருமான் ஆணையிட்டார். சூரபத்மனை வதம் செய்ய முருகப்பெருமானுக்கு துணை நின்ற நவவீரர்கள் இவர்களே.

### ஆறுமுகன் கந்தனானான்

கார்த்திகைப் பெண்களிடம் வளர்ந்த ஆறு குழந்தைகளையும் சிவபெருமான் உமையவளுடன் காண சரவணப் பொய்கைக்கு வந்தார். சின்னஞ்சிறுவர்கள் ஆறு பேரும் தந்தையை நோக்கி ஓடி வந்தனர். மன மகிழ்ச்சியுடன் தன் பிள்ளைகளைக்கண்ட உமையவள் இரு கைகளாலும் வாரி அணைத்தாள். பிள்ளைகள் ஆறு பேறும் ஓர் உருவம் பெற்றனர். முருகன் ஓர் உருவம் பெற்றதனால் கந்தன் என்று பெயர் பெற்றான். கந்தன் தன் தாய், தந்தை இருவருக்கும் இடையில் அமர்ந்து அவர்களின் மனம் மகிழுமாறு செய்த கோலமே சோமாஸ்கந்த வடிவமாகும். அக்கோலத்தில் சிவபெருமானும் உமையவளும் மகிழ்ச்சியோடு குழந்தை முருகனுடன் வீற்றிருக்கும் காட்சி மிக சிறப்பு வாய்ந்ததாகும். இந்த வடிவத்தை முக்கிய சிவாலயங்களில் தரிசிக்கலாம்.

### ஆற்றுப்படை பாடினால் ஆறுமுகனைக் காணலாம்

பழந்தமிழில் ஆற்றுப்படை இலக்கியங்கள் பல உள்ளன. புலவர்கள் வள்ளலைப் பாடி பரிசு பெற்று வருவார்கள். அப்படி பரிசு பெற்று வரும் புலவர்கள் பரிசு பெற விரும்பும் மற்றொரு புலவனை இந்த வள்ளலிடம் போனால் வேண்டியவற்றைப்பெற்று மனமகிழ்ச்சியோடு வரலாம் என்று ஆற்றுப்படுத்துவதே ஆற்றுப்படை என்னும் இலக்கியமாகும். அப்படி முருகனை நேரில் கண்டு வேண்டிய பரிசுகளை பெற்ற புலவரே நக்கீரர். நக்கீரர் நாம் அனைவரும் முருகப் பெருமானை கண்டு பரிசுபெற வேண்டும் என்ற நல்ல எண்ண்த்தில் திருமுருகாற்றுப்படை என்னும் பாடலை பாடியுள்ளார்.

முருகன் கோயில் கொண்டிருக்கும் ஆறுபடை வீடுகளையும் திருமுருகாற்றுப்படை சிறப்பாக விபரித்து பேசுகிறது. பாடிய புலவன் நக்கீரர் நம்மை பாட அழைக்கிறார். அத்திருமுருகாற்றுப்படை பாடி திருமுருகனைக் காண்போம்.

### விசாகனுக்கு விசாகத் திருவிழா

வைகாசி மாதத்தில் சந்திரன் பௌர்ணமி நாளில் விசாக நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும். அதனாலேயே இந்த மாதம் ***வைசாக*** மாதம் என்றிருந்து பின்னாளில் ***வைகாசி*** என்றானது. இந்த மாத பௌர்ணமி நாளை வைகாசி விசாகம் என்று குறிப்பிடுகின்றோம். இந்த நாளில் தான் முருகப்பெருமான் அவதாரம் செய்ததாக சாஸ்திரங்கள் கூறுகின்றன.

***வி*** என்றால் பட்சி (மயில்) ***சாகன்*** என்றால் சஞ்சரிப்பவன். மயில் மீது வலம் வரும் இறைவன் என்பதால் விசாகன் என்றும் வழங்குவர். முருகனுடைய வாகனமாக சூரபத்மனே வீற்றிருக்கின்றான். பகைவனுக்கும் அருள்கின்ற தன்மையை முருகப்பெருமானிடத்தில் காணலாம். இந்நாளில் திருப்பரங்குன்றம் போன்ற முருகன் தலங்களில் அணியணியாக மக்கள் பாற்குடம் எடுத்து வந்து அபிஷேகம் செய்வர். விசாகனாம் முருகனைப் பணிந்து வினைகளை போக்குவோம்.

### வள்ளியும் வள்ளலும்

தமிழில் ஆண்பால், பெண்பால் என்று பால் பாகுபாடு உண்டு. அரசன் என்பது ஆண்பால் பெயர். அதற்கு இணையான பெண்பால் பெயர் அரசி. அதுபோல் பொன்னன்- பொன்னி, செல்வன்- செல்வி என்று இணையான ஆண், பெண் பெயர்களுண்டு. வரையறை ஏதுமில்லாமல் அள்ளி வழங்கும் நாயகி வள்ளி நாயகி. வள்ளி என்றால் கேட்டதையெல்லாம் கொடுக்கும் குணமுடையவள் என்று பொருள். வள்ளிக்கு நிகரான சொல் வள்ளல். அந்த வள்ளலே முருகன். கேட்பவரின் உள்ளம் மகிழ்ச்சியில் திளைக்கும் படியாக அள்ளி அள்ளிக்கொடுக்கும் பன்னிரண்டு கரங்களைக் கொண்டவன். அந்த வள்ளலை வைகாசி விசாகத்திருநாளில் பணிந்து வணங்கினால் வேண்டிய வரம் பெறலாம்.

### முருகனுக்குரிய சபை

சிவபெருமான் நடராஜராக பொற்சபை, ரத்தினசபை, ரஜதசபை, தாமிரசபை, சித்திரசபை ஆகியவற்றில் நடனமாடுகின்றார். நடனக்கலைக்கு இவை முக்கிய சபைகள். தன்னை அவமதித்த பிரம்மனின் ஆணவத்திற்கு முருகன் தக்கபாடம் புகட்டினார். பின் தன்தந்தைக்கே பிரணவத்தின் உட்பொருளை உபதேசித்து *சுவாமிநாதன்* என்று போற்றப்பட்டார். முருகனால் சிறைவைக்கப்பட்ட பிரம்மா சிவனால் விடுவிக்கப்பட்டார். விடுதலை செய்யப்பட்ட பிரம்மனுக்கும் பிரணவமந்திரத்தை முருகன் ***எண்கண்*** என்னும் தலத்தில் அமர்ந்து உபதேசித்தார். இத்தலம் திருவாரூருக்கு மேற்கில் 12 கிலோ மீற்றர் தூரத்தில் வெட்டாற்றின் கரையில் அமைந்துள்ளது. இங்குள்ள ஆறுமுகப்பெருமானின் சந்நதி பிரம்மனுக்கு ஞானோபதேசம் செய்யப்பெற்ற காரணத்தால் *ஞானசபை* என்று அழைக்கப்படுகின்றது.

### யாமிருக்க பயமேன் என்று சொல்வதேன்?

முருகனின் படங்களில் *யாமிருக்க பயமேன்* என்ற வாக்கியம் இருக்கும். இதைச் சொல்லக் காரணமானவர் யார் தெரியுமா? நக்கீரர் தான். மனிதன் பலவிதமான பய உணர்ச்சிகளால் அலைக்கழிக்கப்படுகின்றான். அதில் மரணபயம் மிகக் கொடியது. அதை அடியோடு நீங்கச் செய்வது முருகவழிபாடாகும். நாம் எந்த செயல் செய்தாலும் நாள் நல்ல நாளா என்று கலண்டரில் பார்ப்பது வழக்கம். ஆனால் முருகனின் அன்பர்கள் எந்த நாளும் பார்க்க வேண்டாம். நவக்கிரக பலாபலன்களைக் கண்டுகொள்ள வேண்டாம். முந்தைய தீவினைகளைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. முருகப்பெருமானைக் பணிந்தாலே போதும் என்கிறார் நக்கீரர். நாளும் கோளும் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. உயிரைப் பறிக்கும் எமனும் முருக பக்தனை கண்டு அஞ்சுவான் என்று ஆணித்தரமாக அடித்துச் சொல்கிறார். இதனால் முருகன் படங்களில் *யாமிருக்க பயமேன்* என்று குறிப்பிடுகின்றனர்.

### முருகனின் வேல் தத்துவம்

செல்வம் அழியக்கூடிய ஒன்று. ஆனால் என்றென்றும் நம்மை விட்டு அகலாது இவ்வுலகை விட்டுச் சென்றாலும் நமக்கு துணையாக வருவது ஞானம். அந்த ஞானத்தை பெறவிடாமல் தடுப்பது நம்மிடம் உள்ள ஆணவமே. முருகன் ஞானமே வடிவமான வேலினை கையில் ஏந்தியிருக்கிறான். ஞானம் என்பது கூரிய, அகன்ற, ஆழமான அறிவு. அதன் அடையாளமாகவே ஞானபண்டிதனாகிய முருக னும் கூரிய, அகன்ற, ஆழமான வேலாகிய படையை தன் கரத்திலே தாங்கி நிற்கின்றான்.

### எல்லாமே ஆறுதான்

**ஆறுமுகம் கொண்ட முருகப்பெருமானிடம் தொடர்புடைய எல்லாமே *ஆறு* என்ற எண்ணை மையப்படுத்தியே அமைந்துள்ளது. முருகனது திருமுகங்கள் ஆறு. முருகன் சிவபெருமானின் 5 முகங்களும் 6 ஆவது முகமாகிய அதோ முகமும் சேர்ந்த ஆறு முகங்களில் இருந்து அக்கினியாக வெளிப்பட்டான்.**

**முருகனை வளர்த்த கார்த்திகைப்பெண்கள் ஆறுபேர். இவனுடைய மந்திரம் சரவணபவ எனும் ஆறெழுத்து மந்திரமாகும். முருகனுக்குரிய வழிபாட்டு யந்திரம் 6 கோணங்களைக் கொண்ட சக்கரம் ஆகும். இவருக்குரிய முக்கிய விரதம் ஆறு தினங்களைக்கொண்ட சஷ்டி விரதமாகும். முருகனுக்குரிய தலங்கள் பலவானாலும் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, சோலைமலை என்னும் ஆறும் ஆறுபடை வீடுகள் என்று போற்றப்படுகின்றன. எல்லாவகையிலும் ஆறு என்ற எண்ணை சிறப்பாகக் கொண்டு ஆறுமுகப் பெருமானை வணங்கினால் நம் வாழ்வு மலரும்.**

# யாழ்.மாநகரசபைக்குட்பட்ட உணவகங்களில் 71 உணவகங்களே 'ஏ' தரத்தினைப் பெற்றன

யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள உணவு நிலையங்களில் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் கடந்த 25 ஆம் திகதி வரையான தரக்கணிப்பீட்டு அறிக்கையினை யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அ.எ. ஞானஜோதி வெளியிட்டுள்ளார்.

யாழ். மாநகராட்சி மன்றப்பகுதியிலுள்ள 245 உணவு நிலையங்களில் தரக்கணிப்பீட்டின் அடிப்படையில் 71 நிலையங்கள் ஏ தரத்தினைப் பெற்று சிறப்பாகவுள்ளன.

136 நிலையங்கள் பி தரத்தில் சாதாரணமான சுகாதார நடைமுறையிலும் காணப்படுகின்றன. அத்துடன் 38 நிலையங்கள் சி தரத்தில் மிகச் சாதாரண சுகாதார முறையில் அமைந்துள்ளன எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையங்களின் தரக்கணிப்பீடுகளை பொது சுகாதார பரிசோதகர் பிரிவு ரீதியாக நோக்கின் குருநகர் பிரிவு -1 இல் 13 உணவு நிலையங்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒரு நிலையம் ஏ தரத்திலும் எட்டு நிலையங்கள் பி தரத்திலும் நான்கு நிலையங்கள் சி தரத்திலும் இயங்கி வருகின்றன.

குருநகர் பிரிவு - 2 இல் 21 நிலையங்கள் உள்ளன. அதில் நான்கு நிலையங்கள் ஏ தரத்திலும் பதினேழு நிலையங்கள் பி தரத்திலும் காணப்படுகின்றன.

பசார் 1 பகுதியில் 71 உணவு நிலையங்களில் 33 நிலையங்கள் ஏ தரத்திலும் 33 நிலையங்கள் பி தரத்திலும் 5 நிலையங்கள் சி தரத்திலும் அமைந்துள்ளன.

பசார் 2 பகுதியில் உள்ள 18 உணவு நிலையங்களில் ஏழு நிலையங்கள் ஏ தரத்திலும் ஒன்பது நிலையங்கள் பி தரத்திலும் இரண்டு நிலையங்கள் சி தரத்திலும் இயங்கி வருகின்றன.

வண்ணார்பண்ணை பகுதியிலுள்ள 18 உணவு நிலையங்களில் 7 நிலையங்கள் ஏ தரத்திலும் 7 நிலையங்கள் பி தரத்திலும் 4 நிலையங்கள் சி தரத்திலும் இயங்கி வருகின்றன.

நாவாந்துறை பகுதியில் மொத்தம் 36 நிலையங்களில் 1 ஏ தரம், 28 பி தரம், 7 சி தரத்திலும் கொழும்புத்துறைப் பகுதியில் மொத்தம் 21 நிலையங்களில் 4 ஏ தரம், 14 பி தரம், 3 சி தரத்திலும் அரியாலைப் பகுதியில் மொத்தம் 15 நிலையங்களில் 5 ஏ தரம், 8 பி தரம், 2 சி தரத்திலும் நல்லூர்ப்பகுதியில் மொத்தம் 32 நிலையங்களில் 9 ஏ தரம், 12 பி தரம், 11 சி தரத்திலும் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-7)


# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 146

சாய்பான் தீவின் படையிறக்கத்தின் போது அமெரிக்க விமானப் படை முதன்முதலாக நேப்பாம் குண்டுகளைப் பயன்படுததியது. இராணுவ நடவடிக்கைகளின் நான்காம் நாளாகிய ஜூன் 18 ஆம்திகதி ஜப்பானிய விமானப்படை அமெரிக்க கடற்படைச் சக்திகளை தாக்கி ஒரு போர்க்கப்பல், 5 விமானந் தாங்கிக் கப்பல், 100 விமானங்களைப் சேதப்படுத்தியது. ஜப்பானிய விமானப்படை 300 விமானங்களை இழந்தது.

ஜூலை 21 ஆம்திகதி அமெரிக்கர்கள் குவாம் தீவில் (மரியான் தீவுக்கூட்டம்) படையை இறக்கி ஆகஸ்டு 10 வாக்கில் அதைப் பிடித்தனர். கைப்பற்றிய மரியான் தீவுகளில் நேசநாட்டினர் தமது வான்படை, கடற்படைத் தளங்களை ஏற்படுத்தி தலை நாட்டின் நுழைவாயிலாகிய வோல்கனோ மற்றம் பனீன் தீவுகளிலும் பிலிப்பைன் தீவுகளிலும் இருந்த ஜப்பானியத் தளங்களின் மீது குண்டு வீச்சை ஆரம்பித்தனர்.

பசுபிக் சமுத்திரத்தின் தென் மேற்குப்பகுதியில் நேச நாட்டினர் 1944 பெப்ரவரி- மார்ச் காலகட்டத்தில் அட்மிரல்டி தீவுகளைப்பிடித்து, ஏப்ரலில் நியூகினி தீவின் மீது தாக்குதலை ஆரம்பித்தனர். நேச நாட்டுத்துருப்புகள் நியூகினி தீவின் மேற்குக் கரையை அடைந்து செப்ரெம்பர் 15 இல் மொரத்தாய் தீவைக் கைப்பற்றியதை அடுத்து ஆசிய நிலப்பரப்பிற்கான வழிகளையும் ஜப்பானுக்கும் தென் கடல்களுக்கும் இடையிலான போக்குவரத்து மார்க்கங்களையும் மூடிப்பாதுகாக்கும் கடைசி தடையாக இருந்த பலிப்பைன் தீவுக்கூட்டத்தைக் கைப்



சீன டாங்கித் துருப்புகள்

பற்றும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன. பிலிப்பைன் தீவுகளைக் கைப்பற்றுவதற்காக 14 டிவிஷன்கள் (2 இலட்சம் நபர்கள்) உள்ளடக்கிய 6-வது அமெரிக்கப்படையும் 885 கப்பல்களைக் கொண்ட 3-வது, 7-வது கடற்படைகளும் ஒதுக்கப்பட்டன. அக்டோபர் 20ஆம்திகதி நேசநாட்டினர் பிலிப்பைன் தீவுக் கூட்டத்தின் முக்கிய தீவுகளில் ஒன்றான லேய்தேயில் படையிறக்கத்தை ஆரம்பித்தனர்.


அக்டோபர் 23, 24 இல் லேய்தே தீவின் அருகே இரண்டாவது உலக யுத்த காலத்திலேயே மூன்றாவது பெரிய கடல் சமர் (முதல் இரண்டு சமர்களும் 1942 மே, நவம்பரில் கொரால் கடலில் நடந்தன) நடைபெற்றது. அமெரிக்கர்கள் பலத்தில் விஞ்சி நின்றனர். பிலிப்பைன் தீவுகளின் மத்திய பகுதியில் இவர்களிடம் 30 விமானம் தாங்கிக் கப்பல்களும் 12 போர்க்கப்பல்களும் 20 குரூசர்களும் 104 நாசகாரி மற்றும் கண்ணிவெடிக் கப்பல்களும், இருந்தன. ஜப்பானியத் தரப்பிலோ 6 விமானந்தாங்கிக் கப்பல்கள், 7 போர்க்கப்பல்களும், 19 குரூசர்கள், 33 நாசகாரிக்கப்பல்கள் மட்டுமே இருந்தன.

இச்சமரில் ஜப்பானியப் படைத் தலைமை தனது கடற்படை அமெரிக்கர்களைக் காட்டிலும் குறைவான விமானந்தாங்கிக் கப்பல்கள. வைத்திருப்பதை கவனத்தில் கொண்டு போர்க்கப்பல்கள் மற்றும் குரூசர்களின் பீரங்கிப்பலத்தை அதிக பட்சம் பயன்படுத்துவது என்று முடிவு செய்தது. அமெரிக்கப் படைத் தலைமையோ, விமானந் தாங்கிக்



கூர்க்கா துருப்புகள் இறாவட்டியைக் கடக்கின்றன

கொரால் கடலில் லெக்சின்ரன் எனும் விமானம்தாங்கிக் கப்பல் எரிகிறபொழுது



கப்பல்களை பொறுத்தமட்டில் தான் விஞ்சி நிற்பதைக் கணக்கில் கொண்டு ஜப்பானியக் கப்பல்களை நெருங்குவதற்கு நெடுநோரம் முன்னராகவே அவற்றின் மீது விமானந்தாங்கிக் கப்பல்களின் விமானங்களைக் கொண்டு பெரும்தாக்குதலைத் தொடுப்பது என்று கணக்கிட்டது. மேலும் ராடர் நுணுக்கத்தில் விஞ்சிநின்றதும், வேவு பார்த்தலையும் நிர்வகிப்பதை

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

யும் அதிகத் திட்டவட்டமாக ஒழுங்கமைக்கவும் இரவு நேரங்களில் நன்றாகப்போரிடவும் நேச நாட்டினருக்கு உதவியது. ஜப்பானியர்களோ அமெரிக்க கப்பல்களைக் கண்டுபிடிப்பதற்காக இரவு நேரங்களில் ஒளி பாய்ச்சிக் கருவிகளை பரவலாகப் பயன்படுத்தும்படி கட்டாயப்படுத்தப்பட்டதால் இதன் மூலம் தமது கப்பல்களை காட்டிக்கொடுக்கும் நிலைக்கு ஆளாயினர்.


நிலவிய ஆயுதங்களைப் பயன்படுத்திக் கொண்ட அமெரிக்கக் கடற்படை ஜப்பானியர்களை முறியடித்தது. மூன்று நாட்களில் இவர்கள் 4 விமானந்தாங்கிக் கப்பல்கள், 3 போர்க்கப்பல்கள், 10 குரூசர்கள், 11 நாசகாரிக்கப்பல்கள் ஆகியவற்றை இழந்தனர். டிசெம்பர் 22 ஆம்திகதி லேய்தே தீவின் ஜப்பானியப் பாதுகாப்புச் சக்திகள் சரணடைந்தன.

1944 ஆம் ஆண்டு இறுதியில் அமெரிக்கர்கள் பிலிப்பைன் தீவுகளின் கணிசமான பகுதியைக் கைப்பற்றினர். 1945 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் தான் இவை ஜப்பானியர்களிடமிருந்து முற்றிலுமக விடுபட்டன. அமெரிக்கர்கள் குறைவான எண்ணிக்கையை உடைய ஜப்பானிய பாதுகாப்புச் சக்திகளுக்கு எதிராகப் போரிட்டதைவிட வலுத்து வந்த தேசிய விடுதலை இயக்கத்தை ஒடுக்குவதற்காக பிலிப்பைன் கெரில்லாப்படை வீரர்களின் அணிகளை ஒழித்துக்கட்டுவதில் முனைந்ததுதான் பிலிப்பைன் தீவுகளுக்கான இராணுவ நடவடிக்கைகளின் இழுபறித் தன்மைக்குக் காரணம் ஆகும். 1944 ஆம் ஆண்டின் இறுதியில் நேச நாட்டுத் துருப்புகள் பசுபிக் சமுத்திரத்தின் தென் மேற்கு மற்றும் மத்திய பகுதிகளின் தீவுகளிலிருந்து பலவீனமான ஜப்பானிய பாதுகாப்புச் சக்திகளை வெளியேற்றி ஜப்பானை நொக்கி 2,000- 2,500 கி.மீ தூரத்திற்கு நெருங்கின.



பிரித்தானிய றோயல் கடற்படை தரையிறங்குகிறது

(தொடரும்)



# வேலணை மேற்கு
# மஹா கணபதிப்
# இரதோற்சவ சிறப்பி


'விக்னேஸ்வரனே தேரேறி வருக!

**விக்னேஸ்வரா நகைப்பூங்கா**

தங்க நகை வியாபாரம் மற்றும் பொதிகள் சேவையும்

205/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அற்புத கணபதியே தேரேறி வருக!

**ஸ்ரீ மகாமாரி அம்மன் ரேடர்ஸ்**

314A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

காவிரியை விரித்தவனே தேரேறி வருக!

**RUKUNAS TRADING**

பலசரக்கு மாளிகை

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அருளொளி பாலிக்கும் ஐயனே வருக!

**R.K. MOTORS**

17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

முடிப்பிள்ளையாரே தேரேறி வருக!

**நந்தலாலா இரும்பகம்**


29, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

காசினியைக் காத்திடவே தேரேறி வருக!

**கணேசா அழகு மாடம்**

176, புதிய சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.


## பெரியபுலத்தானின் பேரருள் கிடைக்கட்டும்



வேலணை மேற்கு பெரியப்புலம் பதியில் அமர்ந்து வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்கும் வேழமுகப் பெருமானின் நந்தன வருட இரதோற்சவம் இன்று வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

சைவம், தமிழ் இரண்டையும் இரண்டு கண்கள் என போற்றிய மகான்கள் அவதரித்த இடம் வேலணை. யாழ்ப்பாணத்தின் சைவம் தொடர்பாக ஆய்வு செய்பவர்கள் முடிப்பிள்ளையார் ஆலய சூழல் பற்றியும் இந்த ஆலய வரலாறு பற்றியும் பல் துறை நோக்கில் ஆய்வுகளை செய்கின்றனர். ஆனைமுகப் பெருமான் எம்மை ஆட்டுவிக்கின்றான். நாம் எல்லாம் ஆடுகின்றோம். இந்த வருடம் எம்பெருமானுக்கு புதிய சப்பறத்திருப்பணி நிறைவேறியுள்ளது. ஆலய வெளிவீதி. சுற்றுமதில் திருப்பணி பல அடியார்களின் பங்களிப்போடு மிக விமரிசையாக நடைபெறுகின்றது.

மேலும் திரிபுர சங்காரத்தின் ஒரு குறியீடாக தேரும் தேர்திருவிழாவும் விளங்குகிறது. திரிபுர சங்காரத்தினை உணர்த்தி ஆணவம் ,கன்மம்,மாயை என்னும் மும்மலங்களையும் அழிப்பதற்காகவே இரதோற்சவம் நடைபெறுகின்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற எல்லாச் சிறப்புக்களும் அமையப்பெற்று கருங்கல் திருப்பணி பஞ்சதள இராஜகோபுரம் இரண்டு மணிக்கோபுரங்கள், அழகான மணிமண்டபம், கம்பீரமான வசந்தமண்டபம்,புதிய யாகசாலை, அழகிய சித்திரத்தேர், அதனுடன் கூடிய தேர் இருப்பிடம், இளைப்பாற்று மண்டபத்துடன் கூடிய தீர்த்தக்குளம் ஆலயத்திற்கும் அடியவர்களுக்கும் நீர்வசதிகளை வழங்கும் நீர் விநியோகத்திட்டம் , அடியார்களுக்கு அமுதளிக்கும் ஐங்கரன் அன்னதான மண்டபம் என ஆலயச் சூழல் காட்சியளிக்கின்றது.

எம் பெருமானின் ஆலய அபிவிருத்தியில் அனைவரும் இணைந்து விநாயகர் அருள்பெற தொடர்ந்தும் செயற்படுவோம்.

பொன்னம்பலம் அருணகிரிநாதன்
தலைவர், ஆலய பரிபாலனசபை.

## சைவ ஒழுங்கு தவறாது முடியோடு இருந்த ஒரே ஒரு கோயில்



தீவகத்தின் திலகமாக விளங்கும் வேலணைப் பதியில் சைவமும் தமிழும் தழைத்தோங்க அருள் புரிந்து எல்லோரையும் வாழவழி நடாத்தும் மஹா கணபதிப்பிள்ளையராகிய முடிப்பிள்ளையார் காரண இடுகுறிப்பெயராக அமைந்த அற்புதத்தெய்வம் ஆவார். இவர் சைவச் சூழலில் இருந்து நல்லாட்சி நடாத்தி எம்மை வாழ்விக்கக் கருதி வன்னியிலிருந்து ஓர் சைவ அடியாரின் அரவணைப்பில் வந்து சிவ பூசாதுரந்தரர்கள் வாழும் சூழலில் அருளாட்சி செய்து நிலைத்திருப்பவர் எங்கள் மஹா கணப்பதிப்பிள்ளையார்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சைவக் கோயில்கள் அழிக்கப்பட்டு தங்களின் சமயச் சடங்குகளைப் பரப்பிவந்த காலப்பகுதியில் எல்லாக் கோயில்களும் அழிக்கப்பட்டு கண்ணில்லாத உடம்புபோல இருந்தது. அக்காலத்தில் முடியோடு எதிரிகள் கண்ணுக்குத்தெரியா தபடி சைவ ஒழுங்கு தவறாது இருந்த ஒரே ஒரு கோயில் மஹா கணபதிப் பிள்ளையாராகிய முடிப்பிள்ளையார் ஆவார். இதனால் அமைந்த சிறப்புப் பெயராக முடிப்பிள் ளையார் என்ற நாமம் நீடித்து நிலைத்துள்ளது.

இவ்வாறு புகழும் அருளும் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்து கொண்டிருக்கும் விநாயகப்பெருமான் இன்று தேரேறி சைவமும் தமிழும் தழைத்தோங்க நம் எல்லாரையும் காப்பாற்றி வளமாக்க அருள்பாலிக்குமாறு வேண்டி இறைஞ்சுகின்றோம்.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

பெ.சிவபாதசுந்தரம், ஆசிரியர், அறநெறிப்பாடசாலை,
மஹா கணபதிப்பிள்ளையார், வேலணை மேற்கு.

## வேண்டுவதை தந்தருளும் மஹாகணபதி



தமிழ் மணக்கும் தேசம் எங்கும் உள்ள ஊர் நெடுஞ்சாலை, மரத்தடி சந்து, பொந்து. ஆற்றங்கரை எங்கு பார்த்தாலும் கணபதியிருப்பார். எவர் வந்தாலும் ஏழை எளியோருக்கு அவரைத்தொட்டு வணங்கும் பேறு கிடைக்கிறது. ஞான கடவுளாக, ஞான விநாயகராக வீற்றிருக்கும் அவரை நெருங்கி எளிதில் தொழுது வணங்க முடியும்.

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலம் செய்துங்கக் கரிமுகத்தூமணியே நீ! எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா"

அப்பமொடு அவல், பொரி, கப்பிய கரிமுகனிடம் பால், தேன், பாகு போன்றவற்றை சொல்லி தமக்கு தமிழைக் கேட்ட ஔவையாரின் இப்பாடலைப் படிக்கும் ஒவ்வொருவரும் அக்கடவுளிடம் தமிழை பெற்றுக் கற்றுதெளிவர் என்பது உறுதி.

தொப்பை அப்பனை தொழவினை அறமே பிள்ளையாரை தொழுதால் வினைகளெல்லாம் அற்றுப்போகும்.


துங்கக்கரிமுகத்து தூமணியே (சிறந்த அழகிய யானை முகமுடைய தூயமாணிக்கம்) போன்றவரே என்றால் பிள்ளையார் திரும்பி பாராமலா இருப்பார்.

அப்பிள்ளையார் வேலணை மேற்கை அருளாட்சி செய்துவரும் ஸ்ரீ மஹாகணபதியாக இன்று தேரில் ஆரோகணித்து அருட்கடாட்சம் தரவுள்ளார்.

அவரை அனுதினமும் தித்திக்கும் தேவாரப் பாடல்களை நாவாரப்பாடி பணித்திடுவோம்.

எப்போ தகத்து நினைவார்க் இடரில்லை கைப்போதகத்தின் கழல்

சி.கிருஷ்ணமூர்த்தி
அமைப்பாளர்
அகில இலங்கைத் திருமுறை மன்றம்.



## ஆலய வரலாற்றுப் பின்ன

வேலணை மேற்கில் கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்களுக்கு எளியவராகக் காட்சி அளிக்கின்றார் பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளை யார். இவர் எழுந்தருளியிருக்கும் இடம் பெரியபுலம் எனப்படும். இதனால் பெரியபுலப் பிள்ளையார் எனுவும் வழக்கு உண்டு.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் பல சைவக் கோயில்கள் இடித்துத் தள்ளப்பட்டன என்பது வரலாறு. அவ்வாறு இடிக்கப்பட்ட [illegible]யம் அச் செயலினின்றும் தப்பி தொடர்ந்தும் முடியோடு பிள்ளையார் ஆலயம் காணப்பட்டதன் காரணமாக முடிப்பிள்ளையார் எனச் சிறப்பாக அழைக்கப்பட்டு வருகின்றது.

மேலும் இவ்வாலயத்தின் மூலமூர்த்தி பிரதிஷ்டை செய்ய[illegible]ட்டு இவ் ஆலயம் ஆரம்பிக்கப்பட்டதற்கான வரலாற்றுக் கதை ஒன்[illegible] உண்டு. மண்டைதீவைச் சேர்ந்த சுப்பிரமணியம் என அழைக்கப்[illegible] வராகிய பக்திமான் ஒருவர் வியாபார நிமித்தம் அடிக்கடி மண்டைதீவி[illegible] இருந்து வன்னிக்கு சென்று வருவது வழக்கம். இவ்வாறு வழமையாக சென்று திரும்பி வரும் போது வழியில், மர இலைச் சருகுகளுக்குள் மறைந்து கிடந்த

## தேர் உணர்த்தும் தத்துவம்

தேர்த் திருவிழா நடைபெறவிருக்கும் இந்த நன்னாளில் தேர் உணர்த்தும் தத்துவம் என்ன என்பதைப்பற்றி சிறிது சிந்திப்போம். உலகத்தையே தேராகக் கொண்டு இறைவன் வலம் வருகின்றான் என்பதையே தேர்த் திருவிழா விளக்குகின்றது.

தேரிற் காணப்படும் நான்கு குதிரைகளும் நான்கு வேதங்களைக் குறிப்பிடுகின்றன. பிரம்மதேவனே இத்தேருக்குச் சாரதியாக விளங்குகின்றான். பூமியாகிய இந்தத் தேருக்குச் சூரிய சந்திரர் சக்கரங்களாக அமைந்துள்ளனர்.

சூரியன் அசுத்தத்தைப் போக்குவான். சந்திரன் மகிழ்ச்சியை அளிப்பான். ஆணவம், கன்மம், மாயை என்று சொல்லப்படுகின்ற மும்மலங்களையும் அழிப்பதையே நோக்காகக் கொண்டு இறைவன் தேரூந்து வருகின்றான் என்று பல நூல்கள் தேர்த்திருவிழாவின் தத்துவத்தினை எடுத்து இயம்புகின்றன.


பெரியபுலம் மஹாகணபதிப் பிள்ளையார் கோயில்

T.P:-0213207421

E.mail:-www.velanaimahakanapathi.com

வேலணை மேற்கு


இதழமைப்பு:-




மஹா கணபதிப்பிள்ளையா

பசுவதை செய்யோ

வளர்ப்போம். பயன் ப

– வேணி களஞ்

# ...மற்கு பெரியபுலம்
# ...தி் பிள்ளையார்
# ...பிதழ்-2012.06.03



யாழ்ப்பாணம் வேலணைமேற்கு பெரியபுலம்

மஹா கணபதிப்பிள்ளையார் கோவில்



## ...பின்னணியும் வளர்ச்சியும்

பிள்ளையாரின் கருங்கல் திருவுருவம் காணப்பட்டது. மரநிழலிற் இளைப்பாறிய சுப்பிரமணியம் புறப்பட்ட போது "சுப்பிரமணியா! நானும் வருகிறேன்!" என்ற அசரீரி கேட்க சுப்பிரமணியம் பிள்ளையாரின் கருங்கற் திருவுருவத்தையும் சாக்கில் போட்டு கொண்டு வந்ததாகவும் கூறப்படுகிறது. திருவுருவத்தை மண்டைதீவுக்கு கொண்டு சென்ற போது அங்கு ம... எதிர்ப்புக்காட்ட பெரியபுலத்துக்கு கொண்டு வந்ததாகவும் பின் வே...ருவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன் இவ் ஆலயத்தின் மீது திருப்பதிகங்களும் திரு ஊஞ்சல் களும் பாடப்பட்டுள்ளன. இன்றைக்கு ஒரு நூற்றாண்டுகளுக்கு முன் வி.கந்தப்பிள்ளை ஆசிரியர் அவர்களால் இயற்றப்பட்ட மஹா கணபதிப்பிள்ளையார் திரு ஊஞ்சல் மேற்கூறிய கூற்றுக்கு தகுந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறு இவ்வாலயத்தின் வளர்ச்சி ஏற்பட்டு கடந்த காலங்களில் கோபுரம், மணி மண்டபம், சித்திரத்தேர், தேர்முட்டி, அன்னதான சபை மண்டபம் என்பன அடியார்களின் உதவியுடன் அமைக்கப்பட்டு இவ்வாலயம் சிறப்புடன் திகழ்ந்து வருகின்றது.

## முடிப்பிள்ளையார் என்ற பெயர்வரக் காரணம்

அந்நியர்கள் இலங்கையை கைப்பற்றி ஆண்டபோது அவர்கள் தமது சமயத்தைப் பரப்புவதற்காக இங்கு சைவசமயத்தை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டனராம். அப்போது இருந்த சைவ ஆலயங்களின் முடிகள் எல்லாம் அந்நியர்களினால் இப்பகுதியிலும் அழிக்கப்பட்டன.

ஆனால் எமது ஆலயத்தின் முடி மாத்திரம் உடைக்கப்படாததனால் முடிப்பிள்ளையார் என்ற பெயர் வழங்குவதாக கூறுகின்றனர். இன்னொருசாரார் அந்தக் காலத்தில் கோயில்கள் கட்டும்போது முடி வைத்து தூபி அமைத்து கட்டும் வழக்கம் இல்லாமல் அநேகமான கோயில்கள் மாடக் கோயில்களாகவே கட்டப்பட்டனவாம்.

ஆனால் எமது ஆலயம்தான் அக்காலத்தில் முடி வைத்து தூபி அமைத்து கட்டப்பட்டதனால் "முடிப்பிள்ளையார்" என்ற நாமம் நிலவுவதாக குறிப்பிடுகின்றனர். முன்னைய காரணமே பொதுவானதாக பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

...ப்பு:-செ.சயந்தன்


...திப்பிள்ளையாரே தேரேறி வருக!

...சய்யோம். பசுவை

...பயன் பல பெறுவோம்.

-வேணி

...ணி களஞ்சியம் –




## பிரதம குருக்களின் ஆசிச்செய்தி



எல்லாம் வல்லவரும் தனக்கு மேல் ஒரு நாயகமில்லாத முழுமுதற்பொருளாம் விநாயகர். யாரொருவர் எந்தக்காரியத்தை எந்தவேளையில் செய்வதென்றாலும் முதலில் விநாயகர் வணக்கம் செலுத்த வேண்டும். அப்போதுதான் அந்தக் காரியம் முழுமையாக நிறைவடையும்.

ஒற்றைத் தந்தத்தையும் உருகிய தங்கத்திற்கு ஒப்பான காந்தியுடையவரும் பேழைவயிறும் இருக்கும் இடத்திலிருந்தே முழு உலகை நோக்கும் பார்வையுடையவரும் கருணை பொழியும் அகன்ற பஞ்சபூதங்களான உயிர்கள் அனைத்திற்கும் தலைவனாக கணங்களின் அதிபதியாக விளங்கும் விநாயகர் வேலணை மேற்கு பெரியபுலத்தில் முடிப்பிள்ளையார் எனும் நாமத்துடன் வீற்றிருந்து அருள்பாலித்து வருகிறார்.

எம்பெருமானின் நந்தன வருட மஹோற்சவம் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இன்று எம்பெருமான் சித்திரத்தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருட்காட்சி அளிக்கிறார்.

அடியார்கள் அனைவரும் இரதோற்சவ நிகழ்வை கண்டுகளித்து பிறவிப் பயனடைய பெரியபுலத்தான் அருளும் எனது ஆசியும் என்றும் உங்களுக்கு உரித்தாகட்டும்.

ஆலய பிரதம குருக்கள்,
சிவஸ்ரீ மஹா பிரபாகர குருக்கள்.

## சித்திரத்தேரேறி சித்திதனை அருள்வாய்



வேலணை மேற்கு பெரியபுலம் மஹா கணபதிப்பிள்ளையார் சித்திரத்தேரில் அமர்ந்து பக்த கோடிகள் அரோகரா என இருகை கூப்பித் தொழவும் தவில் நாதஸ்வர மேதைகள் தாளலயம் தவறாது கர்ணமழை பொழியவும், பண்ணென்ற இசைபாடும் அடியார்கள் பாடிப்பரவவும் அடியளித்தும் அங்கப் பிரதட்சணம் செய்தும் வருமடியார்கள் பின் தொடரவும் தேரோடும் வீதியில் அசைந்து அசைந்து உருண்டுவரும் எம்பெருமான் தேர் ஓடும் காட்சியை காண கண்போதாது. திருக்கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதற்கிணங்க ஆலயங்கள் பலவற்றையும் இப்பதி தன்னகத்தே கொண்டிருப்பதோடு புலமையைப் புகட்டும் பெருமைசேர் வித்தியாலயங்களையும் கொண்டு விளங்குகின்றது. தீவகத்திலே முதன்முதல் ஆரம்பிக்கப் பெற்ற சைவப்பாடசாலையையும், இலவசக் கல்வியின் பேறாகக் கிடைத்த அரசினர் மத்திய கல்லூரியையும் தன்னிடத்தே கொண்டது வேலணை மேற்குக்கிராமம். இக்கிராமத்திலே 1948 ஆம் ஆண்டிலேயே கருங்கற்றளியாக கட்டப்பட்ட பெருங்கோயிலே பெரியபுலம் மஹாகணபதிப் பிள்ளையார்கோவில்.

ஆரம்பமே கருங்கற்றிருப்பணியால் தொடங்கப்பெற்ற இவ்வாலயத்தின் காலப்போக்கின் ஆலய திருப்பணிகள் வியக்கத்தக்கவகையில் பலவாக விரிவடைந்து அவ்வவ் காலங்களில் உரிய நித்திய நைமித்திய மஹா கும்பாபிஷேகங்களும் நடந்தேறின. இற்றைப் பொழுதில் ஆலயம் இராஜகோபுரம், முன்மணி மண்டபம், சித்திரத்திருத்தேர், கட்டமைப்புடன் கூடிய தீர்த்தக்கேணி, இளைப்பாறும் மண்டபம், உள்வீதி பரிவாரமூர்த்திகளின் சந்நிதானம், உட்புறச்சுவர்களில் திருநெறிய தமிழ் பாடற்பதிவுகள், அடியார்க்கு அமுதளிக்கும் ஐங்கரன் அன்னதான மண்டபம், சித்திரத்தேர் தங்குமிடமான தேர்முட்டி என யாவும் சிறப்புற அமைந்து காணப்படுகின்றது.

இவ்வாண்டில் புதிதாக சப்பைரதம் எனப்படும் சப்பரமும் ஆலய புறஎல்லையினை வரையறை செய்யும் பாங்கில் அமைக்கப்பெற்று வரும் சுற்றுமதில்வேலையும் யாவராலும் போற்றத்தக்கதாகும். ஐங்கரன் அடியவர்களும் அவர்களை ஊக்கப்படுத்தி இறைபணியில் ஈடுபடவைக்கும் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்களும் பாராட்டப்படவேண்டியவர்களே

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்துவரும்"

என்னும் பெரியோர் வாக்கிற்கிணங்க நாம் எல்லோரும் எப்போதும் அகத்துள்ளே கைப்போதகத்தின் கழலைநினைந்து வாழ்வோமாக!

சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை
ஓய்வு நிலை அதிபர்.

## ஆனைமுகன் அருள் பெறுவோம்



மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட முடிப்பிள்ளையாருக்கு இன்று இரதோற்சவம் நடைபெறுகின்றது. பல்வேறு துன்பதுயரங்கள் நிகழ்ந்த போதும் எம்பெருமானின் கருணையினால் இவ்வாலயம் தற்போது புதுமெருகுடன் காட்சியளிக்கின்றது.

எமது ஊர் அடியார்களின் பங்களிப்பினாலும் வெளிநாடுகளில் உள்ள பிள்ளையர் அடியார்களினதும் பங்களிப்புடன் பல்வேறு திருப்பணிகள் இடம் பெற்றுள்ளன. ஆலயத்தின் அபிவிருத்திக்காக தமது காணிகளை ஆலயத்திற்கு அன்பளிப்பாக வழங்கிய காணி உரிமையாளர்களுக்கும் ஆலய பரிபாலன சபையின் நன்றிகள் என்றும் உரியதாகும்.

இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கும் ஆன்மீக சூழலை உருவாக்கும் பணிக்கும் அனைவரும் உதவவேண்டும். முடிப்பிள்ளையார் அறநெறி பாடசாலை, முன்பள்ளி என ஆலயம் கல்விப்பணியையும் ஆற்றி வருகிறது. சமூக பொருளாதார, சமய, கல்வி, ஆன்மீக பணிகளில் காத்திரமான பங்களிப்பை எமது ஆலயம் நீண்டகாலமாக செய்து வருகின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

முத்துத்தம்பி மகேந்திரன்
பொருளாளர்,
ஆலய பரிபாலனசபை.


விக்கினங்களை தீர்க்க தேரேறி வருக!

**விக்னேஸ்வரா நகைப்பூங்கா**

34 D, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.

வேழமுகத்தவனே தேரேறி வருக!

**அம்பாள் ரேடர்ஸ்**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கருணை மழை பொழிபவனே வருக!

**செராக்கர் கடை**

175/6, கைலாசப்பிள்ளையார் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

சித்திரத் தேரிலே சித்தமாய் அருள வருக!

**G.T.V ENTERPRISES (PVT) LTD**

225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அடியவர் உள்ளம் அமர்ந்தவனே வருக!

**யோகாஸ் நகை அகம்**

205/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வாரணமுகத்து வள்ளலே வருக!

**PEOPLE'S HARDWARE**

27, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஐங்கரன் அன்னதான மண்டபம்

பெரியபுலம் மஹாகணபதிப் பிள்ளையார் கோயில்

# தமிழ் சிறைக் கைதிகள் விவகாரத்தை எமது சமூகம் பொறுப்பேற்க வேண்டும்

சரத்பொன்சேகாவின் விடுதலையின் மூலம் அமெரிக்கா தனது நலன்களை பேணுவதில் ஒருபடி முன்னேறியிருக்கின்றது. அமெரிக்காவின் இலக்கு ஜனாதிபதியைப் பணியவைப்பது அல்லது அதிகாரத்திலிருந்து கீழிறக்கு வதுதான். இரண்டிற்கும் ஆரம்பப் படியாக சரத்பொன்சேகாவின் விடுதலை இருக்கப்போகிறது. ஆனால், தமிழ்மக்களுக்குதான் எதுவுமில்லை. தமிழர்களைக் கருவியாகப்பயன்படுத்தியே அமெரிக்காவின் இந்த நலன் பெறப் பட்டுள்ளது. தமிழ் தரப்பு உறுதியாக இருந்திருந்தால், தமிழ் மக்க ளின் நலன்களையும் பேரம் பேசி பேணமுடிந்திருக்கும். ஆனால், த.தே. கூட்டமைப்பு அதற்கு எந்த வகையிலும் தன்னை தயார்ப்படுத்த வில்லை. அடிமைத் தனமாகவே இருந்துவருகிறது. அடிமைகளை எஜமான்கள் ஒருபோதும் கணக் கெடுப்பதில்லை என்பதே மரபு. இந்தியாவும், அமெரிக்காகவும் தமிழர்களை அந்த நிலையில்தான் வைத்திருக்க விரும்புகின்றன.



தமிழ் கைதிகளை விடுதலை செய்யக்கோரி வவுனியாவில் நிகழ்ந்த போராட்டம்

சரத்பொன்சேகாவின் மீள்வருகை

## பொங்குதமிழ்

இலங்கைத் தேசியத்தை தூக்கிப்பிடிக்கும் தமிழர்களையும் கவலைக்குள் ஆழ்த்தியுள்ளது. அவர்கள் யதார்த்தத்தை மீறிய ஐக்கிய தேசியக் கட்சி-கூட்ட மைப்பு இணைந்த எதிர்க்கட்சி அரசியலை கட்டி வளர்க்கலாம் என்ற கனவில் இருந்தனர். அதன் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சி- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டு மேதினத்தை ஆதரித்தமை, சம்பந்தனின் சிங்கக் கொடி- ஏற்றத்தை ஆதரித்தமை என்பனவெல்லாம் இலங்கைத் தேசியக் கனவின் வெளிப்பாடு கள்தான். மே 18 ஆம் திகதியை சிங்கள தேசம் மகிழ்ச்சி நாளாகவும் தமிழ்தேசம் துக்கநாளா கவும் அனுஷ்டித்ததை நேரடியாகக் கண்ட பின்னரும் இக்கனவு இருப்பதுதான் மிகப்பெரிய ஆச்சரியம். சரத்பொன்சேகா ஒரு பச்சை இனவாதியாக இருப்பதால் இவர்களுடைய இலங்கைத் தேசிய வேலைத்திட்டம் எல்லாம் சுக்கு நூறாகியுள்ளது.

தமிழ்தேசிய சக்திகளுக்குள்ள ஒரேயொரு ஆறுதல் தமிழ்த்தேசிய தணலை தொடர்ச்சியாக தக்கவைக்க மகிந்த ராஜபக்சவும் சரத்பொன்சேகாவும் உதவப் போகின்றனர் என்பதே. கூட்டமைப்பு தமிழ்த் தேசிய அரசியலை முழுமையாகக் கைவிட்டு சரணாகதி அரசியலைத் தொடர்கின்ற நிலையில் இது மிகப்பெரிய ஆறுதலே! தமிழ் அரசியல் வரலாற்றில் தமிழ்த் தேசிய தணலை தக்கவைப்பதற்கு தமிழ்த் தரப்பினைவிட சிங்களத் தலைவர்களே கடுமையாக உழைக்கின்றனர். டி.எஸ். சேனநாயக்காவிலிருந்து எஸ். டபிள்யு. ஆர்.டி பண்டாரநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தன, பிரேமதாச, மகிந்த ராஜபக்ச, சரத்பொன் சேகா எனப்பலர் இதற்குள் உள்ளடக்கம்.

கடந்த வாரத்தில் அடுத்ததாக முக்கியத்துவம் பெற்றிருந்த செய்தி சிறையில் வாடும் தமிழர்களின் உண்ணாவிரதப் பிரச்சினை. சிறை யில் இருப்பவர்கள் ஏதாவது போராட்டம் நட்த்தினால்தான் கூட்டமைப்பிற்கும் அவர்கள் மீது அக்கறை பிறந்துவிடுகின்றது.


கைதிகளை விடுதலை செய்யக்கோரி வெலிக்கடைச்சிறைக்கு முன்னால் நிகழ்ந்த போராட்டம்

இந்தத் தடவை கூட்டமைப்பிடம் சிறைக் கைதிகள் பற்றிய அக்கறை பீறிட்டுப் பாய்ந்ததைப் பார்த்து உடம்பெல்லாம் சில்லிட்டுப் போய் விட்டது. சம்ப்பந்தன் அணியில் இருந்தவர்கள் சிறைக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர். உண்ணா விரதத்தையும் முடித்து வைத்துள்ளனர். ஆனந்தசங்கரி தலைமை ஒருபடி மேலே சென்று வவுனி யாவில் உண்ணாவிரதப்ப போராட்டத்தையே நடத்தியது. ஒரே நாளில் ஒரு அமைப்பின் இரு பிரிவினர் முரண்பாடாக செயற்பட்ட நிகழ் வுகளையும் காணக்கூடியதாக இருந்தது. உண்ணாவிரதத்தில் சம்பந்தன் அணியைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டதாகத் தெரியவில்லை. இரு அணியிலும் இல்லாத சரவணபவன் தான் கலந்து கொண்டதாகத் தகவல். சிங்கக் கொடியேற்றத்தின் பின்னர் சம்பந்தன் அணிக்கு மக்கள் எங்கே தங்களைக் கைவிட்டு விடு வார்களோ என்ற அச்சம். மறுபக்கத்தில் ஆனந்தசங்கரி அணி மக்கள் சம்பந்தமான விடயங்களை கையில் எடுத்து விடுவர்களோ என்ற இன்னோர் அச்சம். இவ்விரு பிரிவினருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைமை முந்திவிடுமோ என்ற அச்சம் . இந்த அச்சங்கள்தான் மக்கள் பிரச்சினைகள் நோக்கி அவர்களைத் திருப்பிவிடுகின்றன.

இதைவிட த.தே.கூட்டமைப்பின் தலைமைக்கு இன்னோர் கவலையும் இருந்தது. சிறைக்கைதிகள் போராட்டம் தொடர்ந்தால் தற்போதைய ஜனாதிபதியைக் குளிர்விக்கும் வகையில் தெரிவுக்குழுவிற்கு செல்லமுடியாது என்பதே அந்தக் கவலை. இந்த அச்சங்களினாலும் கவலைகளினாலும் சிறைக் கைதிகளின் போராட்டத்தை எப்படியாவது முடிவிற்குக்கொண்டு வருவதையே சம்பந்தன் தலைமை விரும்பியிருந்தது. சிறைக் கைதிகளும் அரசாங்கத்தின் அறிக்கையை ஏற்று போராட்டத்தை கைவிடத் தீர்மானித்ததால் அது த.தே.கூ. இன் தலைமைக்கு அதிர்ஷ்ட மாகிவிட்டது.

தமிழ்கைதிகள் விடயத்தில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களது நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை.

வடக்குகிழக்கு தமிழ் அரசியல் சக்திகள்ளைவிட தென்னிலங்கை அரசியல் சக்திகள் இவ்விடயத்தில் ககரிசனையாக இருப்பது தான் மிகவும் பாராட்டத்தக்கது மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, விக்ரமபாகு கருணாரட்ன தலைமையிலான நவசம சமாஜக்கட்சி மற்றும் ஸ்ரீதுங்க தலைமையிலான ஜனநாயக் இடதுசாரி முன்னணி என்பன இதுவிடயத்தில் முன்னணியில் நிற்கின்றன. வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு முன்னால் ஒரு போராட்டத்தையும் அவர்கள் நடத்தியுள்ளனர்.

சிறைக்கைதிகளை பொறுத்தவரை அவர்கள் மூன்று பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். பொது மன்னிப்பு பிரச்சினை, வழக்குப்பிரச்சினை குடும்பப் பராமரிப்புப் பிரச்சினை என்பனவே அம்மூன்றும் ஆகும். இதற்கென உருவாக்கப்படும் தனியான வெகுஜன அமைப்பு இல்லாமல் இப்பிரச்சினை களுக்கும் முகம்கொடுக்க முடியாது.



இங்கு இது விடயத்தில் கோட்பாட்டுப் பிரச்சினையும் நடைமுறைப் பிரச்சினையும் உண்டு. கோட்பாட்டு ரீதியாக சிறைக் கைதிகளின் பிரச்சினை தமிழ் சமூகத்தின் பொதுப்பிரச்சினை; பொதுத்தேவை ஒன்றிற்காக போராட்டதில் ஈடுபட்மையினாலேயே அவர்கள் சிறைக்குள் இருக்கவேண்டி நேரிட்டது. இதனை சிறைக்கைதிகளின் குடும்பங்கள் மட்டும் சுமக்க விடுவது சமூக அறமல்ல மாறாக சமூகம் இதனைப் பொறுப்பெடுக்கவேண்டும்.

நடைமுறை ரீதியாக இப்பிரச்சினைக்கான தீர்வு பாரிய நிதிவளம், பாரிய மனித வளம் என்பவற்றுடன் தொடர்புடையது. இதனால் சிறைக்கைதிகளின் அனைத்து விவகாரங்களையும் கையாளக்கூடிய ஒரு வெகுஜன இயக்கம் இல்லாமல் இப்பணிகளை மேற்கொள்ள முடியாது. பிரச்சினைகளில் பராமரிப்பு பிரச்சினையைத்தவிர ஏனைய இரண்டும் அரசுடன் தொடர்புபட்டவை. அரசுக்கெதிரான வலுவான போராட்டங்களை நடத்தாமல் அவற்றில் முன்னேற்றங்களைக் காணமுடியாது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலமும், மனித உரிமைகள் சட்டத்தரணி இரட்ணவேலும் சிறைக்கைதிகளைச் சந்தித்த போது வெகுஜன இயக்கம் ஒன்றினை உருவாக்குவது பற்றி பேசியுள்ளனர். சிறைக்கைதிகளும் அம் முயற்சிகளை வரவேற்றுள்ளனர். கட்சி அரசியல் கலக்காத வெகுஜன அமைப்பு ஒன்றினை கட்டும் முயற்சி நடைபெறுகின்றது. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இது தொடர்பான கலந்துரையாடல்களை நடத்துவதற்கும் முயற்சிக்கப் படுகின்றது. சட்டத்தரணிகள், விரிவுரையாளர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் என் போரைக் கொண்டு அவ்இயக்கத்தை அமைப்பது பற்றி யோசிக் கப்படுகின்றது. ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசனும் சிறைக்கைதிகள் தொடர்பாக இதே கருத்தை முன்வைக்கின்றார்.

கைதிகளை விடுதலை செய்யக்கோரி வெலிக்கடைச்சிறைக்கு முன்னால் நிகழ்ந்த போராட்டம்



சிறைக்கைதிகள்விவகாரத்தை தமிழ்ச் சமூகம் தன் பொறுப்பில் எடுக்காவிட்டால், வரலாறு ஒருபோதும் தமிழ்ச் சமூகத்தை மன்னிக்கப்போவதில்லை.

# ஹிலாரியிடம் கொடுத்த இரகசிய அறிக்கையை பகிரங்கப்படுத்துங்கள்

## சபாநாயகரிடம் ஐ.தே.க. கோரிக்கை

(கொழும்பு)

அமெரிக்காவிடம் இரகசியமாகக் கையளிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான செயற்றிட்ட அறிக்கையை நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோர வேண்டும் என்று நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் ஐ.தே.க. கோரியுள்ளது.

இது தொடர்பாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு நேற்று முன்தினம் எழுத்துமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த மே 18 ஆம் திகதி வோஷிங்டனில் அமெரிக்க இரா ஜாங்கச் செயலாளர் ஹிலாரியை சந்தித்தபோது வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் சமர்ப்பித்த செயற்றிட்ட அறிக்கை நாடாளுமன்றத்துக்கோ பொதுமக்களுக்கோ பகிரங்கப்படுத்தப்படவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தை அடுத்து அமெரிக்காவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த இரகசிய செயற்றிட்டத்தை முதலில் நாடாளுமன்றத்தில் வெளியிட வேண்டும். தேசிய விவகாரங்களில் இரகசியமான பேரங்கள் இருக்க முடியாது.

அமெரிக்கா, ஐ.நா. அல்லது வேறு வெளிநாட்டு அமைப்புக்களுக்கு இரகசிய உறுதிமொழிகளை வழங்குவதற்கு முன்னர் செயற்றிட்ட நடவடிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிப்பதே பொருத்தமானது என்று லக்ஸ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# பொன்சேகாவுக்கு பூரண மன்னிப்புப்பெற வத்திக்கானின் உதவி நாடப்படும்- ஜயலத்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு பூரண பொதுமன்னிப்பு பெற்றுக் கொள்ள வத்திக்கானின் உதவி பெற்றுக் கொள்ளப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு பூரண பொதுமன்னிப்பு பெற்றுக் கொடுக்கும் விவகாரத்தில் தலையீடு செய்யுமாறு பாப்பாண்டவர் 16 ஆவது பெனடிக்கின் உதவியை பெற்றுக் கொள்ள உத்தேசித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் ஏற்கனவே பாப்பரசருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் சிவில் உரிமைகளை முழுமையாக உறுதிப்படுத்த எடுக்கக் கூடிய சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு ஜயலத் ஜயவர்த்தன பாப்பாண்டவரிடம் கோரியுள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு முழு அளவில் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் அவரது இராணுவ பதவிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி கருதுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகா விடுதலை விவகாரத்தில் தலையீடு செய்யுமாறு கடந்த ஒக்டோபர் மாதம் பாப்பாண்டவரிடம் ஜயலத் ஜயவர்த்தன கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சர்வதேச நாணயநிதியமே இலங்கையை ஆழ்கிறது

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

ராஜபக்ஷ சர்வதேச நாணய நிதியக் கூட்டமைப்பே இந்த நாட்டை ஆட்சி செய்து வருவதாக ஜே.வி.பி.கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டுள்ளதாக ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தொடர்ச்சியாக அந்தக் கடனுக்கான வட்டியையே செலுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பெற்றுக் கொண்ட கடன்களுக்கு வட்டி செலுத்த அரசாங்கம் மீண்டும் கடன் பெற்றுக் கொண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடன் சுமை முழுவதும் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். நாட்டின் பொருளாதார நெருக்கடிகளை கருத்திற் கொண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கூடுதலான வட்டிக்கு அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடன் தொகையை செலுத்துவதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.06 03

★ 1539-ஸ்பானிய நாடுகாண் பயணி ஹெர்னாண்டோ டெசோட்டோ புளோரிடாவை ஸ்பெயினுக்காக உரிமை கொண்டாடினான்.

★ 1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டணிப் படைகள் வேர்ஜீனியாவின் ஹனோவர் நகரில் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புப் படைகளைத் தாக்கின.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் வான்படை பாரிஸ் நகரில் குண்டுகளை வீசியது.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: பிரான்சின் டன்கேர்க் நகரில் இடம்பெற்ற போடரில் ஜேர்மன் படைகள் வெற்றி பெற்றன. நட்பு அணி நாடுகள் முழுமையாகப் பின்வாங்கின.

★ 1962-பிரான்சின் போயிங் விமானம் பாரிசில் விபத்துக்குள்ளாகியதில் 130 பேர் உயிரிழந்தனர்.

★ 1965-நாசாவின் ஜெமினி 4 விண்கலம் ஏவப்பட்டது. எட்வேர்ட் வைட் 21 நிமிடங்கள் விண்ணில் நடந்து சாதனை படைத்தார். இவரே விண்ணில் நடந்த முதலாவது அமெரிக்கர் ஆவார்.

★ 1969-தெற்கு வியட்நாமில் மெல்பேர்ன் என்ற அவுஸ்திரேலியப் போர்க் கப்பல் எவான்ஸ் என்ற அமெரிக்கப் போர்க்கப்பலுடன் மோதி அதை இரண்டாகப் பிளந்தது.

★ 1984-அம்ரித்சரில் சீக்கியர்களின் புனிதப் பொற் கோயிலுள் இந்திய இராணுவத்தினர் புகுந்தனர்.

★ 1989-சீனாவில் தியனன்மென் சதுக்கத்தில் ஏழு வாரங்களாக இடம்பெற்று வந்த ஆர்ப்பாட்டங்களைக் கலைக்க அங்கு சீன இராணுவத்தினர் அனுப்பப்பட்டனர்.

★ 1991-ஜப்பானில் உன்செள் மலை வெடித்ததில் 43 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்கள் அனைவரும் ஆய்வாளர்களும் ஊடகவியலாளர்களும் ஆவர்.

★ 1998-ஜேர்மனியில் கடுகதி தொடரூந்து ஒன்று பாதையை விட்டு விலகியதில் 101 பேர் உயிரிழந்தனர்.

★ 2006-2001 இல் அகற்றப்பட்ட கண்ணகி சிலையை முதல்வர் மு.கருணாநிதி மீண்டும் திறந்து வைத்தார்.

★ 2006-மொண்டெனேகுரோ நாடு செர்பியா- மொண்டெனேகுரோ கூட்டமைப்பில் இருந்து பிரிந்தது.

★ 2007-தெற்கு சீனாவில் யுன்னான் பகுதியில் இடம்பெற்ற 6.4 அளவு நிலநடுக்கத்தில் பலர் உயிரிழந்து பலத்த சேதம் ஏற்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1808-ஜெபர்சன் டேவிஸ், அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் அரசுத் தலைவர் (இ.1889)

★ 1931-ராவுல் காஸ்ட்ரோ, கியூபாவின் அரசுத் தலைவர்

★ 1961-லோறன்ஸ் லெஸிக், அமெரிக்கக் கல்வியியலாளர்

★ 1966-வசீம் அக்ரம், பாகிஸ்தான் துடுப்பாட்டக்காரர்

### இறப்புக்கள்

★ 1657-வில்லியம் ஹார்வி, ஆங்கிலேய அறிவியலாளர் (பி. 1578)

★ 1963-பாப்பரசர் 23 ஆம் ஜோன் (பி.1881)

★ 1975-எய்சாக்கு சாட்டோ, ஜப்பானியப் பிரதமர், நோபல் பரிசுபெற்றவர் (பி.1901)


★ 1989-அயதொல்லா கொமெய்னி, ஈரானிய மதத் தலைவர் (பி.1900)

★ 1990-ரோபேர்ட் நாய்சு, அமெரிக்கப் பொறியியலாளர் (பி.1927)

★ 2000-ஜெய்சங்கர், தமிழ் நடிகர்

★ 2001-அந்தனி குயின், ஹோலிவுட் நடிகர் (பி.1915)

★ 2007-ரத்னமாலா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை



★ 1924- தமிழ் நாட்டு முன்னாள் முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத்தலைவருமான மு.கருணாநிதி பிறந்த தினம்





யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புக்களை பூர்த்தி செய்தவர்களுக்கான பட்டமளிப்பு விழா நேற்று காலை 10 மணியளவில் யாழ். திறந்த பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பேராசிரியர் என். ஞானக்குமரன் மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்கிக்கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ. சாளீன்)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் திருக்கோவில் 108 சங்காபிஷேக உற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இடம் பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது.

இச் சங்காபிஷேக தினத்தன்று விசேட திரவிய அபிஷேகம் பூர்ணாகுதி, மூலவர், பஞ்சமுக விநாயகர் சங்காபிஷேகம், விசேட பூசை, திருவூஞ்சல் என்பவற்றுடன் சுவாமி வீதியுலாவும் நடைபெறவுள்ளது. (அ-7)

## மூன்று மாதங்களில் கூறவேண்டியவற்றை பொன்சேகா ஒரே நாளில் கூறிவிடுகின்றார்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ஊடகங்களை கட்டுப்படுத்த இராணுவத்தை வழிநடத்தினார் என்றால் பிரபாகரனை ஒடுக்க வழி காட்டியது யார் என தான் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவிடம் கேள்வி எழுப்புவதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொன்சேகா இந்த நாட்களில் தான் கூற வேண்டிய அனைத்தையும் தொடர்ந்தும் கூறி வருகின்றார். இன்று அல்லது நாளை சிறைக்கு செல்வோம் என்ற அச்சம் அவரிடம் இருக்கின்றதோ தெரியவில்லை. இரண்டு, மூன்று மாதங்களில் கூற வேண்டியவற்றை அவர் ஒரு நாளில் கூறி விடுகின்றார்.

சிறையில் இருந்து விடுதலையானதும் போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு அரசாங்கம் இணங்க வேண்டும் என கருத்து வெளியிட்டார்.

அரசாங்கம் நடந்து கொள்ளும் விதத்தில் தவறு நடந்துள்ளதாகவே தெரிவதாகவும் கூறினார். இதனையடுத்து ஊடகவியலாளர்களுக்கு எதிராக இராணுவத்தை வழி நடத்தியது ஜனாதிபதியே என தெரிவித்தார் எனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (அ-2)

## வெட்கம் கெட்ட அரசாங்கம்

### ஜயலத் எம்.பி. கிண்டல்

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை குறைவடைந்த நிலையில் இலங்கையில் மாத்திரம் விலை அதிகரிக்கப்படுவது வெட்கத்துக்குரியது என்று ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்படுவதை நிறுத்தி மக்களுக்கு பொருளாதார ரீதியில் உதவ வேண்டும்.

அவ்வாறு செய்யாதுவிடின் எதிர்காலத்தில் நாட்டு மக்களின் எதிர்ப்பை அரசாங்கம் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுமென ஜயலத் ஜயவர்த்தன இதன்போது எச்சரிக்கை விடுத்தார். (அ-2)

## பொன்சேகா மன்றத்தில் இணைய அதிகளவானோருக்கு விருப்பம்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிறையிலிருந்து விடுதலையானதையடுத்து தனது அனோமா பொன்சேகா மன்றத்தில் இணைந்துகொள்ள பெரும் எண்ணிக்கையானோர் ஆர்வம் காட்டுவதாக அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி 2 ஆம் திகதி அனோமா பொன்சேகா மன்றத்தை அனோமா பொன்சேகா ஸ்தாபித்தார்.

இவ்வமைப்பு பின்தங்கிய மக்களுக்கு உதவுவதற்கான அமைப்பாகும். இந்த மன்றத்தில் அங்கத்தவர்களாக இணைவோரின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருவதாக அவர் கூறினார்.

இம்மன்றத்தில் இணைய விரும்புவதாக கூறும் பலரின் தொலைபேசி அழைப்புகள் வருகின்றன. அடுத்த மாதம் புதிய அங்கத்தவர்களை சேர்க்கவுள்ளோம். இதில் பெரும் எண்ணிக்கையானோர் இணைவர் என எதிர்பார்க்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

அனோமா பொன்சேகா மன்றமானது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. சரத் பொன்சேகா அவ்வமைப்பில் அங்கம் வகிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நேற்று அறிவிக்கப்பட்ட இடங்களுக்கு மேலதிகமாக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய உரும்பிராய், கோண்டாவில், திருநெல்வேலிநகரம், மருத்துவபீடப்பிரதேசம், தட்டாதெரு, கோம்பயன்மணல் பிரதேசம், கச்சேரிப்பிரதேசம், யாழ். நகரம் முழுவதும், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், குருநகர் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)


தில்லையம்பதியாள் துணை

சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி

அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோயில்

37 ஆவது ஆண்டு மஹோற்சவ பெருவிழா -2012

இரத உற்சவம்

ஊர்கூடி வடம் பிடித்தே உளம் உருகச்-சித்திரத்

தேர் ஏறி வலம் வந்தாள் தேவி சிவகாமி



காலை 6.30 மணிக்கு அபிஷேகம்,

காலை 8.30 மணிக்கு வசந்தமண்டப பூசை,

காலை 10.00 மணிக்கு அம்பாள் தேர் உலா வரும் காட்சியும் இடம்பெறும்.

தில்லையம்பதி,
கோண்டாவில்.

தேர்த்திருவிழா உபயகாரர்
பாலா வீடியோ அன் மணப்பெண் அலங்காரம்


## இலங்கையில் உற்பத்தி மையங்களை நிறுவ முடிவு

### பாகிஸ்தான் அறிவிப்பு

இலங்கையில் உற்பத்தி மையங்களை நிறுவி சட்டரீதியாக உற்பத்திகளை மேற்கொள்ள பாகிஸ்தானின் தாட்டா சீமெந்து நிறுவனம் இலங்கையில் சீமெந்து உற்பத்திகளை மேற்கொள்வதாக களஞ்சியம் மற்றும் பொதியிடல் உபகரணங்களை நிறுவவுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையிலான வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான முடிவை தாட்டா நிறுவன பணிப்பாளர் சபை நேற்று முன்தினம் கராச்சியில் வைத்து மேற்கொண்டது.

ஏற்கனவே இந்திய உதவியுடன் காங்கேசன்துறை சீமெந்து ஆலை இயங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் நிலையிலேயே பாகிஸ்தானின் சீமெந்து ஆலை இலங்கையில் நிறுவப்படவுள்ளது. (அ-2)

## பௌத்த பிக்குவுக்கு பிரிட்டனில் 7 வருட சிறைத்தண்டனை விதிப்பு

(கொழும்பு)

இலங்கையின் முக்கிய பௌத்த பிக்கு ஒருவருக்கு பிரித்தானியாவில் ஏழு வருட சிறைத் தண்டனை அளித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஐஸ்வேத் க்ரௌவன் நீதிமன்றம் வழங்கியது.

டல்வேட்டன் வீதியில் உள்ள குரோய்டொன் என்ற இடத்தில் வசித்து வந்த பிரித்தானியாவின் பிரதம சங்கநாயக்க தேரரான பஹலாகம சோமாரத்ன தேரருக்கே இந்த தண்டனை வழங்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டு 16 வயதாக இருந்த சிறுமி ஒருவரை தகாத முறையில் தாக்கிய குற்றச்சாட்டுக்காகவே இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

தேரர் மீது 2011 ஆம் ஆண்டு செப்டெம்பரிலும் குறித்த இரண்டு குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன.

இந்நிலையில் நீதிமன்றத்தில் பிரசன்னமான அவரை முன்னதாக நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்திருந்தது. எனினும் நேற்று முன்தினம் அவருக்கு சிறைத் தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (அ-7)

# வெற்றியாளர்கள்

# 5 மில்லியன் தங்கம்

## மாதாந்த சுப்பர் பரிசுகள்




ஜனவரி மாதத்திற்கான அதிஷ்டசாலி வெற்றியாளர்
**திருமதி. A.G.S.P டயஸ் - கம்பஹா**




பெப்ரவரி மாதத்திற்கான அதிஷ்டசாலி வெற்றியாளர்
**திரு. W.G.F. பர்ணான்டோ - வென்னப்புவ**




மார்ச் மாதத்திற்கான அதிஷ்டசாலி வெற்றியாளர்
**திரு. M.A.J. மஞ்சநாயக - புவக்பிடிய**

WP/GT/3467

## 27,000 க்கும் அதிகமான வெற்றியாளர்களுக்கு 60 மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது

டயலொக் ரீலோட் செய்து மற்றும் சரியான திகதியில் பில் கட்டணங்களை செலுத்தி ஒவ்வொரு ரூ.50/- மூலமும் வெற்றி வாய்ப்பினை பெற்றுக் கொள்ளுங்கள்

## அடுத்த வெற்றி வாய்ப்பு உங்களுக்கே!

www.dialog.lk (சி/131)

எந்த ஒரு வலையமைப்பிலிருந்தும் 1777 க்கு அழையுங்கள்.

# வனக் குற்றச் செயல்களைத் தடுக்க தகவல் வலையமைப்பு உருவாக்கம்

தெற்காசிய வலய நாடுகளின் வனங்களில் இடம்பெறுகின்ற குற்றச்செயல்களை தடுப்பதற்கு தக்வல் வலையமைப்பொன்றை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசேட மாநாடு நாளை திங்கட்கிழமை இலங்கையில் நடைபெறவுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களத்தின் நடவடிக்கைப் பிரிவு பணிப்பாளர் எச்.டீ. ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதில் எட்டு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். நான்கு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் குறித்த நாடுகளுக்கிடையிலான பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளன.

இதன்மூலம் வனங்களை அண்மித்த பகுதியில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க முடியும் என வன ஜீவராசிகள் திணைக்களத்தின் நடவடிக்கைப் பிரிவு பணிப்பாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# நீதிமன்றுக்கு வந்து சாட்சியமளிக்குமாறு முன்னாள் சட்டமா அதிபருக்கு உத்தரவு

(கொழும்பு)

செய்தியாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல் போன வழக்கில் இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் நீதிமன்றத்துக்கு வந்து சாட்சியமளிக்க வேண்டும் என்ற ஹோமகம நீதிமன்றத்தின் உத்தரவை இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

காணாமல் போன செய்தியாளர் பிரகீத் எக்னலிகொட வெளிநாடு ஒன்றில் வசிக்கிறார் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னாள் சட்டமா அதிபர் கூறியிருந்தார்.

இது குறித்து சாட்சியமளிக்க வருமாறே அவருக்கு ஹோமகம நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால், முன்னாள் சட்டமா அதிபர் அதிகாரபூர்வமாக நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க தேவையில்லை என்றும் அவருக்கு அதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் தரப்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வாதிடப்பட்டது.

ஆனால், அதனை ஏற்க மறுத்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஜனாதிபதிக்கு மாத்திரமே சட்ட விலக்கு இருப்பதாகக் கூறி மொஹான் பீரிஸ் சாட்சியமளிக்க நீதிமன்றத்துக்கு வர வேண்டும் என்று உத்தரவிட்டார். (அ-2)


# UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BIDS

**COMPLETION of Construction of Buildings at Ariviyal Nagar Complex, Kilinochchi, Faculty of Agriculture, University of Jaffna.**

1. The chairman, Procurement committee of University of Jaffna, now invites sealed bids from eligible and qualified bidders.This shall be a measure and pay contract.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction or above with the Institute for Construction Training and Development (ICTAD)
4. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the table.

| Bid ID | Discription of Work | Estimate Cost | Contract period | Reguired Grade | Reguired Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Period |
| YA/CWP/ AG - KLN/ 2012-B1 | Completion of Construction of Administrative Block & Lecture hall at Ariviyal Nagar Complex, Kilinochi, Faculty of Agriculture | Rs. 44.5 Million | 280 Calender Days | C5/ M6 | 1,000,000.00 | 25th October 2012 |
| YA/ CWP/ AG- KLN/ 2012-B2 | Completion of Construction of Staff Quarters at Ariviyal Nagar Complex, Kilinochi, Faculty of Agriculture | Rs. 9.5 Million | 90 Calender Days | C7/ M8 | 200,000.00 | 25th October 2012 |

5. Interestsd bidders may obtain Further information from the Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna and view the Bidding Documents at the same address on any working day from 9:00hrs to 16:00 hrs.
Contact numbers are: Phone 021 2219201, Facsimile: 021 2219201
6. A complete set of Bidding Documents in English language may be pur chased by interested bidders on the submission of a written application to the Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna from the 6th of June, 2012 until 20th of June, 2012 from 9:00 hrs to 15:00 hrs and upon payment of a non-refundable fee of Rupees five thousand (5,000.00) for each work.
7. Sealed Bids shall be Delivered or sent by registered post to the Chairman, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna to reach on or before 14.00 hrs on the 27th of June, 2012. Bids will be opened soon after closing, at 14.15 hrs on the 27th of June 2012 at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be valid for a period of 91 days from the date fixed for closing of Bids or any extended period.
9. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   in the form included in the section 09 in the Bidding Document.
   in favour of **"Vice Chancellor, Chairman, Procurement committee, University of Jaffna".**
   issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.
10. Pre bid one meeting will be held at the Ariviyal nagar Complex, Kilinochi at 10.30 hrs on the 15th June, 2012

*Vice Chancellor*
*Chairman, Procurement Committee,*
*University of Jaffna,*
*P.O Box 57, Thirunelvely,*
*Jaffna.*

(C-130)

# UNIVERSITY OF JAFFNA
## BID NOTICE

**The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed bids from the qualified contractors for the following works.**

| Work/Service Details | Security deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Minimum Grade |
|---|---|---|---|
| Providing Cleaning & Gardening services at the Administrative Block and the External Area, University of Jaffna | 10,000.00 | 500.00 | Any organizations who have minimum of 02 years experience in similar work. |
| Providing Cleaning & Gardening services at the Faculty of Medicine, University of Jaffna | 9,000.00 | 500.00 | Any organizations who have minimum of 02 years experience in similar work. |
| Providing Cleaning services at Ramanathan Academy of Fine Arts, Maruthanarmadam, University of Jaffna | 10,000.00 | 500.00 | Any organizations who have minimum of 02 years experience in similar work. |
| Construction of Sokage pit with Filter Trenches to Improve Waste water Disposal at Balasingam Hostel, University of Jaffna | 4,000.00 | 500.00 | Minimum ICTAD Grade C10 (Civil) |

Bid forms may be obtained from the Deputy *Registrar/ Capital Works & Planning Unit University of Jaffna* upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Counter, University of Jaffna till **30.05.2012.**

Perfected bid should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the **Registrar, University of Jaffna P.O.Box 57, Thirunelvely, Jaffna** or could be deposited in the bid box kept at **Registrar's Office, University of Jaffna.**

Bids will be accepted till 2.30 p.m on 08.06.2012 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

*P.O. Box 57,*
*Thirunelvely,*
*Jaffna.*
*18.05.2012*

(C-117)

*Registrar*
*University of Jaffna.*

கொடுமைகளுக்கு இடையே உண்மை வெற்றி பெறும். - ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மேதானந்த தேரருக்கு சாலப் பொருந்தும்

ஆனந்தவிகடனில் மதன் கேள்வி பதில்கள் முக்கியமான பகுதி. கேள்விச் சிறப்பும் பதில் அழகும் அந்தப் பகுதிக்கான வாசகர்களை அதிகரித்துக் கொண்டது.

ஒருமுறை இந்தியாவில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியமைத்தபோது வாஜ்பாய் அவர்கள் பிரதமராகப் பதவியேற்றார்.

இச்சந்தர்ப்பத்தில், வாசகர் ஒருவர் மதனிடம் கேள்வி கேட்டார்.

ஐயா! பிரதமர் வாஜ்பாய் பற்றிச் சொல்லுங்களேன்.

பிரதமர் வாஜ்பாயை பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆனால் ஒரு பிரமச்சாரி நூறு குரங்கிற்குச் சமன் என்று மதன் பதிலளித்தார்.

மதன் அளித்த பதில் பிரதமர் வாஜ்பாய்க்கோ அல்லது ஏனைய பிரமச்சாரிகளுக்கோ பொருத்துடையதாகத் தெரியவில்லை.

ஆனால் இலங்கையில் உள்ள ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரருக்கு அந்த பதில் சாலப் பொருத்துடையதாக உள்ளது.

மேதானந்த தேரரின் தாவுதல்களை மதன் பார்த்திருந்தால் ஒரு பிரமச்சாரி ஆயிரம் குரங்கிற்குச் சமன் என்று பதில் அளித்திருப்பார்.

அந்தளவுக்கு தேரரின் குரங்குச் சேட்டை எல்லை கடந்து விட்டது.

துறவி என்பவர் மக்கள் ஒற்றுமையாகவும், ஒழுக்கத்துடனும், சமாதானத்துடனும் வாழ்வதற்கான போதனைகளை எடுத்துரைப்பவராக இருக்க வேண்டும்.

ஆனால் பௌத்த துறவியான எல்லாவெல தேரர் இலங்கையில் தமிழ் மக்கள் வந்தேறு குடிகள் என்று கூறுவதன் ஊடாக ஒரு இனத்தை இழிவுபடுத்த-உண்மையான வரலாற்றை மூடி மறைக்க முற்பட்டுள்ளார்.

அது மட்டுமன்றி இனங்களுக்கிடையே மோதலை உண்டுபண்ணும் அளவில் அவரின் கருத்து அமைந்துள்ளது. நாட்டின் இறைமைக்கு-ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு கூறிவருகின்ற போதிலும்,

அந்த நடவடிக்கை தமிழ் மக்கள் மீதானதாக இருக்கின்றதே தவிர, சிங்களவர்கள் தொடர்பில் அந்தச் சட்டம் ஒருபோதும் அமுல் படுத்தப்படுவது இல்லை.

இலங்கையில் இன, மத ஒற்றுமையை அரசு விரும்புமாக இருந்தால், தேச ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழும்,

இனக் கலவரத்தைத் தூண்டும் முயற்சியில் கருத்துரைத்தார் என்ற குற்றச்சாட்டின் கீழும் மேதானந்த தேரருக்கு எதிராக வழக்குத் தொடுத்து தேரரை கைது செய்து சட்டத்தின்முன் நிறுத்தி உரிய தண்டனையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இது தவிர, ஒரு பௌத்த துறவி இன மோதலை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டமை, பொய் கூறியமை கொலைப் பாவத்துக்கு ஈடானதென்ற அடிப்படையில்,

பௌத்த மதத்திற்கு பாதகம் விளைவித்தமைக்காக அவரின் காவி உடையைக் களைய பௌத்த பீடங்கள் முன்வரவேண்டும்.

எதுவாயினும் தமிழ் மக்கள் தொடர்பில் மேதானந்த தேரர் கூறிய கருத்துக்கு சட்டத்தின் ஊடாக அவருக்குத் தண்டனை கொடுக்க தமிழ் அமைப்புக்கள் நீதிமன்றின் உதவியை நாடவேண்டும்.

# சர்வதேச பாதுகாப்பு தேவையற்றவர்களே இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டனர்

## பிரிட்டன் உள்துறை அலுவலகம் தெரிவிப்பு

பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட நிலையில் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவிருந்த கணிசமானவர்கள் இறுதி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட சட்ட ரீதியிலான முயற்சிகள் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

உண்மையிலேயே தஞ்சம் தேவைப் படுபவர்களுக்கு பிரிட்டன் தஞ்சம் வழங்கும் என்றும் தஞ்சத்துக்கான நியாயமான தேவை இல்லாதவர்கள் அவர்களது நாடுகளுக்கு திரும்பி செல்ல வேண்டும் என்று பிரித்தானிய உள்துறை அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. ஒரு நபருக்கு சர்வதேச பாதுகாப்பு தேவையில்லை என்று தாம் உணரும் பட்சத்திலேயே அவரை தாம் இலங்கைக்கு திருப்பியனுப்புவதாகவும் எல்லா தமிழர்களுக்கும் பாதுகாப்பு தேவையில்லை என்று ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம் கூறியுள்ளதாகவும் அது கூறியுள்ளது.


கடந்த மே 31 ஆம் திகதி இலங்கைக்கு சென்ற விமானத்தில் 36 பேர் திருப்பியனுப்பப்பட்டதாகவும் அவர்களில் 7 பேர் பிரிட்டனில் குற்ற செயல்களில் ஈடுபட்டவர்கள் என்றும் 24 பேர் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள் என்றும் ஒருவர் தஞ்சம் கோராத ஆனால் குற்ற செயலில் ஈடுபட்டவர் என்றும் அதில் குறிப்பிட்டுள்ளது.

சுமார் 70 பேர் வரை இலங்கைக்கு நாடு கடத்தப்படவிருந்ததாகவும் அவர்களில் 36 பேர் மாத்திரமே இலங்கைக்கு அனுப்பப்பட மீதி அனைவரும் தடுத்து நிறுத்தப்பட்டதாக இத்தகைய தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களுக்காக வாதாடிய சட்ட நிறுவனங்களில் ஒன்றான வில்சன் சொலிசிட்டர்ஸ் நிறுவனத்தின் சட்ட நிறைவேற்று அதிகாரியான முஹமட் பஃமி கூறியுள்ளார். பொதுவாக ஒவ்வொரு நபரின் வழக்கும் தனித் தனியாக விசாரிக்கப்பட்டு அவரை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதா இல்லையா என்ற முடிபு எடுக்கப்பட்டதாக கூறிய அவர் தமது நிறுவனத்தின் சார்பிலான வழக்கு ஒன்றில் நீதிமன்றம் முதல் தடவையாக மனித உரிமைகள் காப்பகத்தின் அறிக்கையில் இலங்கை பாதுகாப்பான இடமாக இல்லை என்ற வகையில் கூறப்பட்ட கருத்தை ஏற்று அதன் அடிப்படையில் திருப்ப அனுப்பாதவரை நிறுத்தியதாக தெரிவித்தார்.

இவ்வாறு மனித உரிமைகள் காப்பகத்தின் அறிக்கையை நீதிமன்றம் ஏற்றிருப்பது தஞ்சம் நிராகரிக்கப்பட்ட இலங்கையர் விவகாரத்தில் மிகவும் முக்கியமான அம்சம் என்றும் அவர் கூறினார். (அ-2)

# தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

## வந்த வல்வினை மாளுஞ் சிவாயவே



அந்தம் ஆதியும் இல்லான் அடியாரை
எந்த நேரமும் நீங்கா இறைவன்
கந்த மாமலர் பாதத்தைக் கைதொழ
வந்த வல்வினை மாளுஞ் சிவாயவே

ஆடு பாம்பணிந் தம்பலத் தாடுவான்
பாடு வார்பவந் தீர்க்கும் பராபரன்
தேடு வார்தங்கள் சித்தத் திருந்திடும்
பாடு நீங்கிடும் பற்று சிவாயவே

இளமை மூப்பிலான் எம்மிறை எம்பிரான்
களவு செய்யுங் கருமிகள் தங்கட்கும்
அளவி லாவரு ளீயு மளியினான்
உளம்பொ ருந்தி யிருக்குஞ் சிவாயவே

# வாழ்வில் ஏற்படும் அனைத்து பிரச்சினைகளையும் மூவொரு கடவுளின் துணிவோடு எதிர்கொள்வோம்

இன்று நாம் மூவொரு இறைவனின் திருவிழாவை நாம் கொண்டாடுகிறோம். இத்திருவிழா பாஸ்கா மறைபொருள்களிலுள்ள தந்தை, மகன் தூய ஆவி குறித்த கடவுளின் வெளிப்பாட்டை நினைவுபடுத்துகின்றது. இறைவனின் இந்த இயல்பு அதி புனித திரித்துவம் எனப்படுகிறது. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இறையியல் வல்லுனர் பெக்குலியனால் இந்த மூவொரு கடவுள் என்ற மறையுண்மை கொண்டுவரப்பட்டது. இத்திருவிழா 1334 ஆம் ஆண்டில் திருத்தந்தை 22 ஆம் யோவானால் தொடங்கப்பட்டது. நைசீயா-காண்ஸ்டாண்டி நோபில் திருச்சங்கத்தில் உறுதி செய்யப்பட்ட இந்த விழா திருச்சபையின் அடித்தளமாகவும் மிக முக்கியமான ஒரு திருவிழாவாகவுமுள்ளது.

## பரமபிதா காட்டிய பாதை

தமத்திரித்துவத்தின் மகத்துவம் கூறும் ஒரே கடவுள், மூன்று ஆட்களாய் இருக்கிறார் என்ற மறையுண்மைகளை மனித அறிவால், எண்ணத்தாலும் மொழியாலும் போதுமான அளவு விளக்க முடியாமல் இருந்த போதிலும் திருச்சபைத் தந்தையார், தங்களது வாழ்வு மற்றும் ஆழமான விசுவாசத்தின் வழியாக விளக்க முயற்சித்திருக்கிறார்கள் என்பது உண்மையே.

கடவுளை நம் அறிவுக்குள் அடக்கிவிட முடியாது. அப்படி அடக்க முடிந்தால் அவர் கடவுளாக இருக்க முடியாது என்பதாகும். நாம் எப்படி 3 ஆட்கள் ஒரே கடவுளாய் இருக்க முடியும் என்ற கேள்வியை எமக்குள் எழுப்பி விடைகள் தேட முயலும் போது எப்படி என்ற கேள்விக்குப் பதில் ஏன் என்ற கேள்வியை எழுப்புவோம்.

நம் இறைவன் எப்படி மூவொரு கடவுளாய் இருக்கிறார்? என்ற கேள்விக்கு பக்கம் பக்கமாக இறையியல் விளக்கங்கள் எழுதலாம். அந்த விளக்கங்கள் எல்லாமே நம் அறிவுப்பசிக்கு உணவூட்டி நம் மனதைத் தொடாமலேயே சென்று விடும். எப்படி என்பதற்குப் பதில் ஏன் என்ற கேள்வியை எழுப்புவோம். அவரைப் பற்றி சில அழகான உண்மைகளை வாழ்க்கைக்குத் தேவையான உண்மைகளை நமக்குத் சொல்லித் தர நம் இறைவன் மூவொரு கடவுளாய் இருக்கிறார் என்ற உண்மை புலப்படும்.

நம் இறைவன் மூவொரு கடவுள் என்பதையே நமக்கு அறிமுகம் செய்தவர் இயேசு. கடவுளை ஒரு கூட்டுக் குடும்பமாய் அறிமுகம் செய்தவரும் இயேசு. இயேசு இவ்விதம் நமக்கு அறிமுகம் செய்து வைத்த மூவொரு இறைவனின் இலக்கணம் நமக்கு சொல்லித் தரும் பாடம் நாம் வழிபடும் இறைவன் உறவுகளின் ஊற்று. நாமும் உறவுகளுக்கு முக்கியமான, முதன்மையான இடம் தரவேண்டும் என்பதே அந்தப் பாடம்.

இன்று உறவுகள் முறிந்து சிதைந்து கொண்டிருக்கும் வாழ்க்கை நிலையை நம் சமுதாயத்தில் கண்கூடாகப் பார்க்கமுடியும். அன்புக்காகவும் உறவுகளுக்காகவும் ஏங்கும் மனிதர்களை நாம் பார்க்கமுடியும். கடவுளுக்குள் உறவின் ஒற்றுமையை நாம் தரிசிக்கின்றோம். இறைத் தன்மையுடன் மனிதத் தன்மை கலந்து மனிதர் முழுமையாக மலரவேண்டும் என்பதை கடவுள் விரும்புகிறார். மனிதரோடு உறவு கொள்ள இயேசுவும் தம்மையே தாழ்த்திக் கொண்டார். கடவுள் தன்மை கொண்ட மூன்று ஆட்கள் ஒரே கடவுளாக அன்புற்று வாழ்வது நாமும் நம் குடும்பங்களில் அன்புடன் வாழ வேண்டும்.



பாசமும் பரிவும் மன்னிக்கும் தன்மையும் கொண்டு அன்புற்று ஒன்றுபட்டு ஓர் உயிரும் ஓர் உடலுமாக நாம் அனைவரும் வாழக்கற்றுக் கொள்ள வேண்டும்.

மூவொரு கடவுள் நம் குடும்ப வாழ்வின் ஒற்றுமைக்கு மாதிரி. நாம் குடும்பத்தில் பாசத்தோடு பழகி குடும்ப உறவுகளை சீராக்க, சகோதர பாசத்தை ஆழப்படுத்த, அயலாரோடான உறவை சரிசெய்ய மூவொரு இறைவன் அழைக்கின்றார்.

வாழ்வில் வரும் எண்ணிலாத பிரச்சினைகளை மூவொரு கடவுள் நம்மில் வாழ்கிறார் என்ற நம்பிக்கையோடு துணிவோடு எதிர்கொள்வோம். நம்முடைய உறவுகளில் நாமும் கடவுளும் பிறரும் இணைந்த குடும்பமாக வாழப்பழகுவோம். நொறுங்கிய உள்ளங்களில் சாந்தத்தையும் மகிழ்ச்சியையும் நாம் இன்றைய மூவொரு இறைவன் திருவிழாவிலிருந்து பரிமாற்ற உறுதி எடுப்போம்.

ம. பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்



கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரியமத்தில் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள சிறுவர் இல்ல விடுதிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மங்கல விளக்கேற்றுவதையும் கட்டடத்திற்கான அடிக்கல்லை யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தலைவர் ஆர்.ஜெயசேகரன் நாட்டுவதையும் கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபரும் மகாதேவா ஆச்சிரமத்தின் சிறுவர் இல்லத்தின் தலைவருமான எஸ். ராசநாயகம் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள், சிறுவர்களையும் படங்களில் காணலாம்.

# எரிபொருளின் விலை வீழ்ச்சியடையுமாயின் மக்களுக்கு நன்மைகள் வழங்கப்படும்

## அமைச்சர் சுசில் கூறுகின்றார்

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை தொடர்ந்தும் வீழ்ச்சியடையுமாயின் அதன் நன்மைகளை உடனடியாக மக்களுக்கு வழங்குவதாக பெற்றோலிய தொழில்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை குறைவடைகின்ற போதிலும் நாட்டின் அந்நியச் செலாவணி வீதம் வீழ்ச்சியடைவதால் அதன் நன்மைகளை மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதில் சிக்கல் தோன்றியுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 6 ரூபாவும், டீசலுக்கு 9 ரூபாவும் நட்டத்தை எதிர்நோக்கி வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உலக சந்தையில் கடந்த வாரம் முதல் எரிபொருள் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டு வருவதாகவும் குறிப்பாக அமெரிக்காவின் எரிபொருள் கையிருப்புக்களின் கூடுதல் விநியோகம் மற்றும் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றின் பொருளாதார நெருக்கடிகள் ஆகிய காரணிகள் காரணமாகவே எரிபொருளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

எரிபொருள் விலை வீழ்ச்சி குறித்து உன்னிப்பாக கவனம் செலுத்தி வருவதுடன் நாணய மாற்று வீத அதிகரிப்புக்கு அமைய கட்டணங்களை செலுத்துகின்றமை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(அ-7)

# பாடசாலை அதிபரை தாக்கிய மாணவர்களுக்கு விளக்கமறியல்

(வவுனியா)

வவுனியாவில் பாடசாலை அதிபர் ஒருவரைத் தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய 17 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வேறு பாடசாலை ஒன்றின் மாணவர்கள் சிலரே அதிபரைத் தாக்கியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கைதான மாணவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பாடசாலை வளவிற்குள் நுழைந்தே இந்த மாணவர்கள் அதிபரைத் தாக்கியுள்ளனர்.

வேறு பாடசாலை அதிபர் ஒருவரின் பின்புல ஆதரவுடனேயே மாணவர்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# விபச்சார விடுதியில் கைதான 18 பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

கொழும்பு கோட்டை பகுதியில் சுற்றிவளைக்கப்பட்ட விபச்சார விடுதியிலிருந்து கைது செய்யப்பட்ட எட்டு பெண்கள் அடங்கலாக 18 பேரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோட்டை டி. ஆர்.விஜயவர்த்தன மாவத்தைப் பகுதியில் இயங்கி வந்த விபச்சார விடுதியொன்றிலிருந்து கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களை நேற்று முன்தினம் கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியபோது எதிர்வரும் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹகண தெரிவித்தார்.

விபச்சாரத்தில் ஈடுபட்ட எட்டு பெண்களுடன் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய ஒன்பது பேரும் விடுதியை நடத்தி வந்தவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

குறித்த பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் விபச்சார விடுதியொன்று இயங்கி வருவதாக கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையிலேயே இந்த விடுதி முற்றுகையிடப்பட்டுள்ளது.

இச்சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்ட பெண்கள் பதுளை, பசறை, அவிசாவளை மற்றும் அக்மீமனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் 23 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (அ-7)

# துணுக்காய் கல்வி வலயத்தின் மாணவர் கல்விச் சுற்றுலா

(மல்லாவி)

தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சின் அனுசரணையுடன் துணுக்காய் கல்வி வலயத்தில் நடப்பாண்டில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் விஞ்ஞான பாடம் எழுதவுள்ள மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் கல்விச் சுற்றுலாவொன்று இடம்பெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இக்கல்விச் சுற்றுலாவானது நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் 7 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறும்.

இதில் அதி கஷ்ட பிரதேச மற்றும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளைச் சேர்ந்த 250 ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இக்கல்விச் சுற்றுலாவின் அடிப்படை நோக்கம் மாணவர்களின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் விஞ்ஞான பாடம் தொடர்பான பல அரிய தகவல்களைப் பெறக் கூடியதாக அமையவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கடந்த காலங்களில் இடம்பெற்ற போரின் போது மாணவர்களுக்கு உளவியல் ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும் இச்சுற்றுலாவின் போது மனதளவில் மாற்றங்கள் ஏற்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)

# கிராம சேவையாளர் நியமன வயதெல்லையை நீடிக்க திட்டம்

## பொது நிர்வாக அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கிராம சேவகர்களாக நியமிக்கப்படுவோரின் வயதெல்லையை 21 முதல் 40 வயது வரை அதிகரிப்பதற்குப் பொது நிர்வாக உள்நாட்டலுவலர்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளத் தீர்மானித்துள்ளதுடன் அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் புதிதாக கிராம சேவகர்களை நியமிக்கும் போது ஆண்களுக்கு 80 வீத வாய்ப்பையும் பெண்களுக்கு 20 வீத வாய்ப்பையும் வழங்க உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராம சேவகர் வெற்றிடங்கள் நிலவுவதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்தது. அரசாங்கம் கிராமிய பிரதேசங்களை அபிவிருத்தியில் கட்டியெழுப்பும் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற இக்காலகட்டத்தில் கிராம சேவகர்களின் பணி முக்கியமாகவுள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டே கிராம சேவகர் வெற்றிடங்களைத் துரிதமாக நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது எனவும் அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

கிராம சேவகர்களின் வயதெல்லை சம்பந்தமாக கிராம சேவை அதிகாரிகளின் சங்கம் பல்வேறு வேண்டுகோள்களை முன்வைத்தது. இதனை கருத்திற் கொண்டே 21 வயது முதல் 40 வயது வரை வயதெல்லையை அதிகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இலங்கையின் கடன் கோரிக்கைக்கு மௌனம் சாதிக்கும் உலக வங்கி

## அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

இலங்கை உலக வங்கியிடம் இருந்து 2 ஆயிரத்து 800 கோடி ரூபா கடன் கேட்டுள்ளதாகவும் உலக வங்கியோ பதில் அளிக்காமல் இருப்பதாகவும் அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

2 ஆயிரத்து 800 கோடி ரூபா கடன் வழங்குமாறு உலக வங்கியிடம் இலங்கை அரசு கேட்டுள்ளது. இதற்கான பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக்கும். இந்த கடன் மூலம் எரிபொருள் விலையேற்றம் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் ஆகியவற்றை கட்டுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஏற்கனவே உலக வங்கியிடம் இருந்து ரூ. 13 ஆயிரத்து 750 கோடி கடன் வாங்கி அதை உரிய முறையில் செலுத்தியுள்ளோம் என்றார்.

எனினும் இலங்கையில் இந்த புதிய கடன் கோரிக்கை குறித்து உலக வங்கி இன்னும் பதில் அளிக்கவில்லை. இலங்கை அரசு ஏற்கனவே உலக வங்கியிடம் இருந்து பல பில்லியன் டொலர்களை கடனாக வாங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-7)

# அணித் தலைவராக நான் தயார்: தோனிக்கு காம்பீர் சவால்

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைமைப் பதவிக்குத் தான் தயாராக உள்ளதாக இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும், ஐ.பி.எல். தொடரில் சம்பியன் பட்டம் வென்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவருமான கௌதம் காம்பீர் தெரிவித்துள்ளார். அத்தோடு இந்திய டெஸ்ட் அணிக்குத் தலைமை தாங்குவது கௌரவமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியத் தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில், அவரது அணித் தலைமை எதிர்பார்ப்புக்கள் தொடர்பாகக் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் கிரிக்கெட் அணியைத் தலைமை தாங்குவது கௌரவமானது எனத் தெரிவித்த அவர், அத்தோடுஅது சவாலானது எனத் தெரிவித்தார். எனினும் பல்வேறுபட்ட சவால்களில் என்னை ஈடுபடுத்த விரும்புவது வழக்கமானது என்ற அடிப்படையில் அணித் தலைமைப் பதவி கிடைக்கப் பெற்றால் அதைச் சரியாகச் செயற்படுத்த விரும்புவேன் எனவும் தெரிவித்தார்.

டெஸ்ட் போட்டிகளின்போதே வீரர்களின் மனத்திடமும், அவர்களுடைய உண்மையான திறனும் சோதிக்கப்படும் எனத் தெரிவித்த அவர், அந்த சவாலை பரிசோதித்துக் கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்தார். எனினும் தான் எப்போதும் சொல்லி வந்ததைப் போன்று ஓர் அணித்தலைவர் என்பவர் அந்த அணியைப் போன்றே காணப்படுவார் எனவும், அணி சிறந்ததாக காணப்பட்டால் மாத்திரமே அவரும் சிறந்தவராகக் காணப்படுவார் எனத் தெரிவித்த கௌதம் காம்பீர், சிறந்த அணியே சிறந்த அணித் தலைவரை உருவாக்குவதாகவும், சிறந்த அணித் தலைவர் சிறந்த அணியை உருவாக்குவதாகத் தான் கருதவில்லை எனவும் தெரிவித்தார்.

சிறிய வயதிலிருந்தே தான் ஓட்டங்களைப் பெற்றால் மாத்திரமே அணியில் ஒரு வீரருக்கான இடம் கிடைக்கும் என்பதை நம்பி வந்ததாகத் தெரிவித்த அவர், அதன் காரணமாக எப்போதும் அதை நினைவில் நிறுத்தி வந்ததாகவும் தெரிவித்தார்.

மைதானத்தில் புன்னகை செய்யாத ஒருவராக அறியப்படும் கௌதம் காம்பீர், கிரிக்கெட்டைத் தான் மகிழ்சிகரமானதான ஒன்றாகக் கருதுவதில்லை எனத் தெரிவித்த அவர், கிரிக்கெட்டைத் தான் முக்கியமானதான ஒன்றாக கருதுவதாகவும் தெரிவித்தார்.

கிரிக்கெட் மைதானத்தில் கோபத்தை வெளிப்படுத்துவதற்காக அறியப்பட்ட கௌதம் காம்பீர், முன்பைவிடத் தான் தற்போது அமைதியடைந்துள்ளதாகவும், முன்பை விட பக்குவமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அனுபவம் அதிகரிக்க அதிகரிக்க அமைதியும், பக்குவத்தன்மையும் ஏற்படுவதாகத் தெரிவித்த அவர், கடந்த காலங்களில் செய்த தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்வதே முக்கியமானது எனவும் தெரிவித்தார்.

## ஆசிய பாதுகாப்பு...

கருதப்படும் இந்த மாநாட்டில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உரையாற்றவில்லை.

மாறாக தெற்காசியாவில் அதிகரித்து வரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் என்ற தலைப்பிலான கருத்தரங்கில் ஜி.எல்.பீரிஸ் உரையாற்றவுள்ளார்.

இந்த மாநாட்டில் அமெரிக்கா, இந்தியா, இந்தோனேசியா, அவுஸ்திரேலியா, கம்போடியா, ஜப்பான், மியன்மார், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, தீமோர், சீனா, மொங்கோலியா, கொரியா, ஜேர்மனி, பிரித்தானியா, மலேசியா, கனடா, நியூசிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் படைத்துறை அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (ந-6-11)

## பொலிஸ்,காணி...

முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகளின் பிரதிநிதிகளும் வந்து இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தங்கள் கருத்துக்களை முன் வைக்கச் சந்தர்ப்பமுள்ளது.

எனவே நாட்டின் அதி உயர்ந்த இடமான நாடாளுமன்றத்தில் காணப்படும் தீர்வுக்கு யாரும் சவால் விடுக்கவும் முடியாது. எனவே இந்த பொன்னான வாய்ப்பை பயன்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்ற வேண்டும்.

இனப்பிரச்சினை இந்த நாட்டில் 60 வருடங்களாக புரையோடிப் போயுள்ள பிரச்சினையாகும். 30 வருடங்களாக நாம் இந்தப் பிரச்சினைக்காக ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டோம். யுத்தம் செய்தோம். பல உயிர்களை இழந்தோம்.

யுத்தம் முடிபுற்ற இன்றைய நிலையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவது அவசியம். ஏனைய நாடுகள் துரித கதியில் முன்னேறிக் கொண்டிருக்கும்போது நாம் இந்தப் பிரச்சினையால் பின்னோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

எனவே இந்த நிலை குறித்து அனைத்துக் கட்சிகளும் சிந்தித்து செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (ந-6-11)

# இலங்கை-பாக். மோதும் 2-வது இருபது-20 இன்று

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 2 இருபது -20 போட்டிகள், 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றவுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான முதலாவது இருபது-20 போட்டி நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது.

இதில் இலங்கை அணி வெற்றி பெற்ற நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது இருபது-20 போட்டி இன்று அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசக் கிரிக்கெட் மைதானத் தில் நடைபெறவு ள்ளது.

இதேவேளை, ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் 7ஆம், 9ஆம், 13ஆம், 16ஆம்,18ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

டெஸ்ட் தொடரில் முதல் போட்டி யூன் 22- 26ஆம் திகதி வரை காலி சர்வதேச மைதானத்திலும், இரண்டாவது போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத் தில் யூன் 30ஆம் திகதி முதல் யூலை 4ஆம் திகதி வரையும், மூன்றாவது போட்டி யூலை 8ஆம் திகதி முதல் யூலை 12 ஆம் திகதி வரை பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்திலும் இடம்பெறவுள்ளது.

# கால்பந்திலும் களமிறங்கும் ஷாருக்கான்

ஐ.பி.எல். தொடரில் நடிகர் ஷாருக் கானுக்கு சொந்தமான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சம்பியன் பட்டத்தை வென்றது. இதனை அடுத்து ஷாருக்கான் தற்போது கால் பந்து போட்டியிலும் தனது கவனத்தை திருப்பியுள்ளார்.

இந்தியாவின் கழக அணிகளில் முன்னணியில் உள்ளது டெம்போ. கடந்த 2007-08 முதல் நடந்து வரும் ஐ-லீக் கால்பந்து தொடரில் மூன்று முறை சாம்பியன் பட்டம் வென்றது.

இந்த அணியின் 50 சத விகித பங்குகளை வாங்க, ஷாருக்கான் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார்.

இது குறித்து டெம்போ அணியின் உரிமையாளர் சீனிவாஸ் கூறுகையில், டெம்போ அணியில் முதலீடு செய்வது தொடர்பாக எங்களுடன் ஷாருக்கான் பேசியது உண்மைதான்.

இது தொடர்பாக பேச்சுவார்த்தை நன்றாக சென்று கொண்டுள்ளது என்றும் விரைவில் ஒப்பந்தம் முடிபாகும் என்று நம்புகிறேன் எனவும் தெரிவித்தார்.

வலி மேற்கில் உங்களுடன்

A/L - 2014

புவியியல் ⊢ N. பாபு

♦ பிற்ஸ்மன் - மானிப்பாய் (சனி, ஞாயிறு) - 1.00 pm

♦ றோயல் அக்கடமி - சங்கானை (திங்கள், புதன்) - 3.15 pm

❖ புதிய மாணவர்களுக்கு ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.

❖ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(8556)

## பள்ளிகளின் விபரங்களை...

பிரிவு (சி.ஐ.டி) முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்திடம் கோரியுள்ளது. இதனால் முஸ்லிம் சமூகம் கடும் அதிர்ச்சியடைந்துள்ளது.

முஸ்லிம் சமய கலாசார திணைக்களப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்ட குற்றப் புலனாய்வுப் பிரிவு உயர் அதிகாரி ஒருவரே இவ் விபரங்களைக் கோரியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இலங்கையில் உள்ள பள்ளிவாசல்கள் தொடர்பில் பூரண அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர், இதற்கு சில காலங்களுக்கு முன்பும் தொடர்பு கொண்டு நாட்டிலுள்ள புதிய மதரஸாக்களின் விபரங்கள், முஸ்லிம் அமைப்புக்கள் மற்றும் இயக்கங்களின் விபரங்கள் குறித்து தகவல் தருமாறு கோரிக்கை விடுத்தன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, பள்ளிவாசல்களின் விபரங்களை அவசர அவசரமாக ஆவணப்படுத்தும் பணியில் இறங்கியுள்ள முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம் இன்னும்ஒரிருநாட்களுக்குள் மேற்படி பள்ளிவாசல் விபரங்களைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் கையளிக்கவுள்ளது.(ந-6-1)

## யாழ்ப்பாண மத்திய...

சென்றதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது உயிரிழந்த மாணவனுடன் குளிக்கச் சென்ற ஏனைய இரண்டு மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

நீச்சல் தடாகத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்றுவந்த யோகேஸ்வரன் கிரிதரன் என்ற மாணவனின் உயிரிழப்பு தொடர்பாக தாம் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு மாணவன் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தை உறுதி செய்த யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எல்.பெரேரா, மாணவனின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

இதேவேளை உயிரிழந்த மாணவன் கிரிதரனின் தந்தையான யோகேஸ்வரன் வவுனியா விவசாயத் திணைக்களத்தில் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-4-6-266)

## மருதனார்மடத்தில்...

உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கணித பாடம் கற்பித்து வந்த தெல்லிப்பழை கொல்லங்கலட்டியினைச் சேர்ந்தவரும் உடுவில் கிழக்கு உடுவிலில் வசித்து வந்தவருமான மூன்று பிள்ளைகளின் தந்தையான வீரசிங்கம் ஜெகதீஸ்வரன் (வயது-32) என்பவரேயாவார்.

இவரது பிறந்த தினம் நேற்று என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருவதோடு குறித்த பேருந்துச் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

பயணிகளுடன் வேகமாக பயணித்ததனாலேயே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் கைது செய்யப்பட்ட சாரதியிடமும் பேருந்தில் பயணித்த பயணிகளிடமும் விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகவும் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த ஆசிரியர் மோட்டார் சைக்கிளை செலுத்திவந்தபோது தலைக்கவசம் அணிந்திருந்தபோதும் இவ்விபத்தில் தலைக்கவசம் வெடித்து தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ந-4-6)

கண்ணீர் அஞ்சலி

அமரர்

வீரசிங்கம் ஜெகதீஸ்வரன் (ஜெகன்)

(யாழ்.மத்திய கல்லூரி)



எமது நிறுவன சிரேஷ்ட கணித ஆசிரியர் வீ.ஜெகதீஸ்வரன் (ஜெகன்) அவர்கள் அகால மரணமடைந்த செய்தி கேட்டு மிகவும் துயரடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எடிசன் அக்கடமி

எடிசன் அக்கடமி

முக்கிய அறிவித்தல்

எமது நிறுவனத்தின் சிரேஷ்ட கணித ஆசிரியர்

திரு. வீ. ஜெகதீஸ்வரன்

அவர்கள் அகால மரணமடைந்ததையிட்டு அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இன்றும் நாளையும் வகுப்புக்கள் யாவும் நடைபெறமாட்டாது என்பதனை மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களுக்கு அறியத் தருகின்றோம்.

முக்கிய குறிப்பு:-

இன்று பி.ப. 2.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெறவிருப்பதால் இதில் கலந்து கொள்ளவிருக்கும் மாணவர்களுக்கு எமது நிறுவனத்திலிருந்து போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் எடிசன் : மு.ப.10.30 மணி

கொக்குவில் எடிசன் : 11.00 மணிக்கு மாணவர்களை சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

விபரங்களுக்கு :- 0777570593

நிர்வாகி

எடிசன் அக்கடமி

(C-144)

# மனித உரிமை மீறல் நீடிப்பதால்...

இலங்கையில் மனிதவுரிமை மீறல்களுக்கு உரிய நீதி கிடைப்பதில்லை. குற்றங்கள் தொடர்பான நீதி முறை சீரற்றுள்ளது. இந்நிலையில் பொதுமக்களின் பாதுகாப்பு இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

போர் முடிபடைந்து மூன்று ஆண்டுகளில் இலங்கை மக்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்தியிருக்க முடியும். எனினும், அதனை இலங்கை நிறைவேற்றவில்லை என யோலண்டா தெரிவித்தார்.

போரில் முக்கிய பங்கை வகித்த சரத் பொன்சேகா தற்போது விடுதலையாகியுள்ளார். அவரும்போர்க்குற்றச் சாட்டுக்களை நிராகரித்துள்ளார்.

இந்த நிலையில், தொடர்ந்தும் சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச போர்க் குற்ற விசாரணையை கோருவதில் என்ன அர்த்தம் என்று போஸ்டரிடம் கேட்டபோது,

இலங்கையில் உள்ளக நீதி விசாரணைகள் செயலிழந்துள்ளன. எனவேதான் சர்வதேச விசாரணை கோரப்படுகிறது.

குறிப்பாக இலங்கையின் பொலிஸ் ஆணைக்குழு கூட இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்றது.

போர் முடிபடைந்த பின்னரும் கடந்த சில மாதங்களில் காணாமல்போதல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. இவையாவும் இலங்கையின் பாதுகாப்பு படையினரும் ஆயுதக் குழுக்களும் மேற்கொள்ளும் செயல்கள் என்று குற்றம் சுமத்தப்படுகின்றன.

உதாரணமாக முன்னிலை சோஷலிச கட்சியின் லலித்குமார் மற்றும் குகன் ஆகியோர் கடத்தப்பட்டு காணாமல்போயுள்ளமை தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதனாலேயே சர்வதேச விசாரணைகள் அவசியமாகின்றது. இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் போர்க் குற்றத்தில் ஈடுபட்டார் என்று கூறியமைக்காகவே சரத் பொன்சேகா சிறை வைக்கப்பட்டார். எனினும் அவர் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவின் விடுதலை என்பதைக் காட்டிலும், போரின் போது என்ன நடந்தது என்பதை அறிய வேண்டியதே முக்கியமானது.

இலங்கையின் அரச நிர்வாகம் உள்ளூரில் நீதியை நிலைநாட்டுவதை விட்டு விட்டு குறுக்கு வழிகளில் செயற்படுகின்றது.

இதற்கு உதாரணமாக அண்மையில், திருகோணமலையில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் ஒன்றின் பின்னர் பலர் படையினரால் கைது செய்யப்பட்ட சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

இதன் போது கைது செய்யப்பட்டவர்கள் எங்கு வைக்கப்பட்டிருந்தார்கள் என்று அவர்களின் குடும்பங்களுக்கு தேடக்கூடியவழியைக் கூட இலங்கையின் படைத்தரப்பு ஏற்படுத்தியிருக்கவில்லை.

இந்த நிலையில் இலங்கை அரசாங்கம் நடைமுறையில் உள்ள குற்றவியல் முறைகளுக்கு மதிப்பளிக்காமல் குறுக்கு வழிகளை கையாள்வதை காணமுடிகின்றது என்று சர்வதேச மன்னிப்பு சபையின் இலங்கைக்கான நிபுணர் யோலண்டா போஸ்டர் குற்றம் சுமத்தியுள்ளார். (ந-6-1)


யாழ் நகரில் .....
உங்கள் அனைத்து வைத்திய சேவைகளுக்கும் ......
சாந்தம் வைத்தியசாலை
வெளிநோயாளர் பிரிவு (OPD)
உள்நோயாளர் பிரிவு (IPD)
ஆய்வுகூட வசதி (Laboratory)
சகல இரத்த மற்றும் சிறுநீர் பரிசோதனைகளும் உடனடியாகச் செய்து கொள்ளலாம்!
ECG, Scanning வசதி
Home Visit நடமாட முடியாத நோயாளர்களுக்கு வீட்டிற்கு வந்து சிகிச்சை அளிக்கப்படும்.
விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனை
நீரிழிவு நோயாளர்களுக்கான இலவச ஆலோசனை!
வெகுவிரைவில் சத்திர சிகிச்சை, மகப்பேற்று விடுதி ஆரம்பம்!
இல. 126, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
021 567 6577

கார் விற்பனைக்கு
KP-XXXX
MARUTI SUZUKI, ESTILO VXI.
0777448689
(8538)

கணக்குப் பதிவாளர், ஆய்வாளர் தேவை
யாழ்ப்பாணம் நகரில் இயங்கும் வர்த்தக நிறுவனத்திற்கு கணக்குப் பதிவாளர்கள், ஆய்வாளர்கள் தேவை. கணனி அனுபவம் உடையோர் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
உங்கள் விண்ணப்பங்களை 05.06.2012 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்ப வேண்டிய முகவரி
விளம்பர இல. : C-100
மே/பா வலம்புரி,
இல. 03, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(C-100)

மாதம் 50,000 ரூபா வருமானத்துடன்...
ஹோட்டல் பயிற்சிநெறி & தொழில்வாய்ப்பு
உணவு, தங்குமிட வசதி இலவசம்!





SkillsMalaysia
City & Guilds
UEL University of East London
aets
பயிற்சிநெறி முடிவில்
மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்ரேலியா, சீனாவில் வேலைவாய்ப்பு!
- 9ம் வகுப்பு வரையில் படித்த, 18-45 வயதுக்கு இடைப்பட்ட எவரும் இணைந்துகொள்ளலாம்.
- விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து ஒரு மாதத்தில் பயண உத்தரவாதம்!
- நேரடியாக மலேசியாவுக்கு அழைத்துச்செல்லப்பட்டு. பயிற்சிநெறி முடியும் வரையில் கண்காணிப்பு.
- கணவன், மனைவி ஒன்றாகச் செல்ல முடியும்.
இன்னும் சொற்ப வெற்றிடங்களே உள்ளன
ஏமாற்றத்தைத் தவிர்க்க
உடனே சான்றிதழ்கள், கடவுச்சீட்டுடன் விரையுங்கள்
(பெற்றோர் / பாதுகாவலருடன் வரவும்)
ஜூன் 2, 3ம் திகதிகளில் மட்டக்களப்பு, திருகோணமலையில் நடாத்தப்படவிருந்த கருத்தரங்கு, 17ம், 18ம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறும்.
S MEDIA
சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டல் பிரிவு
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 8060 நேரடி: 0773 616 798

இலவச வகுப்பும் Video DVD யும்
ஆசிரியர்கள், அரச அலுவலர்கள், நிறுவன அலுவலர்கள் வங்கியாளர்கள்
அனைவருக்கும் ஆங்கிலத்தின் அனைத்து அமைப்புக்களும் அடங்கிய
வீட்டிலிருந்து கற்பதற்கான Video DVD முற்றிலும் இலவசம்
பிரிவு 1 : 03.06.2012 ஞாயிறு காலை 9.00 – 10.00
பிரிவு 2 : 03.06.2012 ஞாயிறு மாலை 3.00 – 4.00
பிரிவு 3 : 04.06.2012 திங்கள் காலை 9.00 – 10.00
பிரிவு 4 : 04.06.2012 திங்கள் மாலை 3.00 – 4.00
( ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம் )
MyWay Language Research Institute
182, Stanley Road, Jaffna. 077 33 63 456

நாய் குட்டிகள் விற்பனைக்கு
நோய்த்தடுப்பு மருந்துகள் கொடுக்கப்பட்ட 2 மாதங்கள் நிரம்பிய நல்ல இன பெண் அல்சேசியன் நாய்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. மதியம் 1.00 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்.
இ. மனோகரன்
மாரியம்மன் கோவிலடி,
கூழாவடி கிழக்கு ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.
(8553)

வீடு வாடகைக்கு உண்டு
ஏழு அறைகள், வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய சகல வசதிகளையும் கொண்ட வீடு, தனியார் நிறுவனம் மற்றும் அரச நிறுவனங்களுக்கும் வாடகைக்கு விடப்படும்.
(கச்சேரி அருகில் உண்டு)
தொடர்புகளுக்கு - 0772566461
(8548)

கடைக் கட்டிடங்கள் விற்பனைக்கு
பரந்தன், யாழ்ப்பாணம்- கண்டி வீதி, பரந்தன் சந்தியிலிருந்து முல்லைத் தீவு வீதியில் 150 யார் தூரத்திற்குள் ஒவ்வொன்றும் பதினைந்து அடி அகலமும் நூற்றி ஐந்து அடி நீளமும் கொண்ட நான்கு கடைகள் தனித் தனியாகவோ மொத்தமாகவோ விற்பனைக்கு உண்டு.
மேலதிக தொடர்புகளுக்கு:
K. முருகன் : 0775272093
P. சிங்கம் : 0776027324, 0212280020
(C-142)

தென்னிந்திய இசை நிகழ்ச்சியை உங்கள் ஆலயங்களிலோ அல்லது பொது இடங்களிலோ நடாத்த விரும்புகிறீர்களா?
விஜய் TV சுப்பர் சிங்கஸ் வெற்றியாளர்களான சின்ன சுட்டி ஸ்ரீகாந், கௌசிக், பிரபல சினிமா பாடகி ஓட்டோ கிராப் திரைப்பட புகழ் ரெஸ்மி மற்றும் திரை இசை பாடகி நித்தியஸ்ரீ மகாதேவன் ஆகியோர் இவ்வாரம் யாழ் வருகையை முன்னிட்டு உங்களின் பிரதேசங்களில் இசை நிகழ்ச்சிகளையும் மற்றும் பிரபல பாடகர் உன்னி கிருஷ்ணனின் இசை நிகழ்வுகளையும் ஏனைய பிரபல தென்னிந்திய கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளின் தொடர்புகளுக்கும்
CAC Event Management
0771827274
(8546)

Diploma courses
MS Office, DTP, Web Design, Hardware with Networking, Accounting, Autocad-2D &3D, Multimedia
மேலதிக விபரங்களுக்கு தயக்கம் இன்றி MCAI CAMPUSடன் தொடர்பு கொள்ளுங்கள்
MCAI CAMPUS
SMS Your name & Course to 775520940 & Get Schol.
243, Adiyapatham Road, Kalviyankadu
Www.mcaicampus.info
facebook: mcaicampus
Qualified Lectures panel, Passing Guarantee, 12 Years Experience
Supported by Jaffna Computer Society

Jaffna College Institute of Technology
Established in 1974
பின்வரும் பாடநெறிகளுக்கு உடனடியாக விண்ணப்பிக்கவும்.
Bachelor's of Information Technology (BIT)
(External Degree School of Computing, University of Colombo)
Computer Programming & Data Processing- 1 Year
System Analyzing & Design, Data base Management System, Fundamentals of Computer Technology, Data Processing, Java, C++, English, Oracle, Application Packages, Visual Basic VB.net,
Certificate Craft Course (தமிழ்மொழி மூலம்) மாதம் முழுநேரம்
G.C.E.(O/L) வரை படித்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்..
1. Machineshop Practice
2. Motor Cycle and light Engine Mechanism (மோட்டார் வாகன திருத்துதல்)
3. Refrigeration & Air Conditioning Mechanic
4. Mobile Phone Servicing & Repair Course
5. Electrical and Electronic
6. Radio, TV & Electronic Servicing Technology
7. Aluminum Fitting & Fabrication
8. Domestic Electrician
"Tertiary and Vocational Education Commission" ( (TVEC) Under P25/0014)
Facilities
Individual attention by qualified Lecturer
Easy Installment, More Practical hours,
Modern Lab, Auditorium
Hostel, library & Sports, etc.
Director,
Jaffna College Institute of Technology- Vaddukoddai
T.P No.021 321 3139 / 021 222 8275
E-Mail jcit@sltnet.lk www.jcit.lk
(C-118)

மானிப்பாய் – சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான இரதோற்சவ விழா சிறப்புற வாழ்த்துகிறோம்






பம்ல் சுப்பர் ஸ்பொட்
யாழ் வீதி, மானிப்பாய்.
(C-138)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.